"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவஎக்காளம்

சார்லஸ் ஹட்டன் ஸ்பர்ஜன்

1834 - 1892

19 ஆம் நூற்றாண்டில் டி.எல்.மூடி எவ்வண்ணமாக அமெரிக்காவில் தனது அன்பின் ஆண்டவர் இயேசுவுக்காக எரிந்து ஜொலித்து பிரகாசித்தாரோ அவ்வாறே சார்லஸ் ஹட்டன் ஸ்பர்ஜன், இங்கிலாந்து தேசத்தில் தன் நேச இரட்சகர் இயேசுவுக்காக ஒளி வீசிப் பிரகாசித்தார். ஸ்பர்ஜன் எந்த ஒரு வேதாகம கல்லூரிக்கும் சென்று வேதசாஸ்திரம் படித்தவரல்ல. எனினும் தனது 21 ஆம் வயதில் லண்டன் மாநகரத்தில் மிகவும்

Vol. No. 38 ஜனுவரி - ஜூலை 2005 No. 1 to 7

பிரசித்திபெற்ற பிரசங்கியானார். லண்டனிலுள்ள எக்ஸ்டர் ஹாலிலும், சர்ரே மியூசிக் ஹாலிலும் 10000 க்கும் அதிகமான மக்கள் கூட்டங்களில் அவர் பேசியிருக்கின்றார். அதின் பின்னர் மெட்ரோ போலிட்டன் தேவாலயத்தை அவர் தோற்றுவித்ததின் பின்னர் ஒவ்வொரு ஓய்வு நாளிலும் பல்லாயிரம் மக்களுக்கு தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கிக்கும் பிரசங்கியாக 40 நீண்ட ஆண்டுகள் தேவனுக்கு ஊழியம் செய்தார்.

தனது பொறுப்பான குருவானவர் ஊழியத்தின் மத்தியில் அவர் ஓய்வு நாள் பள்ளிகளையும், தேவாலயங்களையும் தோற்றுவித்து நடத்தினார். அநாதை குழந்தைகளுக்காக ஒரு அநாதை இல்லத்தையும், தேவ ஊழியர்கள் இறையியல் கற்பதற்காக ஒரு வேதாகம கல்லூரியையும் அவர் ஸ்தாபித்து நடத்தி வந்தார். ''பட்டயமும், மண்வெட்டியும்'' (Sword and the Trowel) என்ற பிரபல்யமான ஆவிக்குரிய மாதந்திர கிறிஸ்தவ பத்திரிக்கையை தனது மரணபரியந்தம், அதாவது 25 ஆண்டு காலமாக அவர் அச்சிட்டு வெளியிட்டார். அவர் எழுதிய கிறிஸ்தவ புத்தகங்கள் ஏராளம் ஏராளம். நல்ல தரமான கிறிஸ்தவ துண்டுப் பிரதிகளையும் இலட்சாதி இலட்சம் கிறிஸ்தவ பிரசுரங்களையும் அவர் பிரசுரித்து உலகமெங்கும் விநியோகித்தார். அவர் பிரசிங்கித்த ஜீவனுள்ள பிரசங்கங்கள் புத்தகங்களாக அச்சடிக்கப்பட்டு கிறிஸ்தவ உலகமெங்கும் இன்றும் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகத்தின் பல்வேறு மொழிகளிலும் அவைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஸ்பர்ஜன் தனது 16 ஆம் வயதில் தன்னைத் தமது பரிசுத்த நாம மகிமைக்காக தெரிந்து கொண்ட தன் அன்பின் ஆண்டவர் இயேசுவுக்காக மிகுந்த உண்மையோடும், உத்தமத்தோடும் இராப்பகலாக அயராது பாடுபட்டு உழைத்து அநேக ஆயிரம் மக்களை ஆண்டவரண்டை வழிநடத்தினார். அந்த மாபெரும் தேவ மனிதரின் வாழ்க்கைச் சரித்திரத்தின் இரத்தினச் சுருக்கத்தை கீழே உங்களுக்கு ஜெபத்தோடு மொழிபெயர்த்து தருகின்றேன். ஜெபநிலையில் நீங்களும் அதை வாசித்து உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அனுகூலமாக்கிக் கொள்ளுங்கள்.

ஸ்பர்ஜனின் பிறப்பு

இங்கிலாந்து தேசத்திலுள்ள எஸ்ஸக்ஸ் என்ற குக்கிராமத்தில் கெல்விடன் என்ற பகுதியிலுள்ள பண்டைய காலத்து வீட்டில் இந்தியாவிலுள்ள மாபெரும் மிஷனரி வில்லியம் கேரி என்பவர் இறந்த 10

நாட்களில் அதாவது 1834 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் சார்லஸ் ஹட்டன் ஸ்பர்ஜன் பிறந்தார். ஸ்பர்ஜனின் தாயாருடைய பெயர் எலிசா ஜார்விஸ் என்பதாகும். அந்த அம்மையாருக்கு திருமணமாகும்போது 19 வயதுக்கும் சற்றே கூடுதலாக இருக்கும். அவருடைய தந்தை தாமஸ் ஸ்பர்ஜனுக்கு அப்பொழுது 24 வயதாக இருந்தது. அவருடைய பெற்றோருக்கு 17 பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் 9 பேர் சிசு பிரயாங்களிலேயே மரணம் அடைந்துவிட்டனர். ஸ்பர்ஜன் உலகப் புகழ்பெற்ற பிரசங்கியாராக தேவனால் முன் குறிக்கப்பட்டுவிட்டார். அதின் முன் அடையாளங்கள் அவர் சிறுவனாக இருந்த நாட்களிலிருந்தே வெளி உலகுக்குத் தெரிய ஆரம்பித்துவிட்டது. இங்கிலாந்து தேசத்திலுள்ள மற்ற அநேகம் பையன்களைப் போன்று அவர் சிறுவனாக இருக்கும்போதே தன்னுடைய பெற்றோரின் கோல் ஷெஸ்டர் என்ற இடத்திலிருந்த வீட்டில் தனது சகோதரர்களையும், சகோதரிகளையும் தனக்கு முன்பாகக் கூடி வரச் செய்து தேவாலயத்தில் நடக்கும் ஆராதனைகளைப் போன்ற ஆராதனைகளை அரங்கேற்றம் செய்து பிரசங்கிப்பார்.

எனது குழந்தைப் பருவ நினைவுகள்

(1)

எனது தாத்தா பாட்டி வாழ்ந்து வந்த ஸ்டாம்போர்ன் என்ற இடத்தில் நான் செலவிட்ட எனது அநேக விடுமுறை நாட்களில் ஒரு தடவை நான் அவர்களுடன் செலவிட்ட லீவு நாட்களை என்னால் மறக்கவியலாது. தேவ மனிதர் ஐசக் வாட்ஸ் என்பவர் எழுதிய ஞானப்பாடல்கள் எனது தாத்தாவுக்கு மிகவும் விருப்பமாகும். அந்தப் பாடல்களை நான் மனப்பாடமாகப் படிக்கவும் அப்படி மனப்பாடமாக படிக்கின்ற ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பென்னி நாணயம் எனக்கு வெகுமதியாகத் தருவதாக எனது பாட்டி என்னிடம் சொன்னார்கள். பணம் சம்பாதிப்பதற்கு மிகுந்த இனிமையும், எளிமையுமான வழி எனக்கு கிடைத்ததை எண்ணி நான் மனம் மகிழ்ந்து அநேகம் பாடல்களை நான் மனப்பாடமாகப் படித்து முடித்து பாட்டியிடம் சொல்லி நிறைய காசு சம்பாதித்தேன். நான் விரைவாக அவைகளைப் படிப்பதைக் கண்ட எனது பாட்டியம்மா பாடல் ஒன்றுக்கு இனி அரை பென்னி நாணயம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதிலும் நான் துரிதம் காண்பிக்கவே ஒரு பார்திங் நாணயமாக அதைக் குறைத்தார்கள். இந்தச் சமயம் எலிகளின் தொல்லையால் கஷ்டப்பட்ட எனது தாத்தா நான் கொல்லுகின்ற 12 எலிகளுக்கு ஒரு ஷில்லிங் நாணயம் தருவதாக எனக்கு உறுதி

கொடுத்தார்கள். அதினால் ஞானப்பாடல்களை மனப்பாடமாகப் படிப்பதிலிருந்து எலிகளைக் கொல்லும் வேலைக்குத் திரும்பினேன். அதின் மூலம் எனக்கு நிறைய காசு கிடைத்தது. அந்த வேலையின் மூலம் அப்பொழுது எனக்கு நிறைய பணம் கிடைத்தபோதினும் நான் மனப்பாடமாக ஒப்புவித்த பாடல்களின் மூலமாக நான் அடைந்த ஞான நன்மை மிகப் பெரிதாகும். அது இன்று வரை என் உள்ளத்தில் அப்படியே நிலைத்து நிற்கின்றது. எனது பிரசங்கங்களின் போது அன்று நான் பாராமல் படித்த அந்த ஞானப்பாடல்களின் அடிகளையும் குறிப்பிட்டு மக்களுக்குப் பிரசிங்கிக்கின்றேன். அது மக்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்கின்றது. கர்த்தருக்கே மகிமை.

(2)

நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது எங்களுடைய தோட்டத்திலுள்ள நிலத்தில் விதைகளை முளைக்கும்படியாக ஊன்றுவோம். அப்படி ஊன்றிய விதைகள் முளைத்திருக்கின்றதா என்று அடுத்த நாளிலேயே நான் தோட்டத்திற்குச் சென்று மண்ணைக் கிளறி விதையைப் பார்ப்பேன். இப்படி ஒவ்வொரு நாளும் நான் மண்ணைத் தோண்டி விதைகளைப் பார்த்தவனாக இருப்பேன். அந்தச் செயல் ''சிறு பிள்ளைத்தனமானது'' என்று நீங்கள் கட்டாயம் சொல்லுவீர்கள். அதை அப்படியே நானும் ஒத்துக் கொள்ளுகின்றேன்.

ஆனால் நீங்களும் அப்படித்தான் தேவனை நோக்கி உங்கள் காரியங்களுக்காக ஜெபம் ஏறெடுத்துவிட்டு தேவன் தம்முடைய வேளையில் அதற்கான பதிலைத் தருவார் என்று விசுவாசித்துக் காத்திராமல் உங்கள் இஷ்டம்போல உடனே அதற்கு உத்தரவு கொடுக்கும்படியாக அவரை நீங்கள் எதிர்நோக்குகின்றீர்கள் அல்லவா?

(3)

நாங்கள் பள்ளிக்குச் செல்லும்போது எங்கள் சிலேட்டுகளில் வீடு, குதிரை போன்றவைகளை வரைந்து அவைகளுக்கு கீழாக ''வீடு'' ''குதிரை'' என்று எழுதிவிடுவோம். நாங்கள் வரைந்த குதிரையானது வீட்டைப் போல இருக்கின்றதே என்று அதைப் பார்க்கின்றவர்கள் எண்ணிக்கொள்ளக்கூடாது என்பதற்காக நாங்கள் அப்படி எழுதுவோம். அப்படிப்போலவே இன்று கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்தவர்களுக்குரிய பரிசுத்த குணநலன்கள் கொண்டவர்கள் அல்லவே அல்ல என்று மற்றவர்களால் அடையாளம் கண்டு கொள்ளுவதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும்படியாக தங்கள்

கழுத்தைச் சுற்றிலும் ''கிறிஸ்தவர்கள்'' என்ற அடையாள அட்டையைத் தொங்கவிட்டுக் கொண்டு அலைகின்றனர். மற்றபடி நாம் அவர்களை அவர்கள் சீர்கெட்ட வாழ்க்கையின் காரியங்களைக் கொண்டு ''துன்மார்க்கர்'' ''பாவிகள்'' என்று அழைத்துவிடுவோம் அல்லவா?

(4)

நான் மிகவும் சிறுவனாகப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது சிலேட்டில் எழுதுகின்ற ஒரு சிலேட் பென்சில் (எழுதுகோல்) எனக்குத் தேவைப்பட்டது. அடிக்கடி நான் சிலேட் பென்சில்களைத் தொலைத்து வந்த காரணத்தால் அதற்காக வீட்டில் அதைக் கேட்பதற்கும் நான் பயப்பட்டு பாட்டியம்மா பியர்சன் வைத்திருக்கும் பெட்டிக் கடையில் ஒரு சிலேட் பென்சில் கடனுக்காக வாங்கிவிடலாம் என்று மனதில் எண்ணினேன். வருகிற கிறிஸ்மஸ் நாட்களில் நமக்குக் கிடைக்கும் ஒரு பென்னி அல்லது நமது அதிர்ஷ்டம் 6 பென்னிகளைக் கொண்ட ஒரு வெள்ளிப் பணம் கிடைத்துவிட்டால் அதிலிருந்து நமது கடனை வெகு சுலபமாக அடைத்துவிடலாம் என்று நான் என் மனதில் எண்ணிக்கொண்டு கடைக்குச் சென்று ஒரு சிலேட் பென்சிலுக்காக கடன்பட்டுவிட்டேன். நான் பட்ட கடன் ஒரு பார்த்திங் மட்டுமேதான். இதற்கு முன்பாக நான் எவரிடமும் கடன்பட்டதே கிடையாது. அந்தச் செயல் என் உள்ளத்தை அலைக்கழிப்பதாகவும், ஏதோ நான் ஒரு பெரிய தவறு செய்துவிட்டதான ஒரு குற்ற உணர்வையும் எனக்குள் ஏற்படுத்திற்று. நான் கடனுக்காக ஒரு சிலேட் பென்சில் வாங்கியிருக்கின்றேன் என்ற செய்தியை யாரோ ஒரு சின்னப் பறவையோ அல்லது யாரோ ஒரு தேவ தூதனோ எனது தந்தையின் காதிற்குள் கூறிவிட்டார்கள். அவ்வளவுதான், உடனே அவர்கள் என்னண்டை ஓடி வந்து எனது மண்டையில் ஒரு அடி கொடுத்து ஒரு பெரிய பிரசங்கமே அன்று எனக்கு செய்துவிட்டார்கள். கடன் வாங்குவது திருடுவது போன்ற கொடும் பாவத்திற்குச் சமானமாகும். இன்று ஒரு பார்திங் கடன்படலாம். நாளை இதே அனுபவம் 100 பவுண்டுகள் கடன்பட்டுக் கொடுக்க முடியாத காரணத்தால் தீய வழிகளுக்குச் சென்று சிறைக்கூடத்திற்கு அது வழிநடத்திச் செல்லும். அத்துடன் நமது கண்ணியமான குடும்பத்திற்கு அது அவமானத்தைக் கொண்டு வரும். அந்தப் பிரசங்கத்தை நான் இன்றும் எனது காதுகளில் கேட்கின்றவனாக இருக்கின்றேன்.

அந்தக் கணமே தனது ராணுவத்துக்குத் துரோகம் செய்த ஒரு போர் வீரன் வெட்கத்தோடு தனது பாளையத்துக்குத் திரும்பிச்

செல்லுபவனைப்போன்று நான் கோவென்று தெரு வழியாக அழுது கொண்டே எனது கடனை திருப்பிச் செலுத்தச் சென்றேன். அநேக எச்சரிப்புகளின் மத்தியில் எனது தகப்பனார் அந்த ஒரு பார்த்திங்கை எனக்குக் கொடுத்திருந்தார். நான் கடன்பட்ட காரியம் அனைவருக்கும் தெரிந்துவிட்டது என்று நான் பயந்து நடுங்கினேன். நான் போய் அந்தக் கடனை செலுத்தியபோது என் உள்ளம் கூண்டிலிருந்து விடுபட்ட பறவையைப் போல எனக்குள் சுதந்திரம் அடைந்தது. அந்த நாளில் நான் எந்த ஒரு சூழ்நிலையிலும் எவருக்கும் கடன்படமாட்டேன் என்ற உறுதியான ஒரு தீர்மானம் எடுத்தேன். அதை இந்த நாள் வரைக்கும் தேவ பெலத்தால் மிகவும் உறுதியாகக் கடைப்பிடித்து வருகின்றேன். மார்ட்டின் லூத்தர், போப் ஆண்டவரை எப்படி வெறுத்துத் தள்ளினாரோ அதேபோன்று நானும் கடன்படுவதை வெறுத்துத் தள்ளுகின்றேன். அதுதான் நான் பட்ட முதலும் கடைசி கடனுமாகும். அன்பின் கர்த்தர் எனது பரிசுத்த தகப்பனாரை ஆசீர்வதிப்பாராக.

(5)

நான் ஆறு வயது சிறுவனாக இருந்தபோது எங்கள் குடும்ப ஜெபத்தில் என்னை தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்படியாகச் சொல்லுவார்கள். அப்படி நான் ஒரு தடவை வாசித்த போது வெளிப்படுத்தின விசேஷத்தில் பாதாளக் குழி **(The Bottomless Pit)** *(வெளி 9 :1)* என்ற வார்த்தையைக் கண்டு எனது அருகிலிருந்த தாத்தாவிடம் அது குறித்துக் கேட்டேன். ‘‘ பூ ....பூ ....குழந்தாய் தொடர்ந்து வாசி’’ என்று சொல்லி எனது கேள்விக்கு பதில் சொல்லாமல் வேண்டுமென்றே இருந்துவிட்டார்கள். நானும் காலையிலும், மாலையிலும் அதே பகுதியை எடுத்து வாசித்து அவர்களிடம் தொடர்ந்து அதற்கு விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தேன்.

எனது குழந்தை உள்ளம் பயத்தால் திகிலடையத்தக்கதாக தாத்தா ஒரு நாள் அதற்கு விளக்கம் கொடுத்தார்கள். பாதாளக் குழி என்றால் அது ஆழமான ஒரு இருண்ட குழியாகும். அதில் போடப்படும் நஷ்டப்பட்ட ஆத்துமா வெகு வேகமாக அதில் விழும். அந்த ஆத்துமா குழியிலிருந்து மேலே பார்க்கும்போது அந்தக் குழியின் முகப்பிலுள்ள ஒளி தெரிந்து கொண்டே இருக்கும். அந்த ஆத்துமா அந்தப் பாதாளக் குழியின் அடியில் வேகமாகச் செல்லச் செல்ல குழியின் முகப்பு ஒளி கொஞ்சம் கொஞ்சமாக பூரணமாக மறைந்து இருளுக்குள் அது சென்று கொண்டே இருக்கும். ஒரு ஆயிரம்

ஆண்டுகள் கடந்து சென்ற போதினும் அந்த ஆத்துமா குழிக்குள் இன்னும் போய்க்கொண்டேயிருக்கும். 10 லட்சம் ஆண்டுகளானாலும் அந்த ஆத்துமா இன்னும் அடித்தளம் வந்து சேராமல் இன்னும் தனது பிரயாணத்திலேயே இருக்கும். ஆம், அந்த ஆத்துமா அடித்தளம் இல்லாத அந்த குழிக்குள் காலாகாலங்களாக ஒரு முடிவு வந்தது என்ற நம்பிக்கை இல்லாமல் சென்று கொண்டே இருக்கும் என்று கூறினார். தாத்தாவின் அந்த விளக்கமான வார்த்தைகள் என்னைக் கலங்கப்பண்ணுவதாக இருந்தது.

(6)

எனது தாத்தா குருவானவராக பணிசெய்து கொண்டிருந்த ஸ்டாம்போர்ன் என்ற இடத்திலுள்ள திருச்சபையில் ரோட்ஸ் என்ற ஒருவர் திருச்சபை அங்கத்தினராக இருந்தார். அவர் ஒரு குடிகாரர். அத்துடன் தனது புகையிலை குழலையும் நன்கு பயன்படுத்தி புகைபிடிப்பார். ரோட்ஸ் என்பவரின் தேவனுக்குப் பிரியமற்ற நடபடிகளால் எனது தாத்தா மிகவும் மனமடிவானார்கள். அந்த மனிதரின் ஆத்துமத்தின் நிலை குறித்து அவர்கள் அடிக்கடி பெருமூச்செறிவார்கள்.

தனது தாத்தாவின் கவலையை உணர்ந்த ஸ்பர்ஜன் திடீரென ஒரு நாள் அவருக்கு முன்பாக வந்து நின்று ''நான் அந்தக் கிழவர் ரோட்ஸ் ஐ கொல்லுவேன், ஆம் அப்படியேதான் நான் செய்யப் பேகின்றேன்'' என்றார். '' என் அன்பே, சப்தம் செய்யாதே, நீ அந்தவிதமாக ஒருக்காலும் பேசக்கூடாது, அது முற்றும் தவறாகும். நீ அப்படிப் பேசினால் போலீசார் உன்னைப் பிடித்துக் கொண்டு சென்றுவிடுவார்கள்'' என்றார் அந்த நல்ல போதகர். ''நான் எந்த ஒரு கெட்ட காரியமும் செய்யமாட்டேன். ஆனால், நான் அந்த மனிதரை கொல்லவே செய்வேன்'' என்றார் ஸபர்ஜன். அவருடைய தாத்தாவுக்கு ஸ்பர்ஜனின் வார்த்தைகள் ஆச்சரியத்தைக் கொடுத்ததுடன் தனது பேரக் குழந்தை தான் தவறு என்று உணர்ந்த எந்த ஒரு காரியத்தையும் கட்டாயம் செய்யவே மாட்டான் என்று அந்தக் காரியத்தை அப்படியே விட்டுவிட்டார்.

சில நாட்களுக்குப் பின்னர் ஸ்பர்ஜன் தனது தாத்தாவுக்கு முன்பாக வந்து நின்று ''நான் அந்த கிழவர் ரோட்ஸ் ஐ நான் சொன்னபடியே கொன்றுவிட்டேன். இனி அந்த மனிதன் உங்கள் உள்ளத்தை ஒருக்காலும் புண்படுத்தமாட்டார்'' என்றார் ஸ்பர்ஜன். ''என் அன்புக் குழந்தாய், நீ என்ன காரியம் செய்தாய்? நீ எங்கு சென்றிருந்தாய்? '' என்று அவருடைய தாத்தா

கேட்டார். ''நான் எவருக்கும் தீங்கு செய்யமாட்டேன். நான் ஆண்டவருடைய காரியமாகவே சென்றிருந்தேன்'' என்றார் ஸ்பர்ஜன். மேற்கொண்டு எந்த விபரத்தையும் அந்த மனிதரால் தனது பேரக்குழந்தை ஸ்பர்ஜனிடமிருந்து பெறவே முடியவில்லை.

ஆனால், நீண்ட நாட்கள் கடந்து செல்லுவதற்கு முன்பாகவே அந்த குடிகார மனிதர் ரோட்ஸ் என்பவர் தனது குருவானவரைக் காண அவரது வீட்டிற்கு ஒரு நாள் வந்து சேர்ந்தார். தான் சிறுவன் ஸ்பர்ஜனால் எப்படிக் கொல்லப்பட்டேன் என்பதைச் சொல்ல அவர் அங்கு வந்திருந்தார். ''என் அருமைக் குருவானவரே, நான் மிகவும் வருத்தமடைகின்றேன். நான் உங்களை வெகுவாக துயரத்துக்குள்ளாக்கிவிட்டேன். அது மிகவும் தவறாகும் என்பதை நான் அறிவேன். ஆனால், நான் உங்களை அதிகமாக நேசிக்கின்றேன். அந்தக் காரியம் உங்கள் உள்ளத்தை இந்த அளவுக்கு புண்படுத்தும் என்பதை நான் அறிந்திருந்தால் நான் அந்த தவறைச் செய்திருக்க மாட்டேன்'' என்றார் ரோட்ஸ். நான் வழக்கம்போல அன்று மதுபானக் கடையில் உட்கார்ந்து மதுபானம் அருந்திவிட்டு எனது புகையிலைக் குழாயைப் புகைத்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் உங்கள் பேரக் குழந்தை எனக்கு முன்பாக வந்து நின்று தனது விரலை எனக்கு நேராகச் சுட்டிக் காண்பித்து ''எலியாவே, இங்கு உனக்கு என்ன காரியம்? துன்மார்க்கருடன் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றாய். நீ கர்த்தருடைய சபையின் அங்கத்தினன். நிச்சயமாக உனது குருவானவருடைய உள்ளத்தை நீ உடைத்துக் கொண்டிருக்கின்றாய்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டான். அந்த வார்த்தைகள் எனக்கு கடுமையான எரிச்சலை மூட்டியது உண்மையாயினும் குழந்தை சொன்ன வார்த்தை உண்மை என்பதை என்னளவில் உணர்ந்து என் இருதயத்தில் குத்துண்டு எனது கரத்திலிருந்த எனது புகைப் பிடிக்கும் குழலை வீசி எறிந்துவிட்டு, இனிமேல் மதுபானம் அருந்துவதில்லை என்றும் எனக்குள்ளாக பொருத்தனை செய்து கொண்டு ஒரு மறைவான இடத்திற்குச் சென்று எனது பாவங்களை அறிக்கையிட்டு தேவனுடைய இரக்கத்துக்காக அவரிடம் கெஞ்சினேன். தேவன் என் பாவங்களை எனக்கு மன்னித்து என்னைத் தமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டார் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்'' என்று அந்தக் கிழவரான ரோட்ஸ் தனது குருவானவரிடம் கூறினார்.

எனது குழந்தைப் பருவ பக்தி நினைவுகள்

கர்த்தருடைய பேரன்பால் எனக்கு மிகவும் பக்தியுள்ள பெற்றோர் கிடைத்திருந்தனர். அவர்களுடைய பரிசுத்தமான கண்கள் என்னை

எப்பொழுதும் கவனித்தவண்ணமாக இருந்தன. நான் ஏதாவது கெட்ட தோழர்களுடன் சேர்ந்து கெட்ட பழக்க வழக்கங்களை கைக்கொள்ளுகின்றேனா என்பதை அந்தக் கண்கள் கவனித்த வண்ணமாக இருந்தன. அத்துடன் சிறு பிராயத்திலேயே நான் தேவனுடைய பரிசுத்த பாதையில் செல்லும்படியாக அவர்களால் போதிக்கப்பட்டேன். கர்த்தருக்குள் நான் என் அருமைப் பெற்றோருக்கு மிகவும் நன்றி கடன்பட்டுள்ளேன்.

ஓய்வு நாட்களின் மாலை வேளைகளில் நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது எனது பக்தியுள்ள தாயார் எங்களோடு தனது நேரத்தை செலவிடுவார்கள். நாங்கள் எல்லாரும் மேஜையைச் சுற்றி அமர்ந்திருப்போம். எனது தாயார் பரிசுத்த வேதாகமத்தைத் திறந்து அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியை தியானத்துக்காக எடுத்து ஒவ்வொரு வசனங்களாக வாசித்து அதை எங்களுக்கு விவரித்துக் காண்பிப்பார்கள். அதின் பின்னர், பரிசுத்த தேவ பக்தர்களான ''அலைன்'' மற்றும் ''ரிச்சர்ட் பாக்ஸ்டர்'' என்ற பரிசுத்த பக்தர்கள் எழுதிய ''எச்சரிக்கை'' ''மனந்திரும்பாதோருக்கு அவசர அழைப்பு'' என்ற 2 புத்தகங்களிலிருந்தும் தனிப்பட்ட விதத்தில் எங்களுக்குப் பொருந்தக்கூடிய பகுதிகளை வாசித்து எங்களுடைய இரட்சிப்பின் காரியத்தைக் குறித்து எங்களிடம் கேள்விகள் கேட்பார்கள். எங்களுடைய ஆத்துமத்தின் காரியம் எப்படியிருக்கின்றது என்றும், எப்பொழுது நாங்கள் எங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கப் போகின்றோம் என்றும் எங்களிடம் கேட்பார்கள். அதற்கப்பால் என் அருமைத் தாயாரின் கண்ணீரின் ஜெபம் தொடரும். நான் வயதாகி நரைத்த ரோமங்களுடன் காணப்படும் இந்த நாட்களிலும் அவர்கள் ஒரு தடவை ஜெபித்த ஜெப வார்த்தைகளை இன்றும் நினைவில் வைத்துள்ளேன். ''தேவனே, எனது பிள்ளைகள் தங்களது பாவ வழிகளிலேயே தொடர்ந்து செல்லுவார்களானால் அவர்களது முடிவு அவர்களுடைய அறியாமையின் காரணமாக இருப்பதற்கில்லை. காரணம், அவர்கள் சத்தியத்தை என் மூலமாக நன்கு அறிந்திருக்கின்றார்கள். உம்மை அவர்கள் பற்றிப்பிடித்துக் கொள்ளவில்லை என்றால் நியாயத்தீர்ப்பு நாளிலே நானே அவர்களுக்கு எதிரான உடனடி சாட்சியாக உமது சமூகத்தில் காணப்படுவேன்'' என்று ஜெபித்தார்கள். அம்மா அப்படி ஜெபித்த அவர்களின் ஜெபமானது எனது உள்ளத்தை ஊடுறுவக் குத்துவதாக இருந்தது. அந்த வார்த்தைகள் என் இருதயத்தைக் கிழர்ந்தெழும்பப் பண்ணிற்று. அதின் காரணமாக நான் ஏதாவது எனது மனச்சாட்சிக்கு விரோதமாக அந்த நாளில் செய்திருந்தால் தேவனுக்கு முன்பாக எனது மன்னிப்புக்காக நான் கண்ணீர்

சிந்தி அழுவேன். நான் ஆண்டவருடைய இரட்சிப்புக்குள் வந்தபோது அவர் எனக்குக் கொடுத்த மென்மையான இளகும் மனச்சாட்சிக்காக நான் அவருக்கு மிகுந்த நன்றியுடையோனாய் இருக்கின்றேன்.

பிள்ளைகளை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துவதில் தாய் தந்தையர் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றனர். எனது வாலிபத்தில் எனது பக்தியுள்ள தாயாருடைய போதனைகளேயல்லாமல் வேறு எந்த ஒரு கிறிஸ்தவ பக்தி முயற்சிகளின் காரணமாக நான் இரட்சகர் இயேசுவின் மேல் ஒரு ஆழமான பக்தி உணர்வைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று நான் ஆணித்தரமாகக் கூறுவேன்.

எனக்கு முன்பாகத் தனது முழங்கால்களை முடக்கி எனது தோளின் மேல் தனது இரு கரங்களையும் போட்டு என்னை அரவணைத்துப் பிடித்து ''தேவனே, எனது குமாரன் உமக்கு முன்பாக பரிசுத்தமாக வாழ வேண்டும்'' என்ற அவர்களின் வார்த்தைகளை நான் எப்படி மறக்கக்கூடும்?

குருவானவராக பணி செய்த எனது பரிசுத்த தகப்பனார் எங்களுக்குச் சொன்ன ஒரு சம்பவத்தை நான் இன்றும் நினைவில் வைத்திருக்கின்றேன். குருவானவரான அவர்கள் பிரசங்கங்களுக்காக அடிக்கடி வீட்டிலிருந்து வெளியே போய்விடுவார்கள். அப்படி ஒரு நாள் ஒரு இடத்திற்குப் பிரசங்கத்துக்காகச் சென்று கொண்டிருந்த வேளை தனது பிள்ளைகளாகிய எங்களின் இரட்சிப்பைக் குறித்த காரியத்தில் நாம் அக்கரை கொள்ளாமல் அவர்களைப் புறக்கணித்து ஒதுக்கி வைத்துவிட்டு மற்ற மக்களின் இரட்சிப்பையே நாடுகின்றோமே, அப்படியானால் நம் பிள்ளைகளின் காரியம் என்ன ஆவது என்ற மனக் கவலையால் அவர்கள் உடனே வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். வீட்டிற்கு வந்த அவர்கள் வீட்டின் அடித்தளப் பகுதியில் நாங்கள் ஒருவரும் இல்லாமல் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டு எங்களைத் தேடிக்கொண்டு மேல் மாடிக்கு வந்திருக்கின்றார்கள். அங்கே வந்து எங்கள் படுக்கை அறையின் கதவண்டை வந்து நின்று அங்கே யாரோ ஜெபிப்பதைக் கவனித்திருக்கின்றார்கள். ஆம், எனது தாயார்தான் தனது அருமைப் பிள்ளைகளாகிய எங்களுடைய இரட்சிப்புக்காக தேவனிடம் பரிந்து மன்றாடி ஜெபிப்பதையும், விசேஷமாக தனது மூத்த குமாரனும், உறுதியான உள்ள வலிமை கொண்ட சார்லஸ் ஸ்பர்ஜனாகிய எனக்காக அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்திருக்கின்றார்கள். அதைக் கண்ட எனது தகப்பனார் தனது பிள்ளைகளுடைய இரட்சிப்புக்காக போராடி ஜெபிக்க அவர்களுடைய பரிசுத்த தாயார் இருப்பதைக் கண்டு

மிகுந்த களிகூருதலோடு தனது பரம தகப்பனின் ஊழியத்தைச் செய்ய மீண்டும் சென்றிருக்கின்றார்கள்.

''ஆ, என் அருமை மகன் சார்லசே, ஆண்டவர் உன்னை ஒரு மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனாக மாற்ற வேண்டும் என்று ஜெபிப்பதுடன், எந்த ஒரு நிலையிலும் வெறுமனே உன்னை ஒரு பாப்திஸ்து சபை பிரிவைச் சேர்ந்தவனாக மாத்திரம் ஆக்கிவிடக்கூடாது'' என்று நான் ஜெபித்து வருகின்றேன் என்று ஒரு தடவை எனது தாயார் என்னிடம் சொன்னார்கள். உண்மைதான், அந்த சபைப்பிரிவைச் சேர்ந்த மக்கள் தேவனுக்கு முன்பாக ஒரு நல்ல சாட்சியின் ஜீவியம் செய்யவில்லை என்பதை அவர்கள் நன்கு கவனித்திருந்தார்கள்.

எங்கள் வீட்டில் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாள் மிகவும் கண்டிப்பாக அனுசரிக்கப்பட்டது. அந்த நாளில் வீட்டில் எந்த ஒரு சமையல் வேலைகளும் இருக்காது. சனிக் கிழமையே ஆகாரம் சமைத்து விடுவார்கள். அதுவும் மிகவும் எளிமையான ஆகாரமாகவே இருக்கும்.

என்னைக் குறித்து ரிச்சர்ட் நில் என்ற பரிசுத்த தேவ மனிதர் சொன்ன தீர்க்கதரிசனம்

ரிச்சர்ட் நில் என்ற போதகர் இரட்சகர் இயேசுவுக்காக எரிந்து பிரகாசிக்கும் ஒரு ஒளியாக அந்த நாட்களில் இங்கிலாந்து தேசத்தில் விளங்கினார். அவருடைய சரித்திரத்தை மிகவும் இரத்தினச் சுருக்கமாக இந்த இடத்தில் கூறுவது மிகவும் அவசியமாகும். அவர் தேவனுடைய சுவிசேஷத்தை சுமந்து கொண்டு இந்தியாவுக்குச் செல்லப் போவதாக அவருடைய தாயாரிடம் சொன்ன போது அவருடைய தாயார் அக்கினி கனலாக அவர்மேல் எரிந்து விழுந்து ''நானும் உனது தகப்பனாரும் மண்ணோடு மண்ணாக கலக்கும் நாள் வரை நீ பொறுத்திருந்து அதின் பின்னர் இந்தியாவுக்குச் செல்லலாம்'' என்று ஆரம்பத்தில் சொல்லிவிட்டார்கள். அதின் பின்னர் அந்த அம்மையார் தனது எண்ணத்தை முற்றுமாக மாற்றிக் கொண்டு அவரை இந்தியாவுக்கு போவதற்கு சம்மதித்தது மாத்திரமல்ல, அவரைப் போவதற்கு கட்டாயமும் படுத்தினார்கள் கர்த்தர் தனக்குக் கொடுத்த ஈசாக்கை பலிபீடத்தில் பலியிடவும் இப்பொழுது ஆயத்தமாக இருப்பதாகக் கூறினார்கள்.

ரிச்சர்ட் நில் இந்தியாவுக்குப் புறப்பட்ட நாள் அன்று அவருடைய தாயார் தனது திருமண மோதிரத்தை தனது விரலிலிருந்து கழற்றி ''எனது

இருதயத்திற்கு மிகவும் அருமையான இந்தப் பொருளை இதுவரை நான் என் வசம் வைத்திருந்தேன். உனது தகப்பனார் தனது அன்புக்கு அடையாளமாக இந்த மோதிரத்தை எங்களது கலியாண தினத்தன்று எனக்கு அணிவித்தார்கள். கடந்த 40 ஆண்டு காலமாக நான் அதை அணிந்து வந்திருக்கின்றேன். இந்தியாவுக்கு மிஷனரியாகச் செல்லும் உன்னை நான் இனி இந்த உலகத்தில் சந்திக்கப் போவதில்லையாதலால் அந்தப் பொருளை உனது தந்தையின் முன்னிலையில் எங்களுடைய ஒருமித்த அன்பின் அடையாளமாக உனக்கே தந்துவிடுகின்றோம்'' என்று கூறி அந்த மோதிரத்தைக் கொடுத்துவிட்டார்கள். ரிச்சர்ட் நில் என்ற அந்த தேவ மனிதரின் உருவப்படம் இங்கிலாந்து தேசத்திலுள்ள Queen Street என்ற இடத்திலுள்ள தேவாலயத்தில் உள்ளது. அவரது படத்திற்கு கீழாக ''சகோதரரே, புறஜாதிகள் அன்பின் ஆண்டவர் இயேசுவை அறியாதவர்களாக தங்கள் பாவத்தில் அழிந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அழிந்து போவதை நாம் அனுமதிக்க முடியுமா? கர்த்தர் அந்தக் காரியத்திலிருந்து நம்மைப் பாதுகாப்பாராக'' என்று அவரே எழுதியிருக்கின்றார்.

உலகத்திலேயே மிகப் பெரிய சபை மக்களுக்கு ரோலண்ட் ஹில் என்ற இடத்திலுள்ள தேவாலயத்தில் நான் பிரசிங்கிக்கப் போகின்றேன் என்று மேலே நாம் கண்ட ரிச்சர்ட் நில் என்ற போதகர் என்னைக் குறித்துச் சொன்ன தீர்க்கத் தரிசனமானது அநேகமாக எல்லாருக்கும் தெரிந்த உண்மைதான். அந்த தேவ பக்தன் 1844 ஆம் ஆண்டு எஸ்ஸக்ஸ் என்ற ஜில்லாவுக்கு லண்டன் மிஷனரி ஸ்தாபனத்தின் சுவிசேஷகராக வந்திருந்து அந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்கள்தோறும், அங்குள்ள கிராமங்கள்தோறும் கால் நடையாக நடந்து சிறியோருக்கும், பெரியோருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர் ஒரு பெரிய ஆத்தும ஆதாயகன் ஆவார். அவர் தம்முடைய பயணத்தின் பாதையில் ஸ்டாம்போர்ன் என்ற நான் தங்கியிருந்த எனது தாத்தாவின் சபைக்கும் வந்திருந்தார். அங்குள்ள குருமனையில்தான் அவர் சில நாட்கள் அப்பொழுது தங்கியிருந்தார். அவர் சிறுவனான என்னை தேவ ஆவியானவரின் தூண்டுதலால் அடையாளம் கண்டுபிடித்தார். ''குழந்தாய் நீ எங்கு நித்திரை செய்கின்றாய்? நாளைய தினம் காலையில் நான் உன்னைச் சந்திக்க விரும்புகின்றேன்'' என்று அவர் என்னிடம் சொன்னார். நான் படுத்திருக்கும் சின்ன அறையை நான் அவருக்கு காண்பித்த போது அதை கவனமாக அடையாளம் செய்து வைத்துக் கொண்டார். அடுத்த நாள் காலை 6 மணிக்கெல்லாம் அவர் எனது அறைக்கு வந்துவிட்டார். நான் படுத்திருந்த அறையின் பக்கத்திலுள்ள அழகிய பூப்பந்தலுக்கு என்னை அழைத்துச்

சென்று மிகவும் மதுரமான குரலில் இயேசு இரட்சகரின் அன்பையும், அவர் பேரில் நம்பிக்கை வைப்பதின் ஆசீர்வாதத்தையும், குழந்தைப்பருவத்திலேயே ஆண்டவர் இயேசுவை நேசிப்பதிலுள்ள மாட்சிமையையும் அவர் எனக்குச் சொன்னார். அருமை இரட்சகர் அவருடைய வாழ்வில் எத்தனை நல்லவராக இருந்து வந்திருக்கின்றார் என்பதையும் என்னிடம் சொன்னார்.

அதின் பின்னர் நான் ஆண்டவரை அறிந்து கொண்டு அவருக்கு தொண்டு செய்ய வேண்டுமென்றும் கூறி அந்தப் பூப்பந்தலிலேயே தனது முழங்கால்களை ஊன்றி எனது தோளின்மேல் தனது கரங்களைப் போட்டு எனக்காக உள்ளம் உருகி ஜெபித்தார். அப்பொழுது நான் அவரிடம் பேசிய எனது குழந்தைப் பருவ வார்த்தைகளை மிகவும் பொறுமையுடன் அவர் கேட்டுக் கொண்டிருந்ததுடன் கிருபை நிறைந்த போதனைகளையும் அவர் எனக்குக் கொடுத்தார். தொடர்ச்சியாக 3 நாட்கள் ரிச்சர்ட் நில் இந்தவிதமாகச் செய்து வந்தார். அதற்கப்பால் எனது தாத்தாவையும், குடும்பத்தின் மக்கள் யாவரையும் ஒன்றாகக் கூடி வரச் செய்து அவர்கள் முன்னிலையில் என்னைத் தனது முழங்கால்களில் அமரப்பண்ணி எல்லாரையும் பார்த்து ''இந்தக் குழந்தை ஒரு நாள் தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை திரள் கூட்டமான ஜனத்துக்குப் பிரசிங்கிப்பான். நான் இப்பொழுது குருவானவராக இருக்கும் ரோலண்ட் ஹில் என்ற இடத்திலுள்ள பிரமாண்டமான தேவாலயத்தில்தானே அவன் பிரசிங்கிப்பான்'' என்று கூறினார். கர்த்தருக்குள் சாந்தமாகவும் அதே சமயம் மிகவும் உறுதியாகவும் அவர் அந்த வார்த்தைகளை கூறிவிட்டு நான் சொன்ன எனது வார்த்தைகளுக்கு உங்கள் எல்லாரையும் இந்த நாளில் சாட்சியாக வைக்கின்றேன் என்று சொன்னார். பின்னர் அவர் 6 பென்ஸ் நாணயம் ஒன்றை எடுத்து அதை எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்து கீழ்க்கண்ட ஞானப்பாடலை நான் மனப்பாடமாக படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்தப் பரிசுத்தவான் சொன்னபடியே நான் அந்தப் பாடலை உடனே மனப்பாடமாகப் படித்துக் கொண்டதுடன் அவருடைய தீர்க்கத்தரிசன வார்த்தைகளின்படி நான் தேவ ஊழியம் செய்த ரோலண்ட் ஹில்லில் உள்ள தேவாலயத்தின் திரள் கூட்டத்தினரை முதலாவது அவர்களை அந்தப் பாடலைப் பாடச் செய்து அதின் பின்னர் எனது பிரசங்கத்தைத் தொடங்கினேன்.

கர்த்தாவின் அற்புதச் செய்கை
புத்திக் கெட்டாததாம்
பொங்கு கடல் கடுங்காற்றை
அடக்கி ஆள்வோராம்.

தம் வல்ல ஞான நோக்கத்தை
மா ஆழமாகவே
மறைத்து வைத்தும், தம் வேளை
முடியச் செய்வாரே.

பின் வந்த நாட்களில் மேற்கண்ட பரிசுத்தவான் தேவப்பணி செய்த செஷ்டர் என்ற நகரத்திலுள்ள தேவாலயத்தில் அந்த தேவ மனிதருக்கும் திரளான கூட்டத்தினருக்கும் முன்பாக நான் நின்று பிரசங்கிக்கும் தருணத்தை தேவன் எனக்குத் தந்தார்.

எனது மனந்திரும்புதல்

''மனந்திரும்பாத பாவிகளுக்கு ஓர் எச்சரிப்பு'' ''மனந்திரும்பாத வர்களுக்கு ஒரு அழைப்பு'' ''எழுந்திரு, ஆத்துமாவின் பக்தி வாழ்வில் முன்னேறு'' போன்ற எனது மனந்திரும்புதலுக்கேற்ற அருமையான புத்தகங்கள் எங்கள் வீட்டில் இருந்ததற்காக நான் தேவனைத் துதிக்கின்றேன். ஆனால், அந்த அருமையான புத்தகங்கள் மூலமாக நான் என் இரட்சிப்பைக் கண்டு கொள்ளாமல், கல்வியறிவில்லாத, தேவ ஊழியத்திற்காகப் பயிற்றுவிக்கப்படாத, உலகப் பிரகாரமான ஒரு தொழிலைச் செய்து கொண்டு வந்த ஒரு ஏழை மனிதருடைய பிரசங்க வார்த்தைகளால் நான் எனது மனந்திரும்புதலைக் கண்டு கொள்ள வேண்டுமென்பது தேவனுடைய அநாதி தீர்மானமாகவிருந்தது. நான் எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு இரட்சிப்பின் சந்தோசத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக நான் வாழ்ந்து கொண்டிருந்த பட்டணத்திலுள்ள அநேக ஆலயங்களுக்குச் சென்று கொண்டிருந்தேன். எனது ஆத்துமாவைக் குறித்த பாரத்தின் காரணமாக பட்டணத்திலுள்ள எல்லா தேவாலயங்களுக்கும் சென்று எப்படியாவது இரட்சிப்பின் வழியைக் கண்டு கொள்ள விரும்பினேன். அப்படியே நான் எல்லா தேவாலயங்களுக்கும் சென்றேன். ஆனால், நான் ஒவ்வொரு முறையும் வெறுமையாய் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அதற்காக நான் சென்று வந்த ஆலயங்களிலுள்ள குருவானவர்களை குறை சொல்லவில்லை. ஆராதனைக்குப் பின் ஆராதனையாக நான் எல்லா ஆராதனைகளுக்கும் மிகுந்த ஜெபத்தோடு

சென்று கொண்டிருந்தேன். இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்ற மெய்யான தாகத்தோடும், வாஞ்சையோடும் நான் அந்த நாட்களில் கதறிக் கொண்டிருந்தேன்.

இப்படியிருக்கும் நாட்கள் ஒன்றில் ஒரு ஓய்வு நாளின் காலை வேளையில் ஒரு குறிப்பிட்ட ஆலயத்துக்கு நான் கர்த்தரைத் தொழுது கொள்ளுவதற்காக ஆயத்தமாகிப் போய்க் கொண்டிருந்தேன். ஆனால் நான் அந்த இடத்திற்குச் செல்லக் கூடாதபடி கடுமையான பனிப்புயல் வீசவே நான் அங்கு செல்லுவதை விட்டு பக்க வழியாக ஒரு தெருவின் வழியாகச் சென்று அங்கிருந்த ஒரு பழைய காலத்து மெதடிஸ்ட் சிற்றாலயத்துக்குள் சென்று அமர்ந்தேன். நான் அங்கு சென்றபோது அந்த ஆலயத்தில் 12 அல்லது 15 பேர்கள் மாத்திரமே அமர்ந்திருந்தனர். அந்த மெதடிஸ்ட் தேவாலயத்தில் அமர்ந்திருந்த மக்கள் எனக்குத் தலைவலி வரும் அளவுக்கு தங்கள் சத்தத்தை உயர்த்தி கர்த்தரைத் துதித்துப் பாடிக் கொண்டிருந்தார்கள். அதைக் குறித்து நான் ஒன்றும் எண்ணிக் கொள்ளவில்லை. எப்படியாவது நான் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற தாகத்தோடேயே நான் அங்கு அமர்ந்திருந்தேன். அன்றைய தினம் அந்த ஆலயத்தின் ஆராதனையை எடுத்து நடத்த வேண்டிய குருவானவர் அன்று வீசிய பனிப் புயலின் காரணமாக வரவில்லை. அதற்குப் பதிலாக ஒரு ஒடிசலான மனிதர், அவர் ஒரு தையற்காரரோ இல்லை ஒரு செருப்புத் தைப்பவரோ அல்லது அந்த வகையைச் சேர்ந்த யாரோ ஒருவர் பிரசங்க பீடத்தில் ஏறி தேவச் செய்தியை கொடுக்க ஆயத்தமானார். அவர் பேசிய பிரசங்க வாக்கியமானது ‘‘பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்’’ (ஏசாயா 45 : 22) என்பதுதான்.

தான் தெரிந்துகொண்ட தனது பிரசங்க வாக்கியத்தை சரியான விதத்தில் உச்சரிக்கக்கூட அவருக்கு முடியாதிருந்தது. அவர் தெரிந்துகொண்ட அந்த பிரசங்க வாக்கியமானது எனக்கு எனது ஆத்துமாவில் ஒரு நம்பிக்கையைக் கொடுப்பதாக இருந்தது. அந்த பிரசங்கியார் தனது பிரசங்கத்தை அன்பான நண்பரே, ‘‘பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்’’ என்ற வாசகம் மிகவும் எளிமையான வாக்கியமாகும். அந்த வசனம் சொல்லுவது நாம் நமது கண்களால் பார்க்கும்படியாக மாத்திரமே. உங்கள் காலையோ அல்லது கையின் விரலையோ உயர்த்துங்கள் என்று அந்த வசனம் சொல்லவில்லை. எந்த ஒரு கஷ்டமும் படாமல் நமது கண்களை மாத்திரம் நோக்கிப் பார்க்கச்

சொல்லுகின்றது. கண்களால் பார்ப்பதற்கு ஒரு மனிதன் கல்லூரிக்குச் சென்று படிக்க வேண்டிய அவசியமில்லை. இந்த உலகத்தில் நீ ஒரு மாபெரும் மூடனாக இருந்தாலும் கண்களால் பார்ப்பதற்கு உனக்கு எந்த ஒரு கஷ்டமும் கிடையாது. பார்ப்பதற்கு ஒரு ஆயிரம் ஆண்டு காலம் நீ காத்திருக்க அவசியமில்லை. நினைத்த உடனே பார்க்கலாம், யார் வேண்டுமானாலும் பார்க்கலாம், ஏன் ஒரு குழந்தை கூட பார்க்கலாம். ''என்னை நோக்கிப் பாருங்கள்'' என்று அந்த மனிதர் தனது விசாலமான எஸ்ஸெக்ஸ் மொழியில் பேசினார். ''உங்களில் அநேகர் உங்களையே நோக்கிப் பார்க்கின்றீர்கள்'' அங்கே பார்ப்பதினால் யாதொரு பயனுமில்லை. உங்களையே நீங்கள் பார்ப்பதினால் எந்த ஒரு நன்மையையும் நீங்கள் ஒருக்காலும் கண்டடையப் போவதில்லை. சிலர் பிதாவாகிய தேவனை நோக்கிப் பார்க்கின்றீர்கள். வேண்டாம், அவ்வப்போது அவரை நோக்கிப் பாருங்கள். ''என்னை நோக்கிப் பாருங்கள்'' என்று இயேசு கிறிஸ்து சொல்லுகின்றார். உங்களில் சிலர் ''பரிசுத்த ஆவியானவர் எங்களில் கிரியை செய்யும் வரை நாங்கள் பொறுத்திருப்போம்'' என்று சொல்லுகின்றீர்கள். நீங்கள் அப்படிச் செய்ய எந்த ஒரு தேவையும் கிடையாது. இயேசுவை நோக்கிப் பாருங்கள். தேவனுடைய வார்த்தை ''என்னை நோக்கிப்பாருங்கள்'' என்று சொல்லுகின்றது.

அதற்கப்பால் அந்த நல்ல மனிதர் தனது செய்திக்கு இவ்விதமாகத் திரும்பினார். ''என்னை நோக்கிப் பாருங்கள், நான் எனது இரத்தத்தை பெருந்துளிகளாகச் சிந்திக் கொண்டிருக்கின்றேன். என்னை நோக்கிப் பாருங்கள், நான் சிலுவை மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றேன். என்னை நோக்கிப் பாருங்கள், நான் மரித்து அடக்கம்பண்ணப்பட்டேன். என்னை நோக்கிப் பாருங்கள், நான் திரும்பவும் உயிர்த்தெழுந்தேன். என்னை நோக்கிப் பாருங்கள், நான் பரலோகத்திற்கு ஏறிச்சென்றேன். என்னை நோக்கிப் பாருங்கள், நான் பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கின்றேன். ஓ ஏழைப்பாவியே என்னை நோக்கிப் பார், என்னை நோக்கிப் பார். இவ்விதமாக 10 நிமிட நேரங்களுக்கு அந்த மனிதர் அந்த வட்டத்துக்குள்ளேயே சுற்றிவிட்டு தனது பார்வையை என்னை நோக்கித் திருப்பினார்.

தங்களுடைய சபைக்கு நான் புதியவன் என்று கண்டு கொண்ட அவர் தனது பார்வையை என் மீது முழுமையாகப் பதித்தவராக ''பரிதாபகரமாக காணப்படும் இளம் வாலிபனே'' என்று குறிப்பிட்டுவிட்டு ''நீ எனது பிரசங்க வாக்கியத்தின்படி இரட்சகர் இயேசுவை நோக்கிப் பார்த்து அவருக்குக்

கீழ்ப்படியாவிட்டால் நீ எப்பொழுதும் பரிதாபகரமாக, உன் வாழ்நாள் முழுவதும் பரிதாபகரமாக, உனது மரணத்திலும் பரிதாபகரமாக காணப்படுவாய். ஆனால், நீ இந்தக் கணத்திலேயே கிறிஸ்து இரட்சகரை நோக்கிப் பார்ப்பாயானால் நீ இரட்சிக்கப்படுவாய். இளம் வாலிபனே, இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார், அவரையே நோக்கிப் பார். நீ எதுவும் செய்ய வேண்டியதில்லை, அவரை நோக்கிப் பார்த்து வாழவேண்டியதைத் தவிர நீ செய்ய வேண்டியது எதுவுமே இல்லை''

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நான் எனது இரட்சிப்பின் வழியை உடனே கண்டு கொண்டேன். அந்த மனிதர் தனது பிரசங்கத்தில் சொன்ன வேறு எதையும் நான் கவனிக்கவே இல்லை. என் இருதயம் ஒரே ஒரு எண்ணத்தால் பூரணமாக நிறைந்திருந்தது. வனாந்திரத்தில் மோசே வெண்கல சர்ப்பத்தை உயர்த்தினபோது அதை நோக்கிப் பார்த்தவர்கள் எல்லாரும் பிழைத்துக்கொண்டதுபோலவே எனது காரியமும் அமைந்தது. தேவனுடைய வார்த்தையை நான் கவனித்தேன். அந்த வார்த்தை என்னை கிறிஸ்து இரட்சகரின் சிலுவைக்கு நேராக என்னை அழைத்துச் சென்றது. அந்த மனமகிழ்ச்சியின் நாளில் நான் இரட்சகரைக் கண்டு கொண்டேன். அவருடைய அன்பான பாதங்களையும் பற்றிக்கொள்ள கிருபை பெற்றேன். அந்த நாளில் நான் பெற்ற சந்தோசத்தின் காரணமாக நான் துள்ளிக் குதித்திருக்கலாம், ஆனந்த நடனமாடியிருக்கலாம், நான் என்ன என்ன காரியங்கள் அந்த பரலோக ஆனந்த மகிழ்ச்சிக்காகச் செய்திருந்தாலும் அது எதுவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கமாட்டாது. அந்த நாளில் நான் பெற்ற சந்தோசத்தையும், சமாதானத்தையும் வெறும் வார்த்தைகளால் சொல்லி முடியாது. நான் மன்னிக்கப்பட்டேன், நான் எனது பாவங்களற கழுவப்பட்டேன். ஒரு பாவி இயேசு இரட்சகரின் பரிசுத்த இரத்தத்தால் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டான். இரட்சகர் இயேசுவின் சிலுவைப் புண்ணியத்திற்கு நான் ஒரு ஞாபகச் சின்னம்! என் பாவச் சங்கிலிகளெல்லாம் என்னிலிருந்து தெறிப்புண்டு போவதை நான் கண்டேன். கிறிஸ்து இரட்சகரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவனாகவும், பரலோக ராஜ்யத்தின் சுதந்திரவாளியாகவும், பயங்கரமான குழியிலும் உளையான பாவச்சேற்றிலுமிருந்து தூக்கி எடுக்கப்பட்டவனாகவும், நித்திய கன்மலையின்மேல் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டவனாகவும் நான் என்னைக் கண்டேன். அந்த சிற்றாலயத்தில் நான் கண்டுகொண்ட சொல்லி முடியாததும், மகிமையால் நிறைந்ததுமான மகிழ்ச்சியின் காரணமாக நான் எனது வீடு வரைக்கும் தாவீது ராஜாவைப் போல நடனமாடிக் கொண்டே செல்ல

விரும்பினேன். மோட்ச பிரயாண புத்தகத்தின் ஆக்கியோன் ஜாண் பன்னியன் என்ற பரிசுத்த பக்தன் தனது மனந்திரும்புதலின் ஆனந்த செய்தியை உழுத நிலத்தில் காணப்பட்டக் காக்கைக் கூட்டத்திற்கு கூடச் சொல்ல ஆசைப்பட்டதாகக் கூறிய அந்த தேவ மனிதரின் உள்ளத்தை அன்று என்னால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

1850 ஆண்டு ஜனுவரி மாதம் 6 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 : 30 மணிக்கு நான் ஆர்ட்டில்லரி தெருவிலுள்ள அந்த மெதடிஸ்ட் சிற்றாலயத்துக்குச் சென்று மனந்திரும்பி இரட்சிப்பின் பாத்திரமாக காலை 12 : 30 மணிக்கு நான் வீடு வந்து சேர்ந்தேன். இருளின் அந்தகாரத்திலிருந்து தேவனுடைய ஆச்சரியமான ஒளிக்குள் வந்து சேர்ந்தேன். சிலுவை மரத்தில் தொங்கிய அன்பின் இரட்சகரை வெறுமனே நோக்கிப் பார்த்த ஒரே பார்வையில் அந்த மகத்தான இரட்சிப்பு எனக்கு கிடைத்தது. அந்த நேரத்தில் பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் எல்லாரும் தங்கள் கின்னரங்களை எடுத்து ஆனந்த மகிழ்ச்சியால் இசைத்திருப்பார்கள். ஆம், பரலோகமே நிச்சயமாக அன்று களிகூர்ந்திருக்கும். நான் தேவாலயத்திலிருந்து வீடு வந்தபோது வீட்டிலுள்ள யாவரும் என்னைப் பார்த்ததும் ''ஏதோ ஒரு ஆச்சரியமான காரியம் உன்னில் நடந்திருக்கின்றது'' என்று சொன்னார்கள். அன்று நடந்த இரட்சிப்பின் காரியத்தை நான் எங்கள் வீட்டிலுள்ள அனைவருக்கும் சொன்னேன். வீட்டின் தலை மகன் ஆண்டவருடைய இரட்சிப்பின் பாத்திரமாகிவிட்டான் என்ற களிகூருதலின் செய்தி அந்த நாளில் எங்கள் வீட்டை ஆனந்த மகிழ்ச்சியால் நிறைத்தது.

மனந்திரும்புதலுக்குப் பின்னர் என்னிலுண்டான பரிசுத்த அனுபவங்கள்

எனது கண்கள் முதன் முதலாவதாக கிறிஸ்துவைப் பார்த்த போது அவர் எனக்கு மிகவும் முழு நிச்சயமான கிறிஸ்து இரட்சகராகக் காணப்பட்டார். எனது பாவப் பாரங்கள் எனது முதுகிலிருந்து உருண்டோடியபோது அது ஒரு நிச்சயமான பாவ மன்னிப்பின் நிச்சயமாக எனக்கு இருந்தது. அந்த நாளில் நான் என் வாழ்வில் முதன் முதலாக ''என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்'' என்று கூறினேன். ஆம், என் அன்பின் இரட்சகரை நான் என் முழுமையாக்கிக் கொண்ட நாள் அது. நான் எனது ஜெபத்திற்காக அந்த நாளின் அதிகாலை வேளை எனது இளவயதின் பக்தியோடு தேவ சமூகத்தில் முழங்காலூன்றியபோது நான் பாடிய ஒவ்வொரு பாடலும் மெய்யாகவே ஒரு சங்கீதமாக அமைந்தது. நான் ஏறெடுத்த

ஜெபத்தின் ஒவ்வொரு வரியும் என்னைக் களிப்பூட்டுவதாக இருந்தது. ஆம், அதுவேதான் ஜெபம் என்பது! அந்த ஜெப வேளையானது மிகவும் அமைதி வேளையாக இருந்தது. ஏதோ அது ஒரு கடமைக்கான வேளையாக இல்லாமல் என்னைத் தமக்கெனத் தெரிந்து கொண்ட என் பரம தகப்பனோடு பேசி அளவளாவி மகிழும் இன்ப வேளையாக இருந்தது. ஆ, நான் என் அருமை இரட்சகரை எத்தனையாக நேசிக்கின்றேன். எனக்குள்ள யாவற்றையும் அவருக்கே கொடுக்கின்றேன். மனந்திரும்பாத பாவ மாந்தரின் இரட்சிப்புக்காக நான் அன்றைய தினம் எத்தனையாக என்னில் பாரங்கொண்டேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். நான் என் அன்பின் ஆண்டவரை முதன் முதலாக என் வாழ்வில் கண்டு கொண்டதும் எனக்குள் உண்டான ஒரு மாபெரும் துயரம் யாதெனில், நான் அதற்கு முன்பாக எனது ஆண்டவருடைய உள்ளத்திற்குப் பிரியமில்லாத காரியங்களை அறியாமல் செய்த நினைவுகளைக் குறித்ததுதான். எத்தனையோ பேர்களை பாவம் செய்ய நான் தூண்டினேன். தேவனுக்குப் பிரியமற்ற பாவ சம்பாஷணைகளை நான் செய்தேன். அந்த பழைய நினைவுகள் என்னை மிகவும் துக்கப்படுத்துவதாக இருந்தது.

நான் என் அன்பின் இரட்சகரைக் கண்டு கொண்ட முதல் ஒரு வாரம் நான் எனது பாதங்களை எடுத்து வைத்து வெளியே செல்லுவதற்குக் கூட மிகவும் பயப்பட்டேன். காரணம், நான் என் தேவனுடைய உள்ளத்துக்கு விருப்பமில்லாத எதையும் செய்துவிடுவேனோ என்று நான் மிகவும் அஞ்சினேன். ஒவ்வொரு நாளின் முடிவிலும் நான் என் இருதயத்தை அதிகமாக ஆராய்ந்தேன். அந்த நாளில் நான் எனது கோபத்தில் ஏதாவது பேசினேனோ என்றும், எனது ஆத்திர அவசரத்தில் ஆண்டவருடைய திருவுளத்திற்கு விருப்பமில்லாத எதையாகிலும் செய்தேனோ என்றும், கர்த்தருடைய சித்தம் மட்டும் என்னில் நிறைவேறியிருக்கின்றதா என்பதையும் நான் அதிகமாக அலசி ஆராய்ந்தேன். எனது வாழ்வின் காரியங்கள் எல்லாம் தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்திருக்கின்றதா என்பதையும் நான் நெருக்கமாக கண்காணித்து வந்தேன்.

ஆண்டவர் இயேசுவை நான் என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதும் நான் செய்த முதல் தேவ ஊழியம் நல்ல தரமான கிறிஸ்தவ துண்டுப் பிரதிகளைப் பெற்று அவைகளை கவரில் வைத்து எனக்குத் தெரிந்த மக்களுக்கு அனுப்பியதுதான். அதைப் பெற்றுக் கொண்ட ஆத்துமாக்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

அத்துடன் நான் மற்ற கைப்பிரதிகளை எடுத்துக்கொண்டு நியூமார்க்கெட் என்ற இடத்திலுள்ள சில ஜில்லாக்களில் வீடுவீடாகச் சென்று அவைகளை நான் மக்களுக்குக் கொடுத்தேன். தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அந்த மக்களுக்கு எனக்குத் தெரிந்த எளிமையான விதத்தில் சொன்னேன். அதற்கப்பால் நான் தேவனுடைய வசனங்களை சிறு சிறு காகிதங்களில் எழுதி மக்கள் கூடுகின்ற இடங்களில் போட்டேன். அப்படியே ரயில் நிலையத்துக்குள்ளும் சென்று ரயில் பெட்டிகளில் நான் அவைகளைப் போடுவதுண்டு. தேவனுடைய பணியில் மிகவும் சுறுசுறுப்பாக நான் காணப்பட்டேன். ஒரு 5 நிமிட நேரத்தைக் கூட நான் வீண் விரயமாக்காமல் கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் செலவிட்டேன். கொஞ்சம் நேரம் இருந்தாலும் அதை நான் ஆண்டவருடைய பாதங்களில் ஜெபத்தில் செலவிட்டேன் அல்லது அவருடைய வார்த்தைகளை வாசிப்பதில் கவனம் செலுத்தினேன்.

வாட்டர்பீச் கிராமத்தில் குருவானவரானேன்

1851 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நான் எனது 17 ஆம் வயதில் வாட்டர்பீச் என்ற கிராமத்திலுள்ள சிற்றாலயத்தின் குருவானவராக ஆனேன்.

குடிவெறிக்கும், தூஷணத்துக்கும் பேர்போன ஒரு கிராமத்தின் வழியாக நீங்கள் எப்பொழுதாவது நடந்து சென்றிருக்கின்றீர்களா? நிர்ப்பந்தமான ஏழை எளிய மக்கள் மதுபானக்கடைகளின் கம்பங்களில் சாய்ந்து கொண்டு நிற்பதையும், அல்லது அவர்கள் தள்ளாடிய நிலையில் தெருவில் நடந்து கொண்டிருப்பதையும் நீங்கள் எப்பொழுதாவது பார்த்திருக்கின்றீர்களா? இப்படிப்பட்ட மக்களின் வீடுகளை நீங்கள் உற்று நோக்கிப் பார்த்திருக்கின்றீர்களா? பாவ அசுசிகளும், அக்கிரமங்களும் நிறைந்த அந்தக் குகையான வீடுகளை நீங்கள் பார்த்து உங்கள் ஆவிக்குள்ளாக பெருமூச்சின் வியாகுலங்களை எழுப்பியிருக்கின்றீர்களா? தரித்திரம், ஏழ்மை, மக்களால் புறக்கணித்துத் தள்ளப்பட்ட பரிதாபகரமான நிலைமை, துக்கம், கிலேசம் நிறைந்த அந்த மக்களின் நிலை கண்டு உங்களுக்குள் புலம்பியிருக்கின்றீர்களா? ''ஆம்'' என்று நீங்கள் சொல்லுவீர்கள். ஆனால், அப்படிப்பட்ட ஒரு கிராமத்தின் வழியாக தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக பல தடவைகளும் பின் வந்த ஆண்டுகளில் நடந்து செல்லும் பாக்கியத்தை தேவன் எனக்குத் தந்தார். இங்கிலாந்து நாட்டிலேயே மிகவும் மோசமான நிலையில் அந்த கிராமம் உள்ளது என்று நான் எனக்குள் நினைத்ததுண்டு. அரசாங்கத்துக்கு வரி கொடாமல் கள்ளச்

சாராயம் காய்ச்சும் தொழில் அங்கு மலிந்திருந்ததால் எல்லாவித பாவங்களும், கலகங்களும், சண்டைகளும் அங்கு நிறைந்து காணப்பட்டன.

அந்தக் கிராமத்துக்குள்தான் ஒரு வாலிபன் சென்றான். அவனுக்கு எந்த ஒரு மேதாவிலாசமும் (பட்டப் படிப்புகளும்) கிடையாது. இருப்பினும் ஆத்துமாக்களை கர்த்தருக்காத் தேடிக் கொண்டு அவன் அங்கு சென்றான். அவன் அந்தக் கிராமத்தில் பிரவேசித்தபோது அந்தக் கிராமம் முழுவதையும் தலை கீழாக மாற்ற வேண்டுமென்பது தேவனுடைய தீர்மானமாயிற்று. கொஞ்ச நாட்களுக்குள்ளாக அந்தக் கிராமத்திலிருந்த சிறிய கூரை ஓலை பரப்பிய சிற்றாலயம் அந்தக் கிராமத்தில் அங்குமிங்கும் ஊதாரிகளாகச் சுற்றியலைந்த தீய பாவிகளான வாலிப மக்களால் நிரம்பி வழிந்தது. அவர்கள் அந்த சிற்றாலயத்துக்கு வந்து அங்கு தேவச் செய்தி கொடுத்த வாலிபனுடைய செய்திகளால் தொடப்பட்டு, பாவ உணர்வடைந்து கண்ணீர்விட்டு கதறி அழுதார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பதாக அந்தக் கிராமத்திலுள்ள திருச்சபைக்கு சாபத்தையும், வேதனையையும் கொண்டு வந்த அதே வாலிப மக்கள் ஒரு பெரிய ஆசீர்வாதத்தை இப்பொழுது அதற்குக் கொண்டு வந்தார்கள். எங்கே களவுகளும், வழிப்பறிகளும், துஷ்டத்தனங்களும், விபச்சார வேசித்தனங்களும் மலிந்து காணப்பட்டதோ அவை எல்லாம் மறைந்து அந்தக் கிராமம் பரிசுத்த ஒளி வீசும் கிராமமாயிற்று. காரணம், அந்த தீய காரியங்களை எல்லாம் செய்த மக்கள் சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவராகிய இயேசு இரட்சகரைக் குறித்துக் கொடுக்கப்பட்ட தேவச் செய்திகளை ஆனந்த களிகூருதலோடு கேட்க அந்தச் சிற்றாலயத்துக்கு கூடி வந்துவிட்டார்கள்.

ஒரு மிகைப்படுத்தப்பட்ட கதையை நான் இங்கே உங்களுக்குச் சொல்லவில்லை. அதுமட்டுமல்ல, நான் அறியாததையும் சொல்லவில்லை. அந்த கிராமத்தில் அன்பின் தேவன் என்னை தமது நாம மகிமைக்காக பயன்படுத்தின காரியத்தைத்தான் நான் இங்கே உங்களுக்கு எழுதுகின்றேன். அன்பின் இரட்சகருக்காக அந்த கிராமத்தில் நான் தேவப் பணி செய்வது எனது களிகூருதலாயிற்று. குடிவெறிகளெல்லாம் அந்தக் கிராமத்திலிருந்து வேர் அறுப்புண்டு, துர்நடத்தையான அனைத்து காரியங்கள் எல்லாம் அங்கிருந்து விலகினபின்பு நான் அந்தக் கிராமத்தின் வழியாக நடந்து செல்லுவது எனக்கு இன்பமாயிற்று. அந்தக் கிராமத்து மக்கள் என்றும் ஜீவிக்கின்ற தங்கள் தேவனைத் துதித்துப் பாடிக் கொண்டு தங்கள் வேலைகளுக்கும், பண்ணைகளுக்கும் செல்லுவதை காண்பது ஒரு ஆச்சரியமான



அனுபவமாயிற்று. மாலைச் சூரியன் மேல் வானில் அஸ்தமனமாகி இருள் தனது செட்டைகளை அந்தக் கிராமத்தில் பரப்பினபோது அந்தக் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டுத் தலைவனும் தனது குடும்பத்தை தன்னண்டை கூடிவரச் செய்து தேவனுடைய வேதபுத்தகத்திலிருந்து ஒரு பகுதியை வாசித்து, பின்னர் கணவனும், மனைவியும், பிள்ளைகளும் முழங்காற்படியிட தங்கள் ஜெபமன்றாட்டுகளை ஏறெடுப்பார்கள். சூரிய அஸ்தமனமான அந்த மாலை வேளையில் அந்தக் கிராமத்தின் ஒரு முனையிலிருந்து அடுத்த முனை வரை உள்ள அத்தனை வீடுகளின் கூரைகளிலும் கர்த்தரைத் துதிக்கும் பாடல்களும், ஜெபங்களும் கேட்டுக் கொண்டேயிருக்கும். கர்த்தருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக நான் இந்தக் காரியத்தைக் குறித்து இங்கு சாட்சி கொடுக்க முடியும். என் மூலமாக அங்கு பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தின் ஒளியின் காரணமாக பாவத்தின் பிடியில் வாழ்ந்த அங்குள்ள ஆண்களும், பெண்களும் மனந்திரும்பி தேவனுடைய சாயலுக்கொப்பாக மாற்றமடைந்தார்கள். நான் இங்கு குறிப்பிடும் கிராமத்தின் பெயர் வாட்டர்பீச் என்பதாகும் வாட்டர்பீச் கிராமத்தில் ஸ்பர்ஜன் 17 வயது குருவானவராக பணிசெய்த நூதனமான ஆலயத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

வாட்டர்பீச் கிராமத்தில் நான் கர்த்தருக்காகப் பிடித்த ஒரு பெரிய மீன்

நான் வாட்டர்பீச் கிராமத்தில் தேவ ஊழியம் செய்து கொண்டிருந்தபோது குறிப்பிட்ட ஒரு மனிதன் தனது தீச்செயல்களால்

என்னை இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்து கொண்டிருந்தான். நான் முதன் முதலாவது அவனைக் குறித்துக் கேள்விப்பட்டபோது துஷ்டத்தனங்களை செய்கிற அந்தக் கிராமத்திலுள்ள அனைவருக்கும் அவன்தான் தலைவன் என்று கேள்விப்பட்டேன். நல்ல உயரமும், கட்டுமஸ்தான உடற்கட்டை கொண்ட அவன் தனது கிராமத்தைச் சுற்றிப் பல மைலகள் தொலைவுக்கு வாழ்ந்த அநேகரைக் காட்டிலும் அதிகமாக மதுபானம் குடிப்பவனாக காணப்பட்டான். தேவனைப் பற்றிய ஒரு துளிதானும் பயமும், நடுக்கமும் இல்லாமல் மக்களை சபித்துச் சத்தியம்பண்ணுவான். தான் வாழ்ந்த வாட்டர்பீச் கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் வாழ்ந்த மக்கள் அனைவருக்கும் அவன் ஒரு சிம்ம சொப்பனமாக விளங்கினான். அந்த நாட்களில் கிராமங்களிலே திடீரென நெருப்புகள் பற்றி எரிந்தது. பல வீடுகளும் அந்த நெருப்பினாலே எரிந்து நாசமானது. மக்கள் அதின் காரணமாக நஷ்டங்களுக்கும், கண்ணீர்களுக்கும் உள்ளானார்கள். அந்த நெருப்புகளை எல்லாம் மேற்கண்ட மனிதன்தான் வேண்டுமென்றே வைத்தான் என்பது பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது. அப்படிப்பட்ட பஞ்சமா பாதகன் அவன். குடிக்க ஆரம்பித்தால் சில வாரங்களுக்கு தொடர்ந்து குடித்துவிட்டு கிராமங்கள்தோறும் பைத்தியக்காரனைப் போல தள்ளாடி தள்ளாடி நடப்பான்.

அப்படிப்பட்ட கொடிய மனிதன் ஒரு நாள் எனது பிரசங்கத்தைக் கேட்பதற்காக எங்களுடைய வாட்டர்பீச் ஆலயத்துக்கு வந்தான். சற்றும் எதிர்பாராத அவனது வருகையால் ஆலயத்திலுள்ள மக்கள் அனைவரின் கண்களும் அவன்மேல் நோக்கமாயிருப்பதை நான் கவனித்தேன். அவன் எனது பிரசங்கத்தைக் கேட்டு ஆச்சரிய அற்புதமாக மனந்திரும்பினான். அவனது உள்ளான மனந்திரும்புதல் அவனுடைய வெளிப்படையான வாழ்விலும் எதிரொலிக்கத் தொடங்கியது. அவன் தனது குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டான். அவனது சபித்தலும், சத்தியம்பண்ணுவதெல்லாம் அவனைவிட்டுப் போய்விட்டது. ஒரு மெய்யான மனந்திரும்புதல் அவனில் காணப்பட்டது. வாட்டர்பீச் கிராம சபை மக்களெல்லாம் அந்த மனிதனது மனந்திரும்புதலைக் கண்டு அதிசயித்தனர். அதின் பின்னர் அவன் ஒழுங்காக ஆலயத்துக்கு வந்து தேவனுடைய செய்திகளைக்கேட்டு வந்தான். மதுபானக் கடைகள் தனது கண்ணியமான ஒரு வாடிக்கையாளரை இழந்துவிட்டது. அதின் பின்னர், அவன் ஆண்டவருடைய ஊழியங்களில் எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தான். கர்த்தருக்கே மகிமை.

காட்டன்ஹாமில் நான் சந்தித்த ஒரு விந்தையான தேவ மனிதர்

வாட்டர்பீச் கிராமத்தில் நான் பணிசெய்த ஆரம்ப காலத்தில் நான் சந்தித்த ஒரு விந்தையான தேவமனிதர் சட்டன் என்பவராவார். அவர் என்னைப் பார்த்ததில்லை. எனும், நான் ஒரு பிரசித்திபெற்ற இளவயது வாலிபப் பிரசங்கியார் என்று என்னைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கின்றார். எனவே, தனது வருடாந்திர கன்வென்ஷன் கூட்டங்களில் நான் பேசும்படியாக என்னை அழைத்திருந்தார். நான் அவரது ஆலயத்திற்குச் சென்று அன்றைய நாளின் காலை வேளையில் நடைபெறவிருந்த ஆராதனையில் பங்குபெறும்படியாக குருவானவருடைய அறையில் நான் அமர்ந்திருந்தேன். அப்பொழுது வயதான தேவமனிதரான சட்டன் என்பவர் நான் இருந்த அறைக்கு வந்து என்னைச் சந்தித்தார். நான் மிகவும் இளவயதுள்ள வாலிபனாக இருப்பதைக் கண்டு அவர் மிகவும் ஆச்சரியமடைந்தார். ‘‘நீங்கள் இத்தனை சின்ன வயதில் இருப்பீர்கள் என்று தெரிந்திருந்தால் நான் உங்களை இங்கு கட்டாயம் அழைத்திருக்கமாட்டேன். காலையிலிருந்தே திருச்சபையின் மக்கள் குதிரை வண்டிகளிலும், மாட்டு வண்டிகளிலும், மற்றும் இதர வாகனங்களிலும் ஆலயத்திற்கு வந்து குவிந்தவண்ணமாக இருக்கின்றனர். அந்த அதிகமான முட்டாள்கள் உங்களிடமிருந்து என்னத்தைக் கேட்பார்களோ எனக்குத் தெரியாது என்று மிகுந்த மனச்சோர்புடன் என்னைப் பார்த்துக் கூறினார். அவருடைய வார்த்தைகளால் நான் கோபப்படாமல் ‘‘ஐயா, உங்கள் வருடாந்திர கன்வென்ஷன் உங்களுக்கு மிகவும் முக்கியமானது. நான் வேண்டுமானால் இப்பொழுதே போய்விடுகின்றேன். நான் வந்த வழியே எனக்குப் போகத் தெரியும். நான் ஊழியம் செய்கின்ற வாட்டர்பீச் சபையிலுள்ள மக்கள் என்னைப் பார்ப்பதற்கும், எனது தேவச்செய்திகளைக் கேட்பதற்கும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றார்கள்’’ என்றேன். இல்லை, இல்லை நீங்கள் இங்கு வந்துவிட்டீர்கள், உங்களால் முடிந்த அளவு நல்லவிதமாக தேவச்செய்தியைக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். உங்களுக்கு உதவியாக கேம்பிரிட்ஜ் பட்டணத்திலிருந்து வந்திருக்கும் உங்களைப் போன்ற ஒரு வாலிபனையே ஏற்படுத்தியிருக்கின்றேன். உங்கள் இளம் வயதின் காரணமாக நான் உங்களிடமிருந்து அதிகமாக ஒன்றும் எதிர்பார்க்கவில்லை’’ என்றார் அவர். அதின் பின்னர் அவர் அறையின் சுவர்புறமாகத் திரும்பி ‘‘ஓ என் அன்பே, உலகம் எத்தனையாக மாறிப்போய்க் கொண்டிருக்கின்றது! நாங்கள் எங்கள் பிரசங்கிகளாக தங்கள் தாயின் பாலைச்சூப்பிக் குடித்துக்

கொண்டிருக்கும் ஒரு பொட்டலம் பையன்களைப் பெறவேண்டியதாக விருக்கின்றதே!'' என்றார்.

அதற்கப்பால் நான் பிரசங்க பீடத்திற்கு அருகில் அழைத்துச் செல்லப்பட்டேன். அந்த வயதான தேவ ஊழியர் என் அருகில் வந்து அமர்ந்து கொண்டார். ஒருக்கால் நான் எனது பிரசங்கத்தை முடிக்கத் தெரியாமல் திணறி அறைகுறையாக இடையில் முடித்துவிட்டால் அதைத் தொடர்ந்து அவர் அதை எடுத்து நடத்தும் விதத்தில் அவர் ஆயத்தமாக அமர்ந்திருந்தார். பாட்டும், ஜெபமும் முடிந்ததும் நான் பிரசங்க பீடத்திற்கு ஏறிச்சென்று நீதிமொழிகளின் புத்தகத்தில் ''நீதியின் வழியில் உண்டாகும் நரை மயிரானது மகிமையான கிரீடம்'' (நீதி 16 : 31) என்று எனது பிரசங்கத்தை ஆரம்பித்தேன். அந்த வார்த்தையில் ''நரை மயிரானது மகிமையின் கிரீடம்'' என்று நான் சொன்னதும் அப்படியே நிறுத்திவிட்டு ''இந்த நாளின் காலை வேளையில் நான் அந்த வார்த்தையைக் குறித்து சந்தேகப்பட ஆரம்பித்தேன். இன்று காலையில் நான் முதிர் வயதான ஒரு மனிதரைச் சந்தித்தேன். அந்த மனிதர் தனது சக ஊழியர்களை எந்தவிதமான மரியாதையான வார்த்தைகளுடன் நடத்த வேண்டும் என்ற சாதாரண நடைமுறையைக் கூட அறியாதவராக இருந்தார்'' நான் எனது பிரசங்க வாக்கியத்தைத் தொடர்ந்து ''வெறும் நரை மயிரானது மட்டும் மகிமையின் கிரீடமாகிவிடாது. அந்த நரை மயிரானது நீதியினால் உண்டாகியிருக்கும் பட்சத்தில் மகிமையான கிரீடமாகும். அந்த தலையானது சிகப்புத் தலையோ அல்லது கருப்புத் தலையோ அல்லது வேறு எந்த நிறமாகவோ இருந்தாலும் பரவாயில்லை, அந்தத் தலையானது ''நீதியின் வழியில் உண்டாகும் தலை மயிரைக் கொண்டதாயிருந்தால் மட்டுமே மகிமையான கிரீடமாகும்'' என்று நான் எனது பிரசங்கத்தை தொடர்ந்து தேவ ஆவியானவரின் பெலத்தால் என்னாலியன்ற ஒரு அருமையான பிரசங்கத்தைச் செய்து விட்டு பிரசங்க பீடத்தைவிட்டு இறங்கி வந்து நாற்காலியில் அமர்ந்தேன். அந்த நேரம் அந்த சட்டன் என்ற தேவ ஊழியர் எனது முதுகில் தட்டிக்கொடுத்து ''நான் எனது 40 ஆண்டு கால குருத்துவ தேவ ஊழியத்தில் இப்படிப்பட்டதொரு அருமையான பிரசங்கத்தைக் கேட்கவே இல்லை என்றும், அன்று காலையில் தான் என்னிடம் தவறாகப் பேசிய காரியத்திற்காக மனம் வருந்துவதாகவும்'' கூறினார். எனது பிரசங்கத்தைக் கேட்டுச் சென்ற திருச்சபை மக்கள் எல்லாரும் தெருக்களில் கூட்டம் கூட்டமாக நின்று எனது பிரசங்கத்தைக் குறித்து ஆச்சரியத்துடன் பேசிக்கொண்டு நின்றனர். கர்த்தருக்கே மகிமை. அந்த நாளிலிருந்து சட்டன் என்ற அந்த தேவ மனிதர் எனது நெருங்கிய ஆவிக்குரிய நண்பரானார்.

காகங்களையும், கைம் பெண்ணையும், கொண்டு எலியாவைப் போஷித்த தேவன் என்னையும் கரம் பிடித்து நடத்தினார்.

வாட்டர்பீச் சபையில் உள்ள சிறிய தேவாலயத்தில் நான் பாஸ்ட்டராக இருந்தபோது அந்த சபையின் மக்கள் மிகவும் கொஞ்சமாகவே எனக்கு உதவி செய்ய முடிந்தது. எனது பற்றாக் குறையின் காரணமாக கேம்பிரிட்ஷ் பட்டணத்திலுள்ள ஒரு பள்ளியில் நான் ஆசிரியருக்கு உதவியாளனாகப் வேலை பார்த்துக் கொண்டே திருச்சபை ஊழியத்தையும் கவனித்து வந்தேன். சில காலத்திற்குப் பின்னர் நான் அந்த வேலையை விட்டுவிட்டு முழுமையாக பாஸ்ட்டராகவே பணிபுரிந்தேன். வாட்டர்பீச் சபையினர் எனக்கு ஆண்டுக்கு அதாவது 12 மாதங்களுக்கு 45 பவுண்டுகள் மட்டுமே சம்பளமாகக் கொடுத்தனர். அந்த சொற்பமான சம்பளத்தில் நான் தங்கியிருந்த 2 அறைகளுக்கும் நானே வாடகை கொடுக்க வேண்டியதாகவிருந்தது. அது எனக்கு மிகவும் கடினமாகவிருந்தது. சபை மக்களிடம் பணம் இல்லாததால் அவர்கள் எனக்கு கொடுக்கவில்லை என்பதை நான் நன்கறிவேன். எனினும் அந்த அன்பான மக்கள் எனக்கு அவ்வப்போது ரொட்டி, இறைச்சி போன்றவைகளைக் கொடுத்தபடியால் நான் அதை நான் தங்கியிருந்த வீட்டுச் சொந்தக்காரருக்குக் கொடுத்து எனது வாடகைப் பணத்தை அதில் ஓரளவு சரிக்கட்டி வந்தேன்.

நான் தேவ ஊழியம் செய்த வாட்டர்பீச் சபையில் ஒரு விருத்தாப்பிய மனிதர் இருந்தார். அவர் ஒரு மாபெரும் கஞ்சப்பிரபு. அவருடைய மரணத்திற்கு முன்பு அவரே தனக்கு ஒரு படுக்கையை செய்து அந்தப் படுக்கையில் தன்னை வைத்து தன்னைப் புதைக்க வேண்டும் என்றும், தனது கல்லறையானது தனது வீட்டையொட்டி ஜன்னல் பக்கமாகவே தோண்டப்பட்ட குழியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம். அதாவது அடக்கச் செலவுகள் அதிகமாகிவிடக்கூடாது என்பதற்காக அப்படி ஒரு ஏற்பாட்டை அவர் செய்தாராம். ''அந்த மனிதர் யாருக்காவது, எதையாவது தனது வாழ்க்கையில் கைநீட்டிக் கொடுத்ததை தான் ஒருக்காலும் கேள்விப்படவில்லை'' என்று அந்தச் சபையிலுள்ள ஒருவர் என்னிடம் கூறினார். ''அவரைக் குறித்து உங்களைவிட எனக்கு அதிகமாகத் தெரியும். ஒரு ஓய்வு நாளின் மத்தியான வேளை அவர் எனக்கு கொஞ்சம் பணம் கொடுத்தார். அந்தச் சமயம் எனக்கு ஒரு தொப்பி அவசியமாகத் தேவைப்பட்டது. அந்தப் பணத்தைக் கொண்டு நான் ஒரு தொப்பி வாங்கிக்

கொண்டேன்'' என்று நான் சொன்னேன். ''நிச்சயமாக அந்த மனிதர் தான் செய்த செலவுக்காக தன்னை மன்னித்திருக்கவே மாட்டார். உங்களுக்குக் கொடுத்த பணம் தனக்கு எப்படியாவது திரும்பக் கிடைத்துவிடாதா என்று அவர் மிகவும் கவலைப்பட்டிருப்பார்'' என்று அவர் எனக்குப் பதில் சொன்னார். ''அந்த முழுச்சரித்திரத்தைக் குறித்தும் நீங்கள் கேள்விப்படவில்லை. அந்த முதியவர் அடுத்து வந்த ஓய்வு நாளில் திரும்பவும் என்னண்டை வந்து திரும்பவும் கொஞ்சம் பணத்தை எனக்குக் கொடுத்து தனது பொருளாசையானது தன்னைவிட்டு மாறும்படியாக கர்த்தரிடத்தில் தனக்காக நான் ஜெபிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார். ஆண்டவர் உங்களுக்குக் கொடுக்கும்படியாக சொன்ன பணத்தில் பாதியைத்தான் கடந்த வாரம் உங்களுக்குக் கொடுத்தேன். அடுத்த பாதியை நான் உங்களுக்குக் கொடுக்காததினாலே மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டேயிருந்தேன். இரவில் ஒரு கண்ணுக்கும் என்னால் தூங்கவே முடியவில்லை'' என்று அந்த முதியவர் சொன்னதாக நான் சொன்னபோது அந்த மனிதர் ஆச்சரியத்தில் பிரமிப்படைந்தார். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை ஆச்சரியமான வழிகளில் எல்லாம் வழிநடத்தி அவர்களைப் போஷிக்கின்றார் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

நெருப்பு, நெருப்பு, நெருப்பு

ஒரு தடவை நான் வாட்டர்பீச் தேவாலயத்தில் ஒரு ஓய்வு நாளின் மத்தியான வேளை பிரசிங்கித்துக் கொண்டிருந்தபோது சபையின் மக்கள் மிகவும் தூக்க மயக்கத்தில் இருந்தனர். மாட்டிறைச்சி பொரியல் மற்றும் ஆவியில் வேகவைக்கப்பட்ட பதார்த்தங்களை நன்கு சாப்பிட்டுவிட்டு அந்த மக்கள் அங்கு வந்து அமர்ந்திருந்தபடியால் தூக்கம் அவர்களை சும்மா உட்காரவிடாததைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அநேக மக்கள் எனக்கு முன்பாக அமர்ந்து தூக்கத்தில் தலையசைத்து சாய்ந்து சாய்ந்து விழுந்து கொண்டிருந்தார்கள். அவர்களை தூக்கத்திலிருந்து எழுப்புவதற்காக பண்டைய காலத்தில் பூர்வ பரிசுத்தவான்கள் செய்தது போல நான் எனது முழு பெலத்தையும் ஒன்று சேர்த்து ''நெருப்பு'' ''நெருப்பு'' ''நெருப்பு'' என்று சத்தமிட்டேன். அவ்வளவுதான், அவர்கள் அனைவரும் தங்கள் தூக்கத்திலிருந்து உடனே நன்கு கண்விழித்துக்கொண்டார்கள். நெருப்பு எங்கே? என்று அவர்களில் பலர் என்னிடம் கேட்டனர். ''ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத பாவிகளுக்காக நரகத்தில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பைத்தான் நான் இங்கு சொல்லுகின்றேன்'' என்று கூறி நான் அமைதியாகிவிட்டேன்.

நெஞ்சிலிருந்து நீங்காத ஓர் பிரசங்கம்

1853 ஆம் வருடம் கேம்பிரிட்ஜ் பட்டணத்திலுள்ள கில்ட்ஹாலில் நடந்த ஓய்வு நாள் பள்ளி யூனியன் வருடாந்திர கூட்டத்தில் நான் தேவச் செய்தி கொடுக்கும்படியாக அழைக்கப்பட்டிருந்தேன். என்னோடு கூட மற்ற இரண்டு குருவானவர்களும் பேசும்படியாக அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரும் எனைவிட வயதில் மிகவும் மூத்தவர்கள் ஆவார்கள். வயதில் நான் மிகவும் குறைந்தவனாக இருந்தபடியால் உலக வழக்கத்தின்படி என்னை முதலில் பேசும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். அந்த நாளில் நான் பேசிய செய்தியைக் குறித்து நான் எந்த ஒரு விபரத்தையும் இங்கு குறிப்பிட இயலாதவனாக இருக்கின்றேன். எனினும், வழக்கம்போல நான் எனது தேவச் செய்தியை கர்த்தருக்கு மகிமையாக நேர்மையான விதத்தில் கூடி வந்திருந்த ஏராளமான மக்களுக்கு முன்பாகக் கொடுத்தேன். நான் எனது பிரசங்கத்தில் என்னோடு கூட பேச அழைக்கப்பட்டிருந்த என்னிலும் வயது முதிர்ந்த சக பிரசங்கிமார்களைக் குறித்து எந்த ஒரு தகாத வார்த்தையும் நான் பேசவே இல்லை. ஆனால், அந்த பிரசங்கிமார்களின் பிரசங்கிக்கும் முறை வந்தபோது அவர்கள் இருவரும் அங்கு கூடியிருந்த திரளான கூட்டத்தினருக்கு முன்பாக என்னை மிகவும் இழிவான விதத்தில் பேசிவிட்டனர். குறிப்பாக அவர்களில் ஒருவர் என் இளமையைக் குறித்து என் உள்ளம் மிகவும் வேதனைப்படும்படியான விதத்தில் பேசினார். அவர் தனது பேச்சில் ''பையன்கள் தங்களது தாடி வளருமட்டும் எரிகோவில் காத்திருந்து பிற்பாடு வந்து பெரியோருக்கு பிரசங்கம் பண்ணுவதைவிட்டுவிட்டு வேதாகம ஒழுங்கிற்கு நேர் விரோதமாகப் பேசுவது பரிதாபகரமான காரியம்'' என்று குறிப்பிட்டுவிட்டார்.

அதைக் கேட்ட நான் என்னை பிரசங்கிக்கும்படியாக அழைத்த கமிட்டி தலைவரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு கூடிவந்த திரளான மக்களைப் பார்த்து ''எரிகோவில் தாடி வளரும் மட்டாகத் தரித்திருக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டவர்கள் பையன்கள் அல்ல, நன்கு பூரணமாக வளர்ந்த மனிதராவார்கள். அவர்களுடைய தாடியின் ரோமங்கள் அவர்களுடைய சத்துருக்களால் சிரைக்கப்பட்டதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தக் காரியத்தின் சரி நிகரான உவமானம் என்னவெனில் ஒரு தேவ ஊழியன் தனது பரிசுத்த அழைப்பின் பாதையில் தேவனுக்கு விரோதமாக கொடிய பாவம் செய்து கிருபையிலிருந்து விழுந்து போவானாகில் அவன் தனிமைக்குச் சென்று தேவனோடு தனது காரியங்களைச் சரிப்படுத்தி ஒப்புரவாகி மனந்திரும்பி வருவதுதான். எந்த ஒரு

காரணமுமின்றி, அநீதியாக என்னைக் குற்றப்படுத்தி பேசிய மனிதருக்கு இந்த திரள் கூட்டத்திற்கு முன்பாக நான் கொடுக்கும் பதில் இதுதான்'' என்றேன்.

அந்த நாள் மாலை வேளை கூட்டத்தில் பங்கு பெற்றிருந்த எஸ்ஸக்ஸ் என்ற இடத்திலிருந்து வந்த ஜியார்ஜ் கோல்ட் என்பவர் எந்த ஒரு காரணமுமின்றி நான் அநீதியான விதத்தில் மற்ற பிரசங்கிமார்களினால் தாக்கப்படுவதைக் கண்டு மனம் வருந்தினார். அந்த அன்பான மனிதர்தான் பின் வந்த நாட்களில் நான் லண்டன் நகரத்திலுள்ள நியூபார்க் பெரிய தேவாலயத்தில் குருவானவராக நியமனம் பெறுவதற்கு மிகவும் உதவியாக இருந்தார்.

லண்டனிலிருந்து எனக்கு வந்த கடிதம்

1853 ஆம் வருடம் நவம்பர் மாதம் கடைசி ஓய்வு நாளின் காலை வேளை நான் வழக்கம்போல கேம்பிரிட்ஜ் என்ற இடத்திலிருந்து வாட்டர்பீச் என்ற கிராமத்திற்கு அந்த நாளின் காலை ஆராதனையை அங்கு நடத்துவதற்காக வந்து கொண்டிருந்தேன். அது ஒரு கிராமப்புற பாதை. 5 அல்லது 6 மைல்கள் தொலைவுள்ள பாதை அது. ஒவ்வொரு ஓய்வு நாளிலும் ஒவ்வொரு காலடியாக நான் எடுத்து வைத்து வருவேன். ஒவ்வொரு சமயம் பாதி தூரத்தில் ஒரு குதிரை வண்டி வரும். அதில் ஏறிச் செல்லுவேன். குதிரை வண்டியில் ஏறிச் சென்றால் மில்ட்டன் என்ற இடத்திலுள்ள சுங்கச் சாவடியில் நான் வரி கட்ட வேண்டும். அந்த வரிப்பணம் கட்ட பணம் இல்லாமல் பெரும்பாலும் கால் நடையாகவே நான் செல்லுவேன். குறிப்பிட்ட அந்தப் பனிப் பொழிவின் காலை நேரம் எனது இருதயம் தேவ அன்பால் சுடரொளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த நிலையில் நான் ஆனந்தமாக நடந்து சென்று கொண்டிருந்தேன். அந்த நாளில் நான் ஆராதனையை ஆரம்பிப்பதற்கு முன்பாக லண்டனில் முத்திரை பதிப்பிக்கப்பட்டிருந்த ஒரு கடிதம் எனக்கு வந்திருந்ததை நான் கவனித்தேன். அப்படி ஒரு கடிதம் லண்டனிலிருந்து எனக்கு வர அவசியம் இல்லை. மிகவும் பரபரப்புடன் அந்தக் கடிதத்தை நான் திறந்து பார்த்தேன். லண்டனிலுள்ள புகழ்பெற்ற நியூபார்க் தேவாலயத்தில் நான் வந்து பிரசங்கிக்கும்படியாக அதில் எனக்கு அழைப்பு வந்திருந்தது. ஒரு வேளை அந்த அழைப்பு தவறுதலாக எனக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என்று நான் நினைத்து எனக்கு அருகிலிருந்த தேவாலய மூப்பரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தேன். அவர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு அது எனக்கேதான் வந்தது என்றும், நான் எப்பொழுதாவது ஒரு நாள் ஒரு பெரிய தேவாலயத்தின் குருவானவர் பொறுப்பை எடுத்துக் கொள்ளுவேன் என்ற

பயத்திலேயே தான் இருப்பதாக அவர் கூறினார். எனினும், அந்தக் கடிதத்திற்கான திட்டமான விளக்கம் கேட்டு லட்டர் எழுதப்பட்டது.

நான் லண்டனுக்கு வரும்படியான திட்டமான தேதி குறிப்பிட்டு மற்றொரு கடிதம் துரிதமாக வந்தது. அந்த அழைப்பை நான் ஏற்றுக் கொண்டு லண்டனுக்கு பயணமானேன். லண்டனிலுள்ள ராணி சதுக்கத்திலுள்ள ஒரு ஓய்வு விடுதியில் நான் தங்குவதற்கு ஒழுங்கு செய்திருந்தார்கள். நான் ஒரு பெரிய பழபழப்பான கருப்பு நிற கோட் அணிந்திருந்தேன். வெள்ளைப் புள்ளிகள் போடப்பட்ட ஒரு நீல நிற கைக்குட்டையையும் என் மீது போட்டிருந்தேன். என்னைப் பார்த்த அந்த ஓய்வு விடுதியின் மேற்பார்வையாளர் எனது அசாதாரணமான இளமையையும், நான் வந்திருந்த கிராமப்புற பட்டிக்காட்டு நிலையையும் பார்த்து இந்த இளைஞனா லண்டனில் பிரசிங்கிக்கப் போகின்றான் என்று மிகவும் ஆச்சரியப்பட்டார்.

நான் தங்கியிருந்த அறையானது மிகவும் சிறியதாகவிருந்தது. அந்த அறையில் போடப்பட்டிருந்த சிறிய கட்டிலில் சனி இரவு முழுவதும் நான் அங்கும் இங்கும் உருண்டு புரண்டு கொண்டிருந்தேன். எனது நிலைக்காகப் பரிதாபப்படுவோர் எவருமில்லை. நான் முழங்காலூன்றி ஜெபிப்பதற்குக் கூட அந்த அறையில் இடமில்லாதிருந்தது. அந்த லண்டன் பட்டணம் முழுவதும் மானிடர்களால் நிறைந்திருந்தபோதினும் அங்கு எனக்கு ஒரு நண்பரும் இல்லாதிருந்தனர். அந்நியர்கள் நடுவில் ஒரு அந்நியனாக நான் அந்த இடத்தில் இருந்தேன். குளிரான ஓய்வு நாள் காலையில் நான் பல சந்துக்களையும், தெருக்களையும் கஷ்டப்பட்டுக் கடந்து இறுதியில் நான் பிரசிங்கிக்கக்கூடிய நியூபார்க் தேவாலயத்துக்கு வந்து சேர்ந்தேன். 1853 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் நாள் நான் எனது பிரசங்கத்தை லண்டன் பட்டணத்தில் அந்த தேவாலயத்தில் செய்தேன். அந்த நாளில் எனக்கு முன்பாக கூடியிருந்த மக்களின் எண்ணிக்கை 80 பேர் மட்டுமே. ''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது'' (யாக் 1 : 17) என்ற வசனத்தில் நான் பிரசிங்கித்தேன். அந்த நாளின் ஆராதனையில் பரிசுத்த ஆவியானவரின் ஒரு விசேஷித்த அசைவாடுதலை வந்திருந்தோர் அனைவரும் உணர்ந்திருக்கின்றனர். அந்த தேவாலயத்தின் மூப்பர் ஒருவர் எனது பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு நான் அந்த ஆலயத்தில் 3 மாத காலம் தொடர்ந்து பிரசிங்கித்து வந்தால் திரளான மக்கள் அந்த ஆலயத்துக்கு வர ஆரம்பித்து விடுவார்கள் என்று சொன்னார்.

லண்டன் பட்டணத்தின் நியூபார்க் தேவாலய குருவானவரானேன்

எனது பரிசுத்த பக்தி வாழ்க்கை, ஆத்தும பாரம், எனது பிரசிங்கிக்கும் ஆற்றல் யாவையும் கணக்கில் கொண்டு நியூபார்க் தேவாலய கமிட்டியினர் என்னைத் தங்கள் பிரமாண்டமான தேவாலயத்தின் குருவானவராக ஏற்றுக் கொண்டனர். 1854 ஆம் ஆண்டு நான் குருவானவராக அந்த பெரும் தேவாலயத்தின் பொறுப்பினை எடுத்தேன். அப்பொழுது எனது வயது 20 மாத்திரமே. அந்த தேவாலயத்தின் குருவானவராக நான் பொறுப்பேற்று எனது முதல் பிரசங்கத்தை செய்தபோது சுமார் 200 பேர்கள் அங்கு கூடியிருந்தனர். அந்த மக்கள் எத்தனை உள்ளத்தின் பாரத்தோடு ஜெபித்தார்கள் என்பதை நான் மறப்பதற்கில்லை.

சில சமயங்களில் உடன்படிக்கையின் தேவ தூதனானவர் தங்கள் நடுவில் இருப்பதாகவும், அவரிடமிருந்து ஆசீர்வாதத்தை பரிந்து மன்றாடிக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுகிறவர்களைப் போலவும் அவர்கள் காணப்பட்டார்கள். தேவாலயத்தில் கூடி வந்திருந்த நாங்கள் எல்லாரும் அமைதியான தேவ பிரசன்னத்தின் வல்லமை எங்கள் எல்லாரையும் முற்றுகையிட்டிருப்பதைக் கண்டு பிரமித்திருக்கின்றோம். அந்த தேவப் பிரசன்னத்தின் ஆளுகையில் நாங்கள் அப்படியே அமர்ந்திருப்பதைத் தவிர வேறு எதையுமே எங்களால் செய்யக் கூடாது போயிற்று. அந்தச் சமயத்தில் ''அன்பான சிநேகிதர்களே, தேவனுடைய ஆவியானவர் மிகவும் பிரத்தியட்சமாக இந்த நாளின் இராக் காலத்தில் நம் மத்தியில் அசைவாடினார். இப்பொழுது நாம் நமது வீடுகளுக்குச் செல்லுவோம். நாம் பெற்று அனுபவித்த அவருடைய கிருபை நிறைந்த தேவப்பிரசன்னத்தின் ஒளியை அப்படியே நம்முடன் பாதுகாத்து வைத்திருந்து அதை எந்த விதத்திலும் இழந்துவிடாமல் காத்துக் கொள்ளுவோம்'' என்ற முடிவுரை ஆசீர்வாதத்துடன் நான் கூட்டத்தை முடித்தேன். அதைத் தொடர்ந்து பரத்திலிருந்து ஆசீர்வாதம் இறங்கி வந்தது. தேவாலயம் மக்களால் நிறைந்து வழிந்தது. அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஜெபிக்கும் ஒரு பரிசுத்த ஜனக்கூட்டத்திற்கே நான் ஊழியம் செய்யும்படியாக ஆண்டவர் எனக்கு ஆரம்பத்திலிருந்தே கிருபைகளைத் தந்ததற்காக நான் அவருக்கு எப்பொழுதும் மகிமையைச் செலுத்துகின்றேன். தேவாலயத்தில் நாங்கள் நடத்தின ஜெபக்கூட்டங்கள் எங்கள் ஒவ்வொருவருடைய ஆத்துமாவையும் அசைப்பதாக இருந்தது. எங்கள் ஜெபக்கூட்டங்களில் பங்குபெற்ற

ஒவ்வொருவரும் தேவனுடைய புதிய எருசலேமை முற்றுகையிடும் சிலுவை வீரராகக் காணப்பட்டனர். ஒவ்வொருவரும் பரிந்து மன்றாடும் ஜெபத்தின் வல்லமையால் உச்சிதப்பட்டணத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகிறவர்களைப் போலவிருந்தனர். அதின் காரணமாக சீக்கிரமாகவே அருளின் மாமழை பரத்திலிருந்து இறங்கிற்று. சபையில் பலத்த உயிர் மீட்சி உண்டாயிற்று.

நியூபார்க் தேவாலய குருவானவராக இருந்த எனது தேவ ஊழியத்தில் மறக்க முடியாத அனுபவங்கள்.

நான் நியூபார்க் தேவாலயத்தில் குருவானவராக இருந்த ஆரம்ப நாட்களில் ஒரு நாள் நான் தேவாலயத்தின் குருவானவர் அறையில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது ஒரு அயர்லாந்து தேசத்து மனிதன் என்னைப் பார்ப்பதற்காக வந்திருந்தான். அவன் மிகவும் தாழ்மையான குரலில் ''மேன்மை தங்கிய ரெவரெண்ட் அவர்களே, ஒரு கேள்வியால் நான் உங்களை வீழ்த்துவதற்காக வந்திருக்கின்றேன்'' என்றான். ''ஓ சகோதரனே, நான் ஒரு ரெவரெண்ட் அல்ல, அந்தப் பட்டத்தை நான் விரும்புபவனுமல்ல, நல்லது, உங்கள் கேள்வியைச் சொல்லுங்கள்'' என்றேன். ''தேவன் நீதியுள்ளவர், அப்படி அவர் நீதியுள்ளவராக இருந்தால் அவர் கட்டாயம் எனது பாவங்களுக்காக என்னைத் தண்டிக்க வேண்டும். நான் தண்டிக்கப்படுவதற்கு பாத்திரனாக இருக்கின்றேன். அவர் உண்மையாகவே ஒரு நீதியுள்ள கடவுளாக இருப்பாரானால் என்னைக் கட்டாயம் தண்டித்தே ஆக வேண்டும். எனினும் நீங்கள் கடவுள் இரக்கம் உள்ளவர், அவர் பாவங்களை மன்னிக்கிறவர் என்று சொல்லுகின்றீர்கள். அது சரியாக எனது மனதுக்குப்படவில்லை. அப்படிச் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் கிடையாது. அவர் நீதியுள்ளவராக இருந்து, பாவம் செய்து அதற்குரிய தண்டனைக்கு பாத்திரமானவர்களை கட்டாயம் தண்டித்தே ஆகவேண்டும். கடவுள் நீதியுள்ளவராக இருந்து கொண்டு எந்தவிதத்தில் இரக்கம் உள்ளவராக இருக்க முடியும்?'' என்று என்னிடம் கேட்டான். ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அது சாத்தியமாகும்'' என்று நான் அவனுக்கு பதில் அளித்தேன். ''ஆம்'' என்று அவன் பதிலளித்தான். ''எனது குருவானவரும் உங்களைப் போலத்தான் பதில் அளித்தார். உங்கள் இருவருடைய பதிலும் ஒன்றாக இருக்கின்றது. அந்த சுருக்கமான பதிலை நான் விரும்பவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக தேவன் தமது நீதியை நிலைநாட்டி அதே சமயம் எந்தவிதத்தில் அவர் இரக்கமுள்ளவராக தன்னைக் காட்ட முடியும்? '' என்று அவன் என்னைக் கேட்டான்.

''சகோதரனே, நீங்கள் ஒரு கொலையைச் செய்துவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். நியாயாதிபதி உங்களுக்கு தூக்குத் தண்டனையை வழங்கிவிட்டார். ''அந்த அயர்லாந்து தேசத்து மனிதன் கட்டாயம் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட வேண்டும்'' என்று அவர் உத்தரவு கொடுத்துவிட்டார். ''கட்டாயம் நான் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்படவே வேண்டும்'' என்று அவன் பதில் அளித்தான். ''நான் உங்களை அதிகமாக நேசிக்கிறேன். நீங்கள் எந்த ஒரு நிலையிலும் தூக்கிலிடப்படக்கூடாது என்று நான் விரும்புகின்றேன். அதற்கான பிரயாசங்களை எடுத்து உங்களைக் காப்பாற்ற முயற்சிக்கின்றேன். அது சாத்தியமாகுமா?'' என்றேன் நான். ''ஒருக்காலும் அது நடக்காது'' என்றான் அவன். ''நல்லது, அப்படியானால் நான் நமது இங்கிலாந்து தேசத்தை ஆட்சி செய்கின்ற மகா ராணியிடம் சென்று ''மகாராணி அவர்களே, நான் இந்த அயர்லாந்துக்காரரை என் உயிரினும் மேலாக நேசிக்கின்றேன். அந்த நியாதிபதி அவன் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட வேண்டும் என்ற சரியான தண்டனையை அவனுக்கு வழங்கிவிட்டார். அந்த மனிதருக்குப் பதிலாக என்னைத் தூக்கிலிட்டு நீதியை நிலை நிறுத்துங்கள் என்று சொல்லுகின்றேன். ராணியார் எனது வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஒருக்கால் அவர்கள் எனது விண்ணப்பத்தை அங்கீகரித்தால் நான் உங்களுக்குப் பதிலாக தூக்கிலிடப்படுவேன். அதற்கப்பால் போலீஸ்காரர் உங்களண்டை வந்து உங்களை தூக்கு மேடைக்கு அழைத்தால் நீங்கள் செல்லுவீர்களா?'' என்றேன் நான். '' ஓ, நான் எப்படி அதற்குச் சம்மதிப்பேன். ''நீங்கள் செய்கின்ற காரியம் என்ன? அந்த மதிப்பிற்குரியவர் எனக்காக மரித்துவிட்டாரே, அதின் பின்னர் என்னுடைய விஷயத்தில் தலையிட உங்களுக்கு என்ன வந்தது? என்னைவிட்டு விலகிப் போங்கள்'' என்று நான் கூறுவேன் என்றான். ''ஆ சிநேகிதனே, சரியான பதிலைச் சொன்னீர்கள். அந்த வழியின் மூலமாகத்தான் நாம் நமது இரட்சிப்பைக் கண்டடைந்தோம். தேவன் பாவத்தை கட்டாயம் தண்டிக்க வேண்டும். இரட்சகர் இயேசு தமது பிதாவிடம் ''என் தகப்பனே, பாவிக்குப் பதிலாக நீர் என்னை அவனது ஸ்தானத்தில் தண்டியும்'' என்று கூறினார். அவருடைய பிதா அவரது விருப்பத்தை நிறைவேற்றினார். நம் எல்லாருடைய பாவப்பாரங்களையும், நம் எல்லார் மேலும் நியாயமாக வரவேண்டிய தண்டனை யாவையும் பிதாவானவர் தமது ஒரேபேரான தமது அருமைக் குமாரன் மேல் வைத்துவிட்டார். நமது பாவங்களுக்காக தேவ மைந்தன் தண்டிக்கப்பட்டுவிட்டார். யார் யார் ஆண்டவர் இயேசுவை விசுவாசிப்பார்களோ அவர்களை தண்டிப்பது பிதாவாகிய தேவனுக்கு நீதியாகாது. அப்படியே நீங்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை,

தேவனுடைய ஒரேபேரான குமாரனை விசுவாசித்தால் இரட்சிக்கப்பட்டவர்களாக உங்கள் பாதையில் களிகூர்ந்ததவர்களாகச் செல்லலாம்'' என்றேன். அந்த மனிதர் அந்த இடத்திலேயே இரட்சிப்பைப் பெற்ற மனிதராக தனது கரங்களைத் தட்டிக் கொண்டு சென்றான்.

(2)

அடுத்து ஒரு சம்பவம் நியூபார்க் தேவாலயத்தில்தான் நடந்தது. ஒரு குடிகார மனிதன் ஒரு ஓய்வு நாளின் மாலை வேளையில் குடிப்பதற்காக ஜின் என்ற மதுபானத்தை வாங்கிக் கொண்டு தேவாலயத்தின் வாசலின் வழியாக தனது வீட்டுக்குச் செல்லச் சென்றவன் எப்படியோ மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் அவன் தெய்வாதீனமாக தேவாலயத்துக்குள்ளாகத் தள்ளப்பட்டு தேவாலயத்தின் உச்சி காலரியில் வந்து நின்று கொண்டிருந்தான். அப்பொழுது தேவ ஆவியானவர் என்னில் பலமாகக் கிரியை செய்ததால் நான் அவன் நின்று கொண்டிருந்த திசைக்கு நேராகத் திரும்பி நமது தேவாலயத்தின் காலரியில் அதோ ஒரு மனிதன் நின்று கொண்டிருக்கின்றான். அவன் தேவாலயத்துக்குள் தேவனுடைய வார்த்தையை கேட்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு வரவில்லை. அவனது பாக்கெட்டில் ஜின் என்ற மதுபான பாட்டல் இப்பொழுது உள்ளது என்றேன். நான் தனி மனிதன் ஒருவனை குறிப்பிட்டு சுட்டிக்காட்டி பேசியதால் அந்த மனிதன் தனது ஆவியில் குத்தப்பட்டவனானான். எனது பிரசங்கத்தில் அடுத்து வந்த எச்சரிப்பின் வார்த்தைகளும் அவனைத் தொட்டது. அவன் உடன்தானே ஆண்டவருக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து இரட்சிப்பின் பாத்திரமானான்.

(3)

மற்றொரு சம்பவத்தில் ஒரு ஏழை விலை மாது (Harlot) அதே தேவாலயத்தில் இரட்சிப்பைக் கண்டடைந்த காரியமாகும். அந்தப் பெண் அன்றைய தினம் பிளாக்பிரையர்ஸ் பாலத்திலிருந்து தேம்ஸ் நதிக்குள் குதித்து தற்கொலை செய்வதற்காக அந்த ஓய்வு நாளின் மாலை நேரம் சென்று கொண்டிருந்தாள். தேவாலயத்தில் அப்பொழுது ஆராதனை நடந்து கொண்டிருந்ததால் தற்கொலை செய்யு முன்னர் தேவனுடைய வார்த்தையையும் கேட்டுவிட்டு போய்விடலாம் என்ற ஒரு பலமான தூண்டுதலால் ஆலயத்துக்குள் வந்தாள். ஆலயத்துக்குள் வந்த அவள் திரும்பவுமாக வெளியே செல்ல அவளால் கூடாது போயிற்று. அந்த நாளின் மாலை வேளையில் நான் ''இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே'' (லூக்கா 7 : 44)

என்ற தேவ வசனத்தின் பேரில் பிரசிங்கித்துக் கொண்டிருந்தேன். பட்டணத்திலே பாவியான ஸ்திரீயாக வாழ்ந்து கொண்டிருந்த அந்த பெரும்பாவியான பெண்ணை தேவன் கிருபையாக மன்னித்து அவளை தமது அடியாளாக மாற்றின விதத்தையும், அவள் தனது கண்ணீரால் அன்பரின் பாதங்களை நனைத்து தனது தலை மயிரால் அவைகளைத் துடைத்து அந்த பொற் பாதங்களுக்கு பரிமள தைலம் பூசிய சம்பவத்தையும் நான் விவரித்துப் பேசிக் கொண்டிருந்தேன். எனது வாயிலிருந்து புறப்பட்ட தேவனுடைய வார்த்தைகளால் தொடப்பட்ட அந்த வேசிப் பெண் தனது பாவ வாழ்க்கையே அந்த நாளில் தேவனால் விஸ்தரித்துக் காட்டப்பட்டது என்பதை தனது உள்ளத்தில் உணர்ந்து குத்தப்பட்டு, உள்ளம் உருகி தனது சொந்த பாவ வாழ்க்கையை நினைத்துக் கண்ணீர் சிந்தி அழுது தேவனுடைய இரட்சிப்பின் பாத்திரமானாள். அந்தப் பெண்ணின் மனம் மாறுதல் எனக்கு மிகுந்த சந்தோசத்தை அளிப்பதாக இருந்தது. முதலாவது அந்த ஏழைப் பெண்ணை கொடிய தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றியது. இரண்டாவது, நித்திய நரகாக்கினையின் அழிவிலிருந்து அவளது விலையேறப்பெற்ற ஆத்துமாவை தப்புவிப்பதில் நான் ஒரு கருவியாக தேவனால் பயன்படுத்தப்பட்டதை எண்ணி மகிழ்ந்தேன்.

(4)

நியூபார்க் தேவாலயத்தில் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாள் மாலையில் 1864 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் நாள் நான் பிரசிங்கித்துக் கொண்டிருந்தேன். நியூவிங்டன் என்ற இடத்தில் வசிக்கும் ஒரு மனிதர் எனது பிரசங்கத்தைக் கேட்டு ஆண்டவர் இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருந்தார். அதற்கப்பால் அவர் எனது ஆராதனைகளுக்கு ஒழுங்காக வந்து கலந்து கொண்டிருந்தார். அவர் எனது ஆலய ஆராதனைகளுக்கு வந்து கலந்து கொள்ளுவது இங்கிலாந்து தேச திருச்சபையின் அங்கத்தினராகவிருந்த அவருடைய மனைவிக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதின் காரணமாக அந்த அம்மையார் அவரை ஒவ்வொரு தடவையும் போகவிடாதபடி தடுத்து வந்திருக்கின்றார்கள்.

அந்தக் குறிப்பிட்ட ஓய்வு நாளின் இரவில் அந்த அம்மையாரின் கணவர் எனது தேவாலய ஆராதனைக்கு வந்ததன் பின்னர் என்னுடைய ஆராதனையில் என்னதான் நடக்கின்றது என்பதை கண்டறிய தனக்குள் தீர்மானித்து தன்னை மற்றவர்கள் அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக முகத்தை ஒரு தடிப்பமான முகமூடியால் மறைத்துக் கொண்டு, தன்னையும் ஒரு கனத்த சால்வையால் மூடிக்கொண்டு ஆராதனை ஆரம்பித்து

சற்று நேர கால தாமதத்திற்குப் பின்னர் தேவாலயத்தின் மேல் காலரிக்கு ஏறிச் சென்று அமைதியாக அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் அங்கு வந்து அமரவும் எனது பிரசங்க வாக்கியமாக ''யெரோபெயாமின் மனைவியே, உள்ளே வா, உன்னை அந்நிய ஸ்திரீயாக காண்பிப்பது என்ன? துக்க செய்தியை உனக்கு அறிவிக்க நான் அனுப்பப்பட்டேன்'' (1 இரா 14 : 6) என்ற எனது பிரசங்க வாக்கியம் அவர்களின் காதுகளில் அவர்கள் அதிர்ச்சியடையத் தக்கவிதத்தில் விழுந்தது. நான் தொடர்ந்து பேசிய வார்த்தைகள் அந்த அம்மையாரின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியது போல இருந்தமையால் அவர்களும் தன்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவருடைய அடியாளானார்கள். அவர்களுடைய கணவன் வீடு வந்ததும், தான் வேஷம் மாறி தேவாலயம் வந்த விபரத்தையும், அன்று பிரசிங்கிக்கப்பட்ட தேவ வார்த்தையால் தான் தொடப்பட்ட விபரத்தையும், குருவானவராகிய என்னிடம் சொல்லிவிடும்படியாக தனது கணவரைக் கேட்டுக் கொண்டதையும் நான் பின்னர் அறிந்து கர்த்தருக்குள் மிகுந்த சந்தோசம் அடைந்தேன்.

(5)

அடுத்த நாள் அதாவது முன் நடந்த சம்பவம் நடந்த மறு நாள் திங்கட் கிழமை மாலை தேவாலய ஆராதனை கூட்டத்தில் நான் தேவச் செய்தியைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது நான் எனது பிரசங்கத்தை நடுவில் நிறுத்திவிட்டு குறிப்பிட்ட ஒரு திசைக்கு நேராக நான் எனது கரத்தை நீட்டி ''ஓ வாலிபனே, நீ உனது கைகளில் அணிந்திருக்கும் கை உறைகளுக்கு நீ பணம் கொடுக்கவில்லை. அவைகளை உனது முதலாளியின் கடையிலிருந்து நீ திருடியிருக்கின்றாய்'' என்று கூறினேன். அந்த ஆராதனையின் முடிவில் ஒரு வாலிபன் எனது அறைக்கு வந்தான். அவனது முகம் வெளிறிப் போயிருந்தது. அவன் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டான். நான் அமர்ந்திருந்த நாற்காலிக்கு முன்னாலுள்ள மேஜையில் தனது இரண்டு கையுறைகளையும் அப்படியே கழற்றி வைத்துவிட்டு தன் கண்களில் கண்ணீரை வடித்தவனாக ''நான் என் வாழ்க்கையில் முதல் தடவையாக இந்தக் கையுறைகளைத் திருடிவிட்டேன். இனிமேல் நான் என் வாழ்வில் இந்தக் காரியத்தை திரும்பவுமாகச் செய்ய மாட்டேன். ஐயா, இந்தக் காரியத்தை நீங்கள் வெளியே எங்கும் சொல்லிவிடாதீர்கள். அப்படித்தானே? நான் திருடின இந்தக் காரியம் எனது பக்தியுள்ள தாயாரின் காதுகளுக்குத் தெரியும் பட்சத்தில் அவர்கள் அதிர்ச்சியில் உடனே மாண்டு போய்விடுவார்கள்'' என்று என்னிடம் கெஞ்சினான்.

லண்டனில் கொள்ளை நோய் காலரா

நான் நியூபார்க் தேவாலயத்தில் குருவானவராக பதவி ஏற்று அநேகமாக 12 மாதங்கள்தான் ஆகியிருக்கும், லண்டனுக்குப் பக்கத்து இடங்களில் காலரா என்ற கொடிய கொள்ளை நோய் பரவிவிட்டது. அந்த கொள்ளை நோய் எனது திருச்சபையிலும் பலமான அழிவை உண்டு பண்ணிவிட்டது. குடும்பம் குடும்பமாக கொள்ளை நோய் தாக்கியது. ஒவ்வொரு குடும்பத்தினரும் காலரா நோயால் தாக்குண்ட தங்களது அருமையானவர்களைக் காண வரும்படியாக எனக்கு அழைப்பு விடுத்தார்கள். தினந்தோறும் கல்லறைத் தோட்டத்தில் நான் அடக்க ஆராதனை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. சரீரத்தில் வாலிபத்தின் பெலனும், தெம்பும் இருந்தமையால் ஆரம்ப நாட்களில் காலரா நோய் பிடித்த குடும்பங்களையும், நண்பர்களையும் மூலை முடுக்குகள் எல்லாம் சுற்றிச் சென்று பார்த்து, ஜெபம் பண்ணி ஆறுதல் தேறுதல் சொல்லி வந்தேன். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல நான் எனது ஆவி ஆத்துமா சரீரத்தில் மிகவும் சோர்படைந்து மனந்தளர்ந்து போனேன். எனது அருமையான நண்பர்கள் ஒருவர் பின் ஒருவராக காலரா நோயினால் மரணமடைந்து கொண்டிருந்தார்கள். என்னைச் சுற்றிலும் காலரா நோயால் பீடிக்கப்பட்டவர்களைப் போல நானும் அந்த நோயால் தாக்கப்படா விட்டாலும் சரீரப் பிரகாரமாக நான் மிகவும் பெலவீனமடைந்து சீக்கிரம் நாமும் கூட விழுந்துவிடுவோமோ என்ற ஒரு மன பயம் என்னைத் தாக்கத் தொடங்கிற்று. இன்னும் கொஞ்ச நாட்கள் மாத்திரம் அந்த நிலை நீடித்திருந்தால், அந்த அழுகையும், கண்ணீரும் இன்னும் சொற்ப நாட்கள் தொடர்ந்திருந்தால் நானும் கூட அவர்களுடன் சேர்ந்து விழுந்திருப்பேன். அந்தவித பாரத்தையும், பழுவையும் என்னால் தாங்கக் கூடாது போயிற்று.

ஒரு நாள் காலரா நோயால் பீடிக்கப்பட்டு மரித்துப் போன ஒருவரின் அடக்க ஆராதனையை நான் நடத்திவிட்டு மிகவும் துயரத்தோடு டோவர் தெரு வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அந்த நேரம், தேவன் எனது பார்வையை ஒரு திசைக்கு நேராகத் திருப்பினார். அங்கே ஒரு செருப்புத் தைக்கும் மனிதன் தனது கடை ஜன்னலில் ஒரு பேப்பரை ஒட்டி வைத்திருந்தான். அதில் ஏதோ எழுதப்பட்டிருப்பதை நான் கவனித்தேன். அந்த எழுத்து நல்ல தெளிவாகவும் தடித்த உருவத்திலும் எழுதப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் நான் அதில் ஏதோ வர்த்தக விளம்பரம்தான் எழுதியிருக்கின்றது என்று எண்ணிக் கொண்டேன். ஆனால், அருகில் வந்து பார்த்தபோது கீழ்க்கண்ட தேவ வார்த்தைகள் அதில் காணப்பட்டன:-

''எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது'' (சங்கீதம் 91 : 9, 10)

அந்த வார்த்தைகளை நான் வாசித்ததும் எனது ஆவிக்குள்ளாக உடனடியாகத்தானே பெலப்படுத்தப்பட்டேன். நான் தேவனுடைய கரத்துக்குள் முழுமையான பாதுகாப்புக்குள் இருப்பதையும், தேவன் சாவாமையை எனக்குத் தரித்துவிட்டார் என்ற ஆணித்தரமான நம்பிக்கையும் அந்த இடத்திலேயே எனக்கு உண்டாயிற்று. அதற்கப்பால், நான் காலரா நோயால் பீடிக்கப்பட்ட மக்களை எந்த ஒரு பயமும், கலக்கமும் இல்லாமல், சமாதானமான ஆவியுடன் எங்கும் தைரியமாகச் சுற்றித்திரிந்து பார்த்து, அவர்களுக்கு ஆறுதலும், தைரியமும் கூறி அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். அந்தச் செருப்புத் தைக்கும் மனிதனின் உள்ளத்தில் கர்த்தர் அந்த தேவ வார்த்தைகளை தனது கடையின் ஜன்னலில் சோர்படைந்த தமது தாசனாகிய எனக்காக எழுதி வைக்கும்படியாக அவன் உள்ளத்தை ஏவி எழுப்பிய என் தேவாதி தேவனை துதித்து ஸ்தோத்திரிக்கின்றேன்.

லண்டன் நகரத்தைச் சுற்றிலும் உள்ள மக்களை வாரிக் கொண்டிருந்த அந்தக் கொடிய கொள்ளை நோயின் நாட்களில் நான் பயத்தின் காரணமாக எங்கும் ஓடி எனது ஜீவனைப் பாதுகாத்துக் கொள்ள ஒளித்துக் கொள்ளாமல் லண்டன் பட்டணத்திலேயே தரித்திருந்து காலரா நோயால் தாக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, மரித்தவர்களைப் பார்த்து வந்தேன். அடக்க ஆராதனைகளையும் அனுதினமும் ஒழுங்காக நடத்திக் கொண்டிருந்தேன். கர்த்தருடைய ஊழியனாகிய நான் எனது தேவ ஊழியத்தின் பாதையில் கர்த்தருடைய பிள்ளைகளின் துன்ப துக்க நேரத்தில் அவர்கள் அருகில் இருந்து அவர்களை ஆறுதல்படுத்துவது எனது இன்றியமையாத கடமை என்பதை நான் பலமாக உணர்ந்தேன்.

ஒரு திங்கட் கிழமை அதிகாலை எனது வீட்டுக் கதவின் மணி பலமாக ஒலித்தது. நான் எனது ஆழ்ந்த நித்திரையிலிருந்து எழும்பினேன். அப்பொழுது அதிகாலை 3 மணி. காலரா நோயினால் மரித்துக் கொண்டிருந்த ஒரு மனிதரை நான் உடனடியாகப் பார்க்க வரும்படியாக அழைக்கப்பட்டேன். நான் செல்ல வேண்டிய இடம் லண்டன் பாலத்துக்கு அருகாமையில் எனது இருப்பிடத்திற்குச் சமீபத்தில்தான் இருந்தது. நான் அந்த இடத்திற்குச் சென்று சில படிக்கட்டுகளை ஏறி காலரா நோயால்

தாக்கப்பட்டிருந்த மனிதன் படுத்திருந்த அறைக்குள் சென்றேன். ''ஓ ஐயா, அரை மணி நேரத்திற்கு முன்னர் தான் இந்தப் பெயரையுடைய மனிதர் தன்னை வந்து நீங்கள் பார்க்கும்படியாக என்னைக் கெஞ்சி மன்றாடினார்'' என்று அவருக்கு மருத்துவம் பார்த்துக் கொண்டிருந்த தாதிப் பெண் என்னிடம் கூறினாள். ''அவருக்கு என்ன வேண்டும்?'' என்று நான் கேட்டேன். ''அவர் மரித்துக் கொண்டிருக்கிறார்'' என்று அவள் பதிலளித்தாள். ''அவர் மரித்துக் கொண்டிருப்பதை நானும் பார்க்கின்றேன். அவர் எப்படியான மனிதர்?'' என்று நான் கேட்டேன். ''பிரைட்டனிலிருந்து நேற்று இரவுதான் வீட்டிற்கு வந்திருக்கின்றார். பகற் காலம் முழுவதும் வெளியேதான் இருந்திருக்கின்றார். ஒரு வேதாகமத்துக்காக நான் தேடிக் கொண்டிருக்கின்றேன். வீட்டில் வேதாகமம் எதுவும் இல்லை. எனினும், நீங்கள் ஒரு வேதாகமம் கட்டாயம் கொண்டு வந்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்'' என்று அவள் கூறினாள். ''ஓ'' ஒரு வேதாகமம் இந்த நேரம் அவருக்கு பிரயோஜனப்படாது. அவர் சுய நினைவோடிருந்தால் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை வேத வசனங்களிலிருந்தே நான் அவருக்குச் சொல்லுவேன்'' என்று நான் கூறினேன். நான் அந்த மரித்துக் கொண்டிருந்த மனிதரின் அருகிலிருந்து அவரிடம் பேசினேன். ஆனால் அவரால் எனக்கு எந்த ஒரு பதிலும் கொடுக்கக் கூடாதிருந்தது. திரும்பவும் நான் அவரிடம் பேசினபோது அவருக்கிருந்த தனது கொஞ்ச தன்னறிவையும், தன்னை விரைந்து நெருங்கி வரும் சாவுக்கு தன்னை ஒப்புக் கொடுத்திருப்பதையும் நான் கவனித்தேன். நான் அவரண்டை சில நிமிடங்கள் நின்று கொண்டிருந்தேன். அதற்குள்ளாக அவருடைய ஜீவன் பிரிந்து சென்றுவிட்டது.

இந்த மனிதர் தான் உயிரோடிருந்த நாட்களெல்லாம் என்னைப் பரிகாசம் பண்ணுவதையே பழக்கமாக வைத்திருந்தார். மிகவும் கடினமான வார்த்தைகளால் மாய்மாலக்காரன் என்று அடிக்கடி இவர் என்னை அழைத்து வந்தார். எனினும் நான் அவரண்டை வருவதையும், நான் அவருக்கு ஆலோசனை கொடுப்பதையும் இறுதி வேளையில் விரும்பிய அவரை மரணத்தின் அம்புகள் ஊடுருவிப் பாய்ந்து வீழ்த்திவிட்டது. அந்த மனிதன் என்னை ஒரு தேவனுடைய மனிதன் என்பதை தனது உள்ளத்தால் சந்தேகத்துக்கு இடமின்றி அறிந்து வைத்திருந்தாலும் அதை தனது சொந்த நாவினால் பாதுகாக்க கவலைப்படவில்லை. அந்த மனிதரின் மரித்த சடலத்தண்டை அவருக்கு எந்த ஒரு உதவியும் நான் செய்ய இயலாதவனாக நின்று கொண்டிருந்தேன். அவர் விடுத்த அவசர அழைப்புக்கு நான்

உடனடியாக செவி கொடுத்து வந்தாலும் அவரது மரித்துப் போன சரீரத்தையும், நஷ்டப்பட்டுப்போன ஒரு ஆத்துமாவையும் தான் என்னால் காண முடிந்தது. நல்ல ஆரோக்கியமான உடல் நலத்தை தேவன் அந்த மனிதருக்கு கொடுத்திருந்த நாட்களில் கிறிஸ்து இரட்சகரை வலுக்கட்டாயமாக வெளியே தள்ளிப் போட்டு மரணத்தின் விழிம்பிற்கு வந்த நேரத்தில் எனக்கு ஆள் அனுப்பினார். காலம் பிந்திப்போன பின்னர், என்றுமாக மூடப்பட்ட கதவின் வழியாக தனது ஒப்புரவாக்குதலின் காரியத்தை செய்யப் பெருமூச்சு விட்டார். ஆனால் அவரால் அதைச் செய்யக் கூடாது போயிற்று. அவரது மனந்திரும்புதலுக்கு ஒரு துளிதானும் இடம் இப்பொழுது இல்லாமற் போயிற்று. காரணம், தேவன் அவருக்குக் கடந்த காலத்தில் மனந்திரும்புதலுக்காக கொடுத்திருந்த அருமையான தருணங்களை எல்லாம் பாழாக்கிவிட்டார்.

நான் அங்கிருந்து எனது வீட்டிற்குத் திரும்பினேன். நான் வீடு திரும்பிய சற்று நேரத்திற்கெல்லாம் வேறு ஒரு இடத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. இந்தச் சமயம் ஒரு வாலிப பெண்ணை நான் வந்து பார்க்க வரும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டேன். மேலே நாம் பார்த்த மனிதரைப் போன்று இந்தப் பெண்ணும் மரணத்தின் விழிம்பில்தான் இருந்தாள். ஆனால், ஒரு வெகு அழகான பரவசமான காட்சி அது. தான் மரணமடையப் போவதை அவள் திட்டமாக தன்னளவில் அறிந்திருந்தாலும் அவள் தன் அன்பின் ஆண்டவரைத் துதித்துப் பாடிக் கொண்டிருந்தாள். அதுமட்டுமல்ல, தன்னைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த தனது சகோதரர்களையும், தனது சகோதரிகளையும் பார்த்து தான் செல்லப் போகின்ற பரலோக இன்ப வீட்டிற்குத் தன்னைத் தொடர்ந்து அவர்களும் வரும்படியாக அவள் கேட்டுக் கொண்டிருந்தாள். தனது தாய் தந்தையர் மற்றும் தன்னைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த அனைவரிடமும் அவள் விடைபெற்றுக் கொண்டாள். தனது திருமண நாளன்று அவள் எத்தனை மனமகிழ்ச்சியாகக் காணப்படுவாளோ அத்தனை ஆனந்த மகிழ்ச்சி அவளில் காணப்பட்டது. அந்தக் காலை வேளையில் அவள் சந்தோசமுடைய வளாகவும், ஆசீர்வதிக்கப்பட்ட வளாகவும் காணப்பட்டாள். எனது வாழ்வில் அப்படிப்பட்டதோர் ஆனந்த களிகூருதலின் காட்சியை நான் ஒருக்காலும் கண்டதே இல்லை. மேலே நாம் கண்ட காட்சிகள் இரண்டில் அந்த மனிதர் ஆண்டவருக்குப் பயப்படவில்லை, அதின் பரிதாபகரமான முடிவை அவர் சந்தித்து என்றென்றைக்குமுள்ள காரிருளுக்குள் கடந்து சென்றார். ஆனால் கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடந்த அந்த இளம் பெண் மிகுந்த

ஆர்ப்பரிப்போடு தனது பரம எஜமானருடைய நித்திய சந்தோசத்துக்குள் பிரவேசித்தாள்.

லண்டனில் நான் மேற்கொண்ட எனது ஆரம்ப கால ஊழிய நாட்களில் தேவனுடைய அபரிதமான ஆசீர்வாதங்கள் என்னோடு இருந்தது. எனது ஊழியத்தின் மூலமாக இரட்சிப்பின் சந்தோசத்தைக் கண்டு கொண்ட ஆத்துமாக்கள் மற்றும் ஆவிக்குரிய தேவ ஆலோசனைகளைப் பெற விரும்புவோர் என்னிடம் வரலாம் என்று நான் ஒரு குறிப்பிட்ட நாளைக் குறித்து அந்த நாளில் நியூபார்க் தேவாலயத்தை திறந்து வைத்துக் காத்திருந்தால் போதும். எனது காத்திருப்பு ஒருக்காலும் வீண்போவதே இல்லை. காலையிலிருந்து நான் அமர்ந்திருந்தால் ஒருவர் பின் ஒருவராக மக்கள் வந்து கொண்டேயிருப்பார்கள். அவர்கள் தாங்கள் தங்கள் ஆண்டவரண்டை வந்த விதத்தை கதை கதையாகச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். கர்த்தருக்குத் துதி உண்டாவதாக. அந்த அன்பான மக்களைச் சந்தித்து நான் எனது காலை ஆகாரத்தையும் மறந்து இறுதியாக எனது மத்தியான சாப்பாட்டையும் விட்டுவிட்ட நாட்கள் பல உண்டு. எனினும், ஆத்துமாக்கள் பேரில் இருந்த எனது வாஞ்சையால் அந்த ஆகாரங்களைப் பற்றிய நினைவுகள் எல்லாம் பறந்தோடிப் போய்விட்டன.

பூலோகில் இறுதி ஆண்டு

உலகத்தின் மாபெரும் தேவ மனிதர்களான ஜாண்பன்னியன், ஜியார்ஜ் ஒயிட் பீல்ட், ஜாண் கால்வின் போன்றவர்களைப் போன்று நல்ல நடுத்தரமான வயதிலேயே ஸ்பர்ஜனும் கர்த்தருடைய பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். நீண்ட நாட்கள் கட்டில் கிடையாகக் கிடந்து அவதிப்படாமல், மற்றவர்களுக்கு எந்த ஒரு தொந்தரவும், சிரமமும் கொடாமல் அவருடைய ஆவி மிகுந்த தேவ சமாதானத்தோடு தான் அதிகமாக நேசித்த தன் அருமை நேசரண்டை கடந்து சென்றது.

1891 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி காலையில் அதாவது புத்தாண்டுக்கு முந்தின தினம் ஸ்பர்ஜன் தனது முக்கியமான நண்பர்களுக்கு தனது வீட்டின் அறையில் இருந்தவாறே இரண்டு தேவச் செய்திகளைக் கொடுத்தார். தனது வீட்டின் அறையில் இருந்தவாறே 1892 ஆம் ஆண்டு ஜனுவரி மாதம் 10 ஆம் தேதியும் 17 ஆம் தேதியும் 2 சிறிய ஆராதனைகளையும் அவர் நடத்தினார். இந்த உலகத்தில் அவர் கடைசியாக நடத்திய 17 ஆம் தேதி ஆராதனையில் அவரே முடிவுரையாக ஆசீர்வாதம் கூறி முடித்தார். அடுத்த

15 நாட்களில் தனக்கு என்ன நேரிடப்போகின்றது என்பதை மனதில் தீர்க்கத்தரிசனமாக முன் அறிந்தவரைப் போன்று தனது இறுதி விடைபெறும் பாடலையும் அவரே தெரிந்து கொண்டார். அந்த ஆங்கிலப் பாடலின் வரிகள் கீழ்க்கண்டவாறு இருந்தது.

The Sands of time are sinking
The dawn of heaven breaks,
The summer morn I have sighed for,
The fair sweet morn awakes,
Dark, dark hath been the midnight,
But dayspring is at hand,
And glory, glory dwelleth
In Immanuel's land.

அடுத்து வந்த 2 நாட்களும் காற்று பலமாக வீசியது. அதின் காரணமாக அவரால் கொஞ்ச தூரமே நடக்க முடிந்தது. எனினும் அடுத்த நாளான புதன் கிழமை ''மான்றி'' என்ற சிறிய கிராமம் வரை அவரால் நடந்து செல்ல முடிந்தது. அந்த நாளின் பிற்பகுதியில் அவரது வலது கையில் வீக்கம் காணப்பட்டது. அதைத் தொடர்ந்து மற்ற பெரிய நோயின் அறிகுறிகளும் அவரது உடலில் தென்பட்டன. துரிதமாகவே அவர் தனது படுக்கைக்குச் சென்றார். அதிலிருந்து அவர் ஜீவனோடு எழும்ப முடியாமற் போயிற்று. அந்த வாரத்தின் கடைசியில் அவர் தனது காரியதரிசியிடம் ''எனது தேவ ஊழியம் முற்றுப் பெற்றுவிட்டது. நான் பெலவீனப்பட்டிருக்கும் இந்த நோயிலிருந்து தான் இனி சுகமடையப் போவதில்லை'' என்று கூறி மற்றும் பல காரியங்களையும் சொல்லியிருக்கின்றார்.

பிரசங்க வேந்தரின் பரம கானான் பிரவேசம்

1892 ஆம் ஆண்டு ஜனுவரி மாதம் 31 ஆம் தேதி ஓய்வு நாளின் நள்ளிரவு 11 மணி ஆகி 5 நிமிடங்கள் கடந்து சென்றிருந்த நேரத்தில் ''மோட்ச பிரயாணம்'' புஸ்தகத்தில் நாம் வாசிக்கின்ற சத்திய வீர தீரர் உச்சித பட்டணத்திற்குள் பிரவேசித்தபோது அந்தப் பட்டணத்தின் எக்காளங்கள் எல்லாம் அவரை வாழ்த்தும்படி முழங்கினது என்ற வாசகத்தின்படி தேவபக்தன் பரம கானானுக்குள் பிரவேசித்தார். அவருடைய மரணச் செய்தியை மக்களுக்கு அறிவிக்க பட்டணத்தின் எக்காளங்கள் எல்லாம் உடனே முழங்கின. வேல்ஸ் நாட்டு இளவரசரும், ராணியும் தங்கள் இரங்கல்

செய்தியை முதலாவதாக அவருடைய மனைவி சூசன்னா ஸ்பர்ஜனுக்குத் தெரிவித்தார்கள்.

ஸ்பர்ஜன் மரித்த அன்றைய தினம் இரவு 10 மணிக்கு சற்று பின்னால் ஒரு கூட்டம் தேவதூதர்கள் அவர் மரணப்படுக்கையிலிருந்த மெண்டன் என்ற இடத்திலுள்ள அவரது வீட்டிற்கு மேலாகப் பறந்து கொண்டிருந்ததை தான் பார்த்ததாக ஜோசப் ஹெரால்ட் என்ற தேவ பிள்ளை கூறினார்கள்.

தெற்கு லண்டன் பட்டணம் இத்தனையானதொரு ஜனத்திரள் ஊர்வலத்தை அதின் சரித்திரத்திலேயே கண்டிருக்காது. 100000 மக்களுக்கும் குறைவில்லாமல் அந்தக் கூட்டம் இருந்தது. 1892 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் நாள் ஸ்பர்ஜனின் பிரேத ஊர்வலம் கூடார தேவாலயத்திலிருந்து 5 மைல்கள் தொலைவில் இருந்த நார்வுட் கல்லறைத் தோட்டத்திற்கு மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. அந்தப் பரம கானான் ஊர்வலக் காட்சியை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். சரியாக 18 வருடங்களுக்கு முன்பாக இந்த ஊர்வலத்தைக் குறித்து தேவ மனிதர் தனது பிரசங்கததில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.



1874 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் தேதியாகிய கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாள் ஆராதனையின் பிரசங்கத்தின்போது ஸ்பர்ஜன் இன்னும் கொஞ்ச காலத்தில் தெருக்களில் கூட்டமாக கூடியிருக்கும் மக்கள் கூட்டத்தைக் கண்டு ''இவ்விதமாக இன்று மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றார்களே அதின் காரணம் என்ன?'' என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கேட்பார்கள். அதில் ஒருவர் ''உங்களுக்குத் தெரியாதா? இன்று அவர் அடக்கம் செய்யப்படக் கொண்டு போகப்படுகின்றார்'' என்பார். ''யார் அவர்'' என்று அடுத்தவர் கேட்பார். ''ஆம், அவர்தான் ஸ்பர்ஜன்'' ''கூடார தேவாலயத்தில் பிரசிங்கிப்பவரா?'' என்பார் அடுத்தவர். ''ஆம் அவர்தான்

இன்று அடக்கம் செய்யப்படப் போகின்றார்'' என்று மற்றவர் கூறுவார். அந்த நாள் நெடுந்தூரத்தில் இல்லை. அது விரைந்து வரப்போகின்றது. என்னுடைய ஜீவனற்ற சடலம் அமைதியான கல்லறைக்குக் கொண்டு செல்லப்படப் போகும்போது நீங்கள் மனந்திரும்பியவர்களாக இருந்தாலும், இல்லாதவர்களாயிருந்தாலும் ''அந்த மனிதர் நித்தியத்துக்கு அடுத்த காரியங்களை ஒருக்காலும் பின்னுக்கு என்று தள்ளிப் போடாதேயுங்கள் என்று எத்தனை எளியதும், சாதாரணமுமான வார்த்தைகளில் நம்மைப் பார்த்துக் கூறி கெஞ்சினார்'' என்பதைக் கட்டாயம் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். ''ஆண்டவராகிய இயேசுவைப் பார்க்கும்படியாக அவர் நம்மை எவ்வளவாகக் கெஞ்சி மன்றாடினார். இப்பொழுது அவர் கல்லறைக்குச் செல்லுகின்றார், நாம் நமது பாவத்தில் மடிந்தால் நமது இரத்தப் பழிக்கு அவர் உத்திரவாதி அல்ல'' என்பதை சிந்தித்துக் கொள்ளுங்கள். ''வாழ்நாட்காலம் மிகவும் குறுகியது''

ஸ்பர்ஜனின் மரணச் செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்பட்டது. அந்தச் செய்தி அறிவிக்கப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் இந்த உலகத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்கள் எல்லாரும் அந்த மரணச் செய்தியை தங்கள் சொந்த வீட்டின் மரணச் செய்தியாக எடுத்துக் கொண்டு கண்ணீர் சிந்தினார்கள். மென்டன் பட்டணத்திலுள்ள தபால் நிலையத்தில் சூசன்னா ஸ்பர்ஜனுக்கு இரங்கல் செய்திகள் உலகமெங்கிலுமிருந்து வந்து குவிந்தவண்ணமாக இருந்தன.

பற்பலவிதமான வண்ண வண்ண மலர்க்கொத்துக்கள் சூசன்னா ஸ்பர்ஜனுக்கு அவர்களது சிநேகிதிகளாலும், நண்பர்களாலும் அனுப்பப்பட்டிருந்தன. அவைகளை அவர்கள் அதிகமாக விரும்பாமல் தன்னுடைய பிதாவின் சந்நிதிக்கு ஜெயவீரனாகப் பிரவேசிக்கும் தனது கணவருக்கு அதற்கு அடையாளமாக குருத்தோலைகளை மாத்திரம் கொண்டு வரும்படியாக அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

ஒலிவமர பிரேதப் பெட்டியின் கால் மற்றும் தலைமாட்டில் கீழ்க்கண்ட வாசகங்கள் எழுதப்பட்ட தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன :-

என்றும் எங்கள் அன்பின் நினைவில் இருக்கும்,
சார்லஸ் ஹட்டன் ஸ்பர்ஜன்
பிறப்பு :- கெல்விட்டன், 1834 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாள்.
இயேசுவில்நித்திரையடைந்த நாள் :-
மென்டன், 1892 ஆம் ஆண்டு ஜனுவரி 31 ஆம் நாள்.

''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்''

தேவமனிதர் ஸ்பர்ஜனின் ஞாபகார்த்த ஆராதனையும், அடக்க ஆராதனையும் 7/2/1892 முதல் 11/2/1892 வரை கூடார தேவாலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. கூடார தேவாலயத்தில் அவர் நீண்ட நாட்கள் பயன்படுத்தியிருந்த அவருடைய பரிசுத்த வேதாகமம் பிரேதப் பெட்டியின் மேல் வைக்கப்பட்டிருந்தது. ''பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்'' (ஏசாயா 45 : 22) என்ற பகுதி திறந்து வைக்கப்பட்டிருந்தது. அந்த தேவ வார்த்தையின் மூலமாகத்தான் அவர் 1850 ஆம் ஆண்டு தனது இரட்சிப்பின் சந்தோசத்தைப் பெற்றிருந்தார்.

ஸ்பர்ஜனின் அடக்க ஆராதனையின் பிரதான இறுதிப் பகுதியை பாஸ்டர் ஆர்ச்பால்ட் ஜி. ப்ரெளன் என்ற தேவ மனிதர் எடுத்து நடத்தினார். அவர் பேசிய வெகு அருமையான பொருத்தமான வார்த்தைகள் எல்லாம் அவருடைய இருதயத்திலிருந்தே நேரடியாக வருவதாக இருந்தது. அவர் தனக்கு முன்பாக பிரேதப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ஜீவனற்ற ஸ்பர்ஜனின் சடலத்தைப் பார்த்து இவ்விதமாகப் பேசினார் : -

''அருமையான தலைவர் அவர்களே, உண்மையுள்ள பாஸ்டர் அவர்களே, பிரசங்கிகளின் பிரசங்க மன்னன் அவர்களே, அருமை சகோதரன் அன்பு ஸ்பர்ஜன் அவர்களே, நாங்கள் உங்களுக்கு இறுதி விடை கொடுப்பதற்காக அல்ல கொஞ்ச காலம் மட்டும் பிரிந்து பின்னர் ஒன்று கூடிக்கொள்ளும் ''நல் இரவு வந்தனம்'' சொல்லுவதற்காகவே இங்கு கூடி வந்துள்ளோம். மீட்கப்பட்வர்கள் உயிர்த்தெழும்பக்கூடிய அந்த முதலாம் நாள் அதிகாலையில் நீங்கள் விரைந்து எழும்புவீர்கள். அந்த ''நல் இரவு'' வாழ்த்தை நாங்கள் அல்ல, நீங்கள்தான் கூறிக்கொண்டு உங்கள் தூக்கத்திற்குச் செல்லுகின்றீர்கள். நாங்கள் பொல்லாங்கனுடைய இருளுக்குள் கிடந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் போது நீங்கள் தேவனுடைய ஆச்சரியமான ஒளியில் இருக்கின்றீர்கள். எங்களுடைய இராக்காலமும், அத்துடன் கூடவே எங்களுடைய அழுகையும், அங்கலாப்பும் வெகு சீக்கிரமாகவே கடந்து செல்லும். அதற்கப்பால், நாங்களும், எங்கள் பாடல்களும் உங்களுடன் இணைந்து உயிர்த்தெழுதலின் காலை வேளையை ஒன்றாகச் சந்திப்போம். அதற்குப் பின்னர் இருளும், இராக்காலமும், கார் மேகங்களும் எக்காலத்தும் கிடையாது.

பணிக்களத்தின் கடின உழைப்பாளியே, உங்களுடை பிரயாசங்கள், பாடுகள் முடிந்துவிட்டது. உங்கள் உழவுகாலை நேராக உழுதீர்கள். கலப்பையில் கை வைத்த உங்களது பார்வையை இந்த உலகத்தில் எதுவுமே பிரிக்க இயலாது போயிற்று. உங்களது பொறுமையான விதைப்பின் காரணமாக அறுவடைகள் தொடர்ந்தவண்ணமாக இருந்தது. உங்களது அரிக்கட்டுகளால் பரலோகம் நிரம்பியுள்ளது. வருகிற ஆண்டுகளிலும் அந்த அரிக்கட்டுகள் அங்கு சென்று கொண்டே இருக்கும்.

தேவனின் வெற்றி வீரனே, உங்கள் யுத்தம் நீளமானதும், உங்கள் வெற்றி அனைவராலும் புகழ்பாடக் கூடியதுமாகவிருந்தது. நீங்கள் உங்கள் கரத்தில் பிடித்திருந்த உங்கள் கருக்கான பட்டயம் இறுதியாக உங்கள் கரத்திலிருந்து விழுந்தபோது அந்தக் கரத்தில் வெற்றிப் பவனியின் குருத்தோலை அமர்ந்து கொண்டது. யுத்தக் களத்துக்காக நீங்கள் உங்கள் தலையில் அணிந்திருந்த உங்கள் தலைச்சீரா இனி உங்களுடைய கண்ணின் புருவத்தை அழுத்தி உங்களுக்கு வேதனையைக் கொடுக்காது. யுத்தத்தைக் குறித்த எண்ணங்களால் நீங்கள் இனி ஆயாசமடையத் தேவையில்லை. ஜெயங்கொள்ளுகிறவனுக்கான முழு வெற்றி வாகையையும் உங்கள் மாபெரும் தளபதியாம் கர்த்தர் ஏற்கெனவே உங்கள் சிரசில் நேர்த்தியாக சூட்டிவிட்டார்.

உங்கள் மண்ணுக்குரிய சரீரமான உங்கள் அருமையான தூசி இந்த மண்ணுலகத்தில் கொஞ்ச காலம் இளைப்பாறட்டும். அதற்கப்பால் உங்கள் அருமை நேசர் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காள தொனியோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது உங்களுடைய சரீரம் வானவருடைய சாயலுக்கொப்பாக மறுரூபம் அடைந்து தனது மண்ணறையிலிருந்து ஆனந்தக் களிப்போடு பாடிப் பறந்து செல்லும். அந்த நாள் வரை எங்கள் அருமை சகோதரனே, தூங்கி இளைப்பாறுங்கள். நாங்கள் உங்களுடைய பரிசுத்தமான வாழ்வுக்காகவும், மாபெரும் தேவ ஊழியங்களுக்காகவும், ஆண்டவருடைய ராஜ்யத்துக்காக நீங்கள் ஆதாயம் செய்த ஆத்துமாக்களுக்காகவும் நம் ஆண்டவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றோம். நம்முடைய கர்த்தரின் நித்திய இரத்த உடன்படிக்கையின் காரணமாக நாங்களும் உங்களுடன் சேர்ந்து அந்த அன்பின் ஆண்டவரை நித்திய நித்திய காலமாக துதித்து ஸ்தோத்தரித்து ஆர்ப்பரிப்போம் என்று நிச்சயமாக நம்புகின்றோம். அந்த பாக்கிய நாளை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

ஸ்பர்ஜன் மாதந்தோறும் வெளியிட்ட ''பட்டயமும், மண்வெட்டியும்'' '' Sword And the Trowel '' என்ற அவரது பத்திரிக்கை யானது அவரது மரணத்தைக் குறித்த விசேஷித்த பதிப்பை வெளியிட்டது. அந்தப் பதிப்பில் இப்படி ஒரு செய்தி வெளியாகியிருந்தது

''நாங்கள் ஸ்பர்ஜனின் கல்லறையைச் சுற்றிக் கூடியிருந்தோம். மேகம் நிறைந்த வானில் ஒரு நீல நிற வெற்றிடம் காணப்பட்டது. பரலோகில் உள்ள மகிமையின் தேசத்தை அது எங்களுக்கு நினைப்பூட்டுவதாக இருந்தது. பாஸ்டர் ஆர்ச்பால்ட் ஜி.ப்ரௌண் தனது இறுதி செய்தியைக் கொடுக்கையில் ஒரு புறா கூடார தேவாலயத்தின் திசையிலிருந்து பறந்து வந்து கல்லறையைச் சூழ்ந்து நின்ற திரளான கூட்டத்திற்கு மேலாகச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. அடக்க ஆராதனை நடந்து கொண்டிருக்கும் வேளையில் தனது நெஞ்சில் சிகப்பு பட்டை நிறத்தைக் கொண்டிருந்த ஒரு ராபின் பறவை பக்கத்து கல்லறை ஒன்றிலிருந்து தனது இனிய நாதத்தைப் பாடிப் பொழிந்து கொண்டே இருந்தது. அன்பின் ஆண்டவர் இயேசுவின் நெற்றிப் புருவத்தில் குத்தி அவருக்கு வேதனை கொடுத்துக் கொண்டிருந்த ஒரு முள்ளை அது பறந்து சென்று கொத்தி எடுத்ததின் காரணமாக அதின் நெஞ்சில் இரத்த வண்ணம் உண்டானதாக ஒரு கதை உண்டு. அதை எல்லாம் நாங்கள் நம்பாவிட்டாலும், தேவனுடைய சத்தியத்தைப் பிரசங்கிக்க ஸ்பர்ஜன் வாழ்ந்ததையும், அதைக் காப்பதற்காக மரித்ததையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம். ''ஸ்பர்ஜனுடைய அடக்க ஆராதனையானது எளிமையைப் பிரதிபலிப்பதாகவும், அவருடைய உள்ளம் விரும்பத்தக்க விதத்தில் இருதயப்பூர்வமாகவும் அமைந்திருந்தது'' என்று அதில் கலந்து கொண்ட பலரும் பேசிக் கொண்டனர். ஒலிவ மரத்தால் செய்யப்பட்ட அவருடைய பிரேதப்பெட்டி கல்லறைக் குழிக்குள் இறக்கப்படும் பொழுது அந்த மேன்மையான தேவ மனிதரின் பெயர் காணப்படாமல், பெட்டியின் மேலுள்ள தேவனுடைய வசனம்தான் காணப்பட்டது. பெட்டியின் மேல் திறந்த வேதாகமம் இருந்தது. அதை வைத்துப் புதைக்கவில்லை. இறுதியில் அதை வெளியே எடுத்துவிட்டார்கள்.

தேவ மனிதர் ஸ்பர்ஜனின் ஆவிக்குரிய பரிசுத்த குணாதிசயங்கள்

எனது பரம எஜமானரின் சத்தியத்தை நான் இந்த ஜனங்களுக்கு கவலையீனமாக பிரசிங்கித்தாலோ அல்லது அதில் எந்த ஒரு பகுதியையாவது நான் மறைத்து வைத்து அறிவித்தாலோ நான் இந்த உலகத்தில் பிறவாதிருந்தால்

எனக்கு நலமாயிருக்கும். தேவனுடைய வார்த்தையை நான் இந்த ஜனங்களுக்கு வேடிக்கை விளையாட்டாகப் பிரசிங்கித்து இந்த மக்களின் விலையேறப் பெற்ற ஆத்துமாக்களை நான் அழிப்பவனாக இருப்பேனானால் நான் ஒரு பிரசிங்கியாக இருப்பதைக் காட்டிலும் ஒரு பிசாசாக இருப்பது எனக்கு நலமாயிருக்கும். எல்லா மனிதரின் இரத்தப் பழிகளுக்கும் நான் நீங்கலாகி நான் எனது கரங்களை சுத்தமாகக் காத்துக் கொள்ளுவதே எனது ஆசைகளில் எல்லாம் உயர்ந்த ஆசையாகும். ஜியார்ஜ் பாக்ஸ் என்ற பரிசுத்தவான் தான் மரிக்கும்போது ''நான் சுத்தமுள்ளவனாக இருக்கின்றேன், நான் சுத்தமுள்ளவனாக இருக்கின்றேன்'' என்ற வார்த்தைகளுடன் மரித்ததுபோல நானும் என் முழு மனதார அந்த வார்த்தைகளுடன் மரிக்கவே கதறுகின்றேன்'' என்றார் ஸ்பர்ஜன்.

இயேசு இரட்சகரே அவரின் வாழ்வின் உயிர்நாடியாக இருந்தார். 1855 ஆம் ஆண்டு தனது 20 ஆம் வயதில் எக்ஸ்டர் ஹால் என்ற இடத்தில் ''நித்திய நாமம்'' என்ற பொருளில் அவர் பிரசிங்கித்தபோது ''கிறிஸ்து தேவனுடைய வல்லமையும், ஞானமுமானவர்'' ''உயர்த்தப்பட்ட கிறிஸ்து'' ''நம்முடைய பஸ்காவாம் கிறிஸ்து'' ''உடன்படிக்கையில் கிறிஸ்து'' ''உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்த்த கிறிஸ்து'' என்றெல்லாம் பேசிவிட்டு தனது பிரசங்கத்தின் முடிவில் ''ஸ்பர்ஜனின் நாமம் அழிந்து ஒளியட்டும், இயேசுவின் நாமம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கட்டும். இயேசு! இயேசு! இயேசு! எல்லாருக்கும் மா உன்னத கர்த்தராக அவரை முடிசூட்டுங்கள் என்று கூறிவிட்டு தனக்குப் பின்னாலுள்ள நாற்காலியில் மயங்கி விழுந்துவிட்டார்

ஒவ்வொரு ஓய்வு நாளிலும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தேவனுடைய வார்த்தைகளைப் பிரசிங்கித்த அவர் ஒரு மாபெரும் ஜெப மாந்தனாக இருந்தார். அடுத்து வரும் ஓய்வு நாளில் மக்களுக்கு தேவச் செய்தி கொடுப்பதற்காக சனிக்கிழமையே தேவனோடு போராடி அவரிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக தனிமைக்குச் சென்றுவிடுவார். அவர் அங்கு எவ்விதமாகத் தன் ஆண்டவரோடு போராடினார் என்பதை எந்த ஒரு மனிதக் கண்களும் கண்டதே கிடையாது. நமது முற்பிதா யாக்கோபு, யாப்போக்கு ஆற்றங்கரையில் தன் கர்த்தரோடு போராடி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டது போல ஸ்பர்ஜனும் ஜெபத்தில் போராடி தேவனுடைய சமூகத்திலிருந்து அவர் கொண்டு வந்த செய்திகள் மூலமாக ஏராளம், ஏராளமான மக்கள் அன்பின் ஆண்டவருடைய இரட்சிப்பின் பாத்திரங்களாக மாற்றம் பெற்றனர். அப்படி அவர் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஒரு

ஓய்வு நாளில் பிரசிங்கிப்பதை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். ஸ்பர்ஜனின் ஆண் மக்களான இரட்டையர்கள் (Twins) சார்லியும், தாமசும் பிரைட்டன் என்ற இடத்திலுள்ள பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது அவருடைய மகன்களில் ஒருவன் ''அப்பா, நாங்கள் எங்கள் பள்ளியில் உள்ள எங்கள் வகுப்பு ஆசிரியரின் வரவேற்பு அறையில் நாங்கள் சில மாணவர்களாகக் கூடி ஜெபித்து வருகின்றோம்'' என்று ஸ்பர்ஜனுக்கு எழுதியபோது அவர் தனது பதிலில் ''உங்களுடைய பள்ளியில் ஜெப ஆவி அசைவாடுவதையும் அதில் நீங்கள் பங்கு பெறுவதையும் கேள்விப்படும் போது என் உள்ளம் ஆனந்த சந்தோசத்தால் பொங்குகின்றது. நீங்கள் ஆண்டவர் இயேசுவை அதிகமாக நேசிப்பதையும், நீங்கள் ஜெபமாந்தராக இருப்பதையும் அறிவதே எனது சந்தோசங்களுக்கெல்லாம் கிரீடமான சந்தோசமாகும். நீங்கள் ஆண்டவரை பிரசிங்கிக் வேண்டுமென்பதை நான் அதிகமாக விரும்புகின்றேன். ஆனால், ஜெபிப்பதே மிகவும் அருமையான காரியமாகும். ஜெபிக்காமல் பிரசிங்கித்த அநேக பிரசங்கிமார்கள் உதவாக்கரைகளாகத் தேவனால் தள்ளப்பட்டுப் போனார்கள் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளும் அதே நேரத்தில் உத்தம இருதயத்தோடு ஜெபிக்கக் கற்றுக் கொண்டு பிரசிங்கித்த எந்த ஒரு தேவ ஊழியனும் தன் தேவனால் கனத்தையும், மகிமையையும் பெற்றுக் கொள்ளத் தவறியதில்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது'' என்று எழுதினார்.

ஸ்பர்ஜன் தன் ஆண்டவருடைய ஊழியத்தின் பாதையில் கடும் உழைப்பாளியாக விளங்கினார். ''பகலுக்கு 12 மணி நேரம் உண்டு, அந்த 12

மணி நேரங்கள் நீங்கள் கர்த்தருக்காக வேலை செய்கின்றீர்களா?'' என்று அவரை ஒரு கனம் பொருந்திய மனிதர் கேட்ட போது ''நான் என் கர்த்தருக்காக நாள் ஒன்றுக்கு 18 மணி நேரம் பாடுபடுகின்றேன்'' என்று ஸ்பர்ஜன் பதில் சொன்னார். ஆம், அவர் அப்படிப் பாடுபட்ட காரணத்தால்தான் ஏராளமான புத்தகங்களை அவரால் எழுத முடிந்தது. பல்லாயிரக்கணக்கான எழுப்புதல் பிரசங்கங்களை அவரால் பிரசிங்கிக்க முடிந்தது. அவரால் வாசித்து முடிக்கப்பட்ட ஆவிக்குரிய புஸ்தகங்கள் கணக்கில் அடங்காது. ''மோட்ச பிரயாணம்'' என்ற புத்தகத்தை மட்டும் அவர் 100 தடவைகள் வாசித்து முடித்திருந்தார் என்றால் நமக்கு ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா? கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தை அவர் எத்தனை தடவைகள் வாசித்திருப்பாரோ நமக்குத் தெரியாது. ஆயிரக்கணக்கான அங்கத்தினர்களைக் கொண்ட தனது திருச்சபையின் ஆராதனை ஒழுங்குகள், சபை மக்களை சந்தித்தல் போன்ற காரியங்களுடன் அநாதை இல்லம், பாஸ்டர்கள் கல்லூரி காரியங்களை கவனித்தல் அத்துடன் அவருடைய மாதாந்திர ஆவிக்குரிய ''பட்டயமும், மண் வெட்டியும்'' என்ற பத்திரிக்கைக்கு செய்திகள் எழுதி தயாரித்து அதை அச்சிட்டு வெளியிடுதல் போன்ற அநேக காரியங்களை எல்லாம் அவரே கவனித்தார். தனது உதவிக்காக ஆட்களை அவர் வைத்திருந்த போதினும் அவர்கள் அனைவருக்கும் மேலாக அவரே அதின் பிரதான பாத்திரமாக விளங்கினார்.

ஸ்பர்ஜன் மிகவும் சிறுவனாக 17 வயதினனாக இருந்த போதிருந்தே வாட்டர்பீச் என்ற இடத்திலிருந்த சிறிய ஆலயத்தின் குருவானவராகி பின் நாட்களில் உலகப் புகழ் பெற்ற பிரசங்கியானார். அவருடைய பிரசங்க வல்லமை உலகமெங்கும் கொடி கட்டிப் பறந்தது. நிகழ்ச்சிகளை உண்மையாக தத்ரூபமாக மக்களுக்கு முன்பாக காண்பிக்கும் ஆற்றல், பொருத்தமான உவமானங்களையும், சம்பவங்களையும் பிரசங்கங்களில் புகுத்துகின்ற கிருபை, மா சிறந்த வேத அறிவு, சிறந்த பேச்சுத் திறமை, அபிநயத்துடன் சைகை காட்டி பிரசிங்கிக்கும் மேலான ஆற்றல் எல்லாம் அவரிடமிருந்தது. அவர் ஒரு பிரசங்க வேந்தராக விளங்கினார். இத்தனை தேவ கிருபைகள் அவருக்கு இருந்தபோதினும் அதைக் கொண்டு ஒரு சிறிய பெருமை கூட அவர் கொண்டதில்லை. தேவ மக்கள் அவரைத் தங்கள் தலைமேல் வைத்து துதி பாடினபோதினும் அதை எல்லாம் அவர் கண்டு கொள்ளவே இல்லை. ஸ்பர்ஜன் மிகவும் மனத்தாழ்மையுடையோனாய் தன்னுடைய ஆண்டவர் சொன்னது போல ''நான் சாந்தமும் மனத்தாழ்மையும் உடையவனாயிருக்கிறேன்'' என்ற வார்த்தையின்படி சாந்தமுடையவராகவும்,

கிறிஸ்துவின் சாயலைத் தரித்தவராகவும் காணப்பட்டார். அவரைக் குறித்துப் பேசப்படும் துதி பாடும் வார்த்தைகளை அவர் ஏற்றுக்கொள்ளவே மாட்டார். அதற்காக அவர் வேதனைப்படுவார். அவரது வாழ்வின் வாசகம் ''இனி நான் அல்ல, கிறிஸ்துவே'' என்பதாக இருந்தது. அவரது கறைதிரையற்ற பரிசுத்த வாழ்க்கை, அவரது ஞானமுள்ள தேவ ஆலோசனை, மக்களை மகிழ்விக்கும் குண நலன், மரணமே வந்தாலும் அஞ்சாமல் தேவ மக்களின் சாவு நோவு துக்கங்களில் கலந்து கொள்ளும் அவரது கல்வாரி அன்பு, தாராளமான ஈகை மனப்பான்மை, தேவனுடைய சத்தியத்தை திட்டவட்டமாக ஒளிவு மறைவின்றி தைரிய நெஞ்சினனாகப் பிரசிங்கித்தல் போன்ற மேலான ஒழுக்கசீலங்கள் எல்லாம் அவரில் நிறைந்து காணப்பட்டன.

தேவனுடைய பண விசயங்களில் மிகவும் உண்மையுடையோனாய் அவர் இருந்தார். கர்த்தருடைய ஊழியங்களுக்காக வரும் பணங்களில் தனக்கு வீடு வாசல்களைக் கட்டி, தனக்கு ஜெய ஸ்தம்பத்தை நாட்டி, தனது பின் சந்ததிக்கு ஆஸ்தி ஐசுவரியங்களை அவர் விட்டுச் செல்லவில்லை. அவரது கிறிஸ்தவ பரிசுத்த வாழ்க்கை ஒளிவு மறைவின்றி அனைவரும் கண்ணாடியில் திறந்த முகமாய் பார்க்கும் வண்ணமாக இருந்தது. அவர் அநாதைகளுக்காக ஒரு அநாதை இல்லம் ஆரம்பிக்கப் போவதாக அறிவித்த உடன்தானே ஒரு அன்பான தாயார் 20000 பவுண்டுகளை உடனே அவருக்குக் கொடுத்தார்கள். இந்த நாட்களில் அந்த தொகை ஒரு கோடிக்கும் அதிகமான மதிப்பிலான ஒரு பெருந்தொகையாகும். தேவ மனிதரின் உண்மையும், உத்தமமும் மக்களை அத்தனை நம்பிக்கையுடன் அவருக்குக் கொடுக்க வைத்தது.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலுக்குப் பின்னர் தேவ மனிதர் சார்லஸ் ஹட்டன் ஸ்பர்ஜனையே தேவன் அத்தனை வல்லமையாகப் பயன்படுத்தியிருக்கின்றார் என்று சொல்லப்படுகின்றது. அந்த பரிசுத்த தேவ மனிதர் தனது இரட்டைக் குமாரர்களில் ஒரு மகனுக்கு எழுதின கடிதத்தின் சில வரிகளோடு தேவ மனிதரின் வாழ்க்கைச் சரித்திரத்தை முடிக்கின்றேன்.

''எனக்கு அன்பான எனது சொந்த மகனே, உனது அன்பின் ஆண்டவர் இயேசுவுக்காக நீ செய்ய நினைத்திருக்கும் காரியத்துக்காக நான் மிகவும் சந்தோசம் அடைகின்றேன். உண்மையாகவே நீஅதைச் செய்யும்போது எனது உள்ளம் இன்னும் அதிகமான சந்தோசத்துக்குள்ளாகும். காலங்கள் விரைந்தோடிக் கொண்டிருக்கின்றது. அத்துடன் பொன்னான சந்தர்ப்பங்களும், வாய்ப்புகளும் பறந்தோடிச் சென்று கொண்டிருக்கின்றது. வரும் காலங்களில் நீ எத்தனை ஜாக்கிரதையும் விழிப்புமாக காரியங்களைச்

செய்தாலும் 1875 ஆம் ஆண்டில் செய்யக்கூடிய காரியங்களை 1875 ஆம் ஆண்டிலேயேதான் செய்தாக வேண்டும். அந்த ஆண்டில் செய்யாமல் விட்டுவிட்டதை எக்காலத்தும், நித்தியத்தின் முழுமையிலும் உன்னால் செய்யவே முடியாது. உனது தனிப்பட்ட வாழ்வின் பரிசுத்தத்திற்காக நீ அதிகமான கவனம் செலுத்த வேண்டும். இரட்சகர் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்ட நீ அவருக்கே சொந்தமாவாய். தேவனுடைய ராஜ்யத்தை இந்த உலகத்தில் பரவச்செய்வதின் மூலமாகவும், அவர் ஆசீர்வதிக்க விரும்பும் பாவ மாந்தரை அவரண்டை கூட்டிக் கொண்டு வருவதன் மூலமும் உனது அன்பை நேரடியாக நீ அவருக்குக் காண்பிக்கலாம். ஒரு தடவை இந்த பரிசுத்த முயற்சிகள் உன்னில் தொடங்கிவிட்டால் அது உனக்கு மிகவும் இலகு ஆகிவிடுவதுடன் அதைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற பசிதாகமும் உன்னில் அதிகரித்துவிடும். அது ஒரு கடினமான வேலையல்ல, அது ஒரு ஆனந்த மகிழ்ச்சியாகும். ''உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் முழு பெலத்தோடு செய்'' உனது ஜெப வாழ்க்கையில் நீ களிகூருவதாக எழுதியிருந்தாய். அது எனக்கு சொல்லொண்ணா மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. அந்த ஜெப வாழ்வில்தான் நீ வரும் நாட்களில் அதிகம் அதிகமாகக் களிகூர வேண்டும். அந்த ஜெப வாழ்க்கையைப் போல உனது கிறிஸ்தவ வாழ்க்கையில் உனக்கு வல்லமையைக் கொடுப்பதும், வழிக்குத் தேவையான ஒளியைக் கொடுப்பதுவும் வேறு எதுவுமே கிடையாது. தேவனுடைய சேனை வீரர்களில் நான் உன்னை எப்பொழுதும் தலைவனாகக் காண விரும்புகின்றேன். அது எப்படியாகுமென்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும் அப்படி நீ இருக்க வேண்டுமென்பதே நான் உனக்காக தொடர்ந்து செய்யும் எனது கண்ணீரின் மன்றாட்டாகும்''. உனது அன்புள்ள தந்தை ஸ்பர்ஜன்.

சகோதரனே, சகோதரியே வாழ்க்கையின் நோக்கம் இன்னதென்று அறியாமல் திகைக்கிறாயா? நீ உலகத்தில் வைக்கப்பட்டிருப்பதன் ஒரே நோக்கம் முதலில் '' இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' என்ற அனுபவத்தை (கலா 2 : 20) அடைவதும், அதற்கப்பால், நித்திய நரகத்துக்கு நேராய்ச் சென்று கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் பார்த்து ''சகோதரனே, சகோதரியே உனக்குப் புதிய எருசலேமின் மகிமையான நித்திய வாழ்வை அளிப்பதற்காக ஈனச் சிலுவையில் நீசனைப் போல் தொங்கி மரித்த நேச மீட்பரண்டை வா'' என்றழைப்பதுமே. **இதைத் தவிர வேறு எவ்வித வாழ்க்கையும் இறுதியில் பயனற்றதும், பாழுமாகவே முடியும்''**

''ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு'' *(எபே 6 : 12)*

''தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்'' *(2கொரி 4 : 4)*

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் அருமையானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ஆண்டவருடைய அருமைப் பிள்ளைகளாகிய உங்களை மீண்டும் இந்த தேவ எக்காள இதழின் மூலமாக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சந்திக்க கிருபையின் சிலாக்கியம் தந்த நம் அன்பின் தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.

கடந்த தேவ எக்காள இதழ் உங்களில் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்ததை எண்ணி கர்த்தருக்கு துதி செலுத்துகின்றேன். வாசித்த தேவ சத்தியங்களின்படி நீங்கள் உங்கள் நடைமுறை வாழ்க்கையில் ஜீவிக்கத்தக்க கிருபைகளை ஆண்டவர்தாமே உங்களுக்குத் தந்தருள்வாராக. தேவ எக்காளம் இந்த இதழுடன் தனது 37 ஆண்டுகளை நிறைவு செய்து 38 ஆம் ஆண்டுக்குள் கடந்து செல்லுகின்றது. கடந்த 37 ஆண்டு காலமாக அன்பின் ஆண்டவர் இந்த எளிய பத்திரிக்கையை அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக்கிக் கொடுத்திருக்கின்றார். தேவ எக்காளத்தை வாசித்து அதின் மூலம் ஆசீர்வாதம்பெற்ற மக்கள் எழுதும் கடிதங்கள் என் உள்ளத்தை கர்த்தருக்குள் களிகூரச் செய்வதாக இருக்கின்றன. உங்கள் அநேகரின் கடிதங்கள் நான் எனது தேக சுகத்தை நன்கு கவனித்துக் கொள்ளும்படியாகவும், நான் நீண்ட நாட்கள் இந்த உலகத்தில் உயிரோடிருந்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளக்கூடிய ஆசீர்வாதமான செய்திகளை தங்களுக்கு நான் எழுதிக் கொண்டிருக்கும்படியாகவும் எழுதுகின்ற கடிதங்கள் என் கண்களில்

கண்ணீரைத் ததும்பச் செய்வதாக இருக்கின்றது. ''தேவ எக்காளம் வந்ததும் எனது சின்ன மகள் முழுவதையும் வாசித்துவிட்டுத்தான் என்னிடம் தருகின்றாள். அதை வாசித்துப் புரிந்து கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை கர்த்தர் அவளுக்கு கிருபையாகக் கொடுத்திருக்கின்றார்'' என்று ஒரு தேவப் பிள்ளை எழுதுகின்றார்கள். ''ஒரு வீட்டு ஜெபக்கூட்டத்தில் ஒரு சகோதரன் தனது சாட்சியில் ''தேவ எக்காளம்'' பத்திரிக்கையை வாசித்து பாவ உணர்வடைந்து நரகாக்கினைக்குத் தப்பும்படி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டேன் என்று சொன்னதாக எங்களிடம் தெரிவித்தார்கள். அதைக் கேட்டு நாங்கள் ஆனந்த பரவசம் அடைந்து நம் ஆண்டவரை ஸ்தோத்தரித்தோம். கர்த்தர் கிருபையால் இப்படி எத்தனை அருமையான முத்துக்கள் உங்களுக்குரிய ஜீவ கிரீடத்தில் கர்த்தர் பதித்திருப்பார் என்று நினைக்கும்போது கண்ணீர் பெருகுகின்றது. முழங்கால்களில் நின்று தயாரிக்கப்படும் தேவ எக்காளம் பத்திரிக்கை மாபெரும் ஆத்தும அறுவடையைத் தருவது மிகவும் நிச்சயம். எங்கள் வாழ்க்கைக்கும் தேவ எக்காளம் மிகவும் ஆசீர்வாதமாக உள்ளது'' என்று ஒரு பரிசுத்த தேவப் பிள்ளை எழுதுகின்றார்கள். ''ஆவிக்குரிய பத்திரிக்கைகளில் நான் மிகவும் விருப்பமாகவும் ஆர்வமாகவும் வாசிப்பது தேவ எக்காளம் பத்திரிக்கைதான்'' என்று ஒரு சகோதரி எழுதுகின்றார்கள். ''தேவ ஆசீர்வாதத்தையும், எச்சரிப்பின் தொனியையும் ஒருங்கே சுமந்து வரும் தங்களது ''தேவ எக்காளம்'' மூலம் நாங்கள் பெற்று வரும் நன்மைகளை அளவிட முடியாது'' என்று மராட்டிய மாநிலத்திலிருந்து ஒரு பரிசுத்த தேவப் பிள்ளை எழுதுகின்றார்கள். ''தேவ எக்காளத்தின் செய்திகளைப் படிக்கிற யாவரும் ஒரு நாளும் தீங்கு செய்ய நினையார்கள். அவர்கள் அந்தச் செய்திகளை வாசித்து பரம ராஜ்யம் செல்லத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுவார்கள். நிச்சயமாக தேவனின் கடைசி தேவ எக்காளத் தொனி வானில் கேட்கும்போது ஆண்டவரைச் சந்திக்க தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளுவார்கள். தேவன் எங்களுக்கு ஒரு நல்ல மேய்ப்பனை, வழிகாட்டியை, எளியோனை ஆயத்தப்படுத்திக் கொடுத்துள்ளார்'' என்று ஒரு அன்பான சகோதரி குறிப்பிட்டுள்ளார்கள். ''உங்களது தேவ எக்காள பத்திரிக்கையால் நான் எனது ஆவிக்குரிய வாழ்வில் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றேன். எத்தனையோ கிறிஸ்தவ பத்திரிக்கைகள் வந்தாலும்முதன் முதலில் நான் வாசிப்பது தேவ எக்காளம் பத்திரிக்கைதான்'' என்று ஒரு அன்பான தேவ ஊழியர் எழுதுகின்றார்கள். ''தங்களது ஆவிக்குரிய போஜனமாகிய தேவ எக்காளம் கிடைத்தது. தங்கள் மூலமாய் கர்த்தர் கொடுக்கிற தேவ வார்த்தைகள் அதிகமாக எங்களை பரிசுத்தத்துக்கும், சுத்திகரிப்புக்கும் நேராய் நடத்தி

வருகின்றன. சுத்த மனச்சாட்சி, சுத்திகரிக்கப்பட்ட இருதயம், உபவாசம், கண்விழிப்பு, ஜெபம் ஆகிய தங்களது அனுபவங்கள், தேவ ஊழியம் செய்கின்றோம் என்று சொல்லிக் கொள்ளுகிற எங்களுக்கு பெரும் சவாலையும், நடுக்கத்தையும் உண்டுபண்ணுகின்றது'' என்று ஒரு பரிசுத்த தேவப்பிள்ளை எழுதுகின்றார்கள். ''தேவ எக்காளம் பத்திரிக்கை நேற்று வந்தவுடன் இரவு 10 மணி வரை அமர்ந்து இருந்து எல்லா செய்திகளையும் வாசித்து முடித்துவிட்டு 11 மணி வரை உங்கள் ஊழியத்திற்காக ஜெபித்துவிட்டு பின்பு படுக்கச் சென்றேன். தேவ எக்காளம் எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகுந்த பிரயோஜனமாக இருக்கின்றது. என் சிநேகிதிகளுக்கெல்லாம் வாசிக்கக். கொடுப்பேன். எங்கள் ஆலயத்திலுள்ள அனைவரும் தேவ எக்காளத்தை வாசிப்பார்கள். எங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அது ''மன்னா'' வைப் போலுள்ளது'' என்று கேரளாவிலிருந்து ஒரு சகோதரி எழுதுகின்றார்கள். இப்படி தேவ எக்காளத்தால் ஆசீர்வாதம் பெற்றோர் எழுதும் கடிதங்கள் ஏராளம், ஏராளம். எல்லா துதி, கனம், மகிமை நம் அன்பின் ஆண்டவர் ஒருவருக்கே.

இந்தவிதமாக தேவ எக்காளம் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருப்பதின் ஒரே காரணம், அது உபவாசத்தோடும், மிகுதியான ஜெபத்தோடும் முழங்கால்களில் நின்று கர்த்தர் வெளிப்படுத்திக் கொடுக்கும் தேவ தூதை எழுதுவதால்தான். ஏதோ பிரசங்கங்களை எழுதி பக்கங்களை நிரப்பாமல், ஏழைப்பாவியாகிய எனது வாழ்வின் சொந்த பரிசுத்த அனுபவங்களை உங்களுக்கு எழுதி உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைப் பிரகாசமுடையதாக்க தேவ பெலத்தால் பிரயாசப்படுகின்றேன். உங்களுக்கு எதை எதை எழுதுகின்றேனோ அதை நான் எனது நடைமுறை வாழ்க்கையில் கர்த்தரின் ஒத்தாசையால் அப்படியே அப்பியாசப்படுத்தி வருகின்றேன்.

தேவ எக்காள வெளியீட்டின் இந்த 38 ஆம் ஆண்டில் தேவன் என்னைக் கொண்டு கடந்த காலங்களில் செய்த அதிசயமான காரியங்களை எண்ணி நான் என்னில் திருப்தி அடையாமல், தேவ பிள்ளைகள் எனது ஊழியங்களைக் குறித்து புகழ்ந்து பேசும் வார்த்தைகளால் நான் என்னை உயர்வாக நினைத்து எனக்குள்ளேயே மனம் பூரிப்படையாமல் தேவ சமூகத்தில் நான் என்னைத் தரைமட்டாகத் தாழ்த்தி எனது ஒன்றுமில்லாமையை எண்ணிப் புலம்புகின்றேன். என்னைத் தமது இரத்தக் கிரயத்தால் தமக்குச் சொந்தமாக ஆட்கொண்ட என் அன்பின் நேசருக்கு நான் இதுவரை எதுவுமே செய்யவில்லை என்ற வெறுமையை நான் அதிகமாக உணருவதுடன் இனிமேல்தான் நான் என் ஆண்டவருக்கு என்னாலியன்றதைச் செய்ய

வேண்டும் என்ற எண்ணமும் என்னில் மேலோங்கி நிற்கின்றது. நான் என்னை ஏதோ ஒரு பெரிய பரிசுத்தவான் என்று எண்ணிக் கொள்ளாமல் அவ்வப்போது தேவ சமூகத்தில் முகங்குப்புற விழுந்து ''தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்'' '' ஆண்டவரே, உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்'' என்ற இரணடு ஜெபங்களையும் தேவ சமூகத்தில் நொறுங்குண்ட இருதயத்தோடு ஏறெடுத்து வருகின்றேன்.

தேவ எக்காளத்தின் 38 ஆம் பிறந்த நாளாகிய இந்த வேளையில் ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித் என்ற கனடா தேசத்து பரிசுத்தவானுடைய அனுபவத்தை அதிகமாக நினைத்து அவருடைய வார்த்தைகளை எனது சொந்த அனுபவமாக்கி அதை நான் தியானிக்கின்றேன். அந்த மனிதர் தனது அனுபவத்தை இந்தவிதமாக எழுதுகின்றார் :-

தேவனே என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்

எனது 38 ஆவது பிறந்த நாளாகிய 1927 ஆம் வருடம் நவம்பர் மாதம் 8 ஆம் தேதியன்று நான் பின்வருமாறு ஜெபித்தேன். அதாவது ''ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்''. என் ஊழியம் எனக்கு முன் இருக்கவில்லை. நாம் விரும்பிச் செய்யும் மற்ற அநேக காரியங்கள் எனக்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை.

தேவனுடைய பார்வையில் எனது சொந்த அந்தரங்க ஜீவியம் எப்படிக் காணப்படுகின்றது என்பதே எனக்குப் பிரதானமாயும், அதுவே உண்மையில் பிரயோஜனமுள்ளதாயும் இருந்தது. என் வாசிப்பு அறையில் அந்நாளில் நான் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருக்கையில் நான் ஆவியில் மன்றாடி விண்ணப்பம் செய்ததாவது ''ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்'' என்பதே.

உண்மையும் சுத்தமுமான இதயம் தேவை
இருள் சூழாத பிரகாசமான இதயம்,
உமக்கொப்பானதும், தெய்வீகமானதும்,
தூய்மையானதுமான
சுத்த இருதயத்தை எனக்கருளும் கர்த்தாவே.

இதற்கு முன் நான் ஒருபொழுதும் கண்டிராதபடி நான் செய்யும் வேலையும், நான் வாசிக்கும் புத்தகங்களும், நான் செய்யும் பிரசங்கங்களும், அதைக் கேட்க வரும் திரள் ஜனக்கூட்டமும், அந்த மக்கள் என்னைப் புகழ்ந்து

பேசும் புகழ் ஆரங்களும் எனக்குப் பிரமாதமாய்த் தோன்றவில்லை. அதற்கு மாறாக, என் சொந்த வாழ்க்கையும், என் மனதின் நினைவும், என் இருதயத்தின் தூய்மையும், நீதிநெறியான என் நடக்கையும் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையினால் கிறிஸ்துவின் சாயலாக நான் மறுரூபமாகும் காரியமே எனக்கு மிகவும் பெரிய காரியமாகத் தோன்றிற்று. ''ஆ, தேவனோடு நான் நெருங்கி ஜீவிக்க வேண்டுமே'' என்ற சொற்கள் முன் ஒரு நாளும் நினைத்திராவண்ணம் ஆச்சரியமான கருத்துடன் மிகவும் ஆழமாக என் மனதில் பதிந்தது. அப்படிக்கொத்த ஒரு அனுபவத்தை வாஞ்சித்து என் உள்ளம் கதறலாயிற்று. அவரை அறிந்து கொள்ள வேண்டும் என்றிருக்கின்றேன் என்று பிரதான அப்போஸ்தலன் பிரார்த்தித்தான். மேலும் அவன் ''கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார்'' என்றும் ''கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'' என்றும் பகர்ந்தான். ஆம், நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஆனால் நான் அப்படிச் செய்ய முடியுமா? என் ஊழியம், என் உடமைகள் இவற்றைப் பார்க்கிலும் நானே தேவனுக்கு மிகவும் மேன்மையாய் இருக்கிறேன் அல்லவா? எனது பணிவிடையை மட்டுமல்ல, என்னையே தேவன் விரும்புகின்றார்.

அதின் பின்னர் ஜெபிக்கும்படியாக அவர் என்னை வழிநடத்தினார். அவருடைய இருதயத்திற்கு என்னை ஏற்றவனாகக் கூடியதாக அவ்விண்ணப்பங்கள் இருந்தன. ''ஆண்டவரே, இதோ என் கரங்கள்! அவைகளை நான் உமக்கு அர்ப்பணம் செய்கின்றேன். உம்மைக் கனவீனப்படுத்தக்கூடிய யாதொன்றையும் அவைகள் செய்யாதபடியும், நீர் தொட விரும்பாத எதையும் தீண்டாதபடியும் அவைகள் காக்கப்படுவதாக. இதோ என் பாதங்கள்! ஆண்டவரே, அவைகளை நான் உமக்குப் படைக்கின்றேன். நீர் காணப்படாத இடங்களுக்கு அவைகள் செல்லாமலிருக்கட்டும். ஆண்டவரே இதோ என் கண்கள்! உமது பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவதொன்றையும் அவைகள் ஒருபோதும் ஏறிட்டுப் பார்க்க வேண்டாம். உமது நாமத்திற்கு அவமதிப்பானதொன்றையும் என் செவிகள் கேட்க வேண்டாம். நீர் கேட்க விரும்பாத எதையும் பேச என் வாய் திறவாதிருப்பதாக. உமது பிரசன்னத்தை அறிந்து பிழைப்பதைப் பாதிக்கக்கூடிய யாதொரு சிந்தனைக்கும், மனோபாவனைக்கும் என் மனம் இடம் கொடாதிருப்பதாக. உம்மால் தூண்டப்படாத எந்த உணர்ச்சிக்கும் ஊக்கமளிக்காமலும், எவ்வித பாசத்திலும் பற்று வைக்காமலும் என் இருதயம் காக்கப்படுவதாக'' ஆமென், என்பதே என் ஜெபம்

ஆண்டவரே சகலத்தையும் படைக்கிறேன்
நண்பர், காலம், உலக செல்வங்கள்
ஆத்துமா சரீரம் உமக்கே சொந்தம்,
முற்றும் என்றும் உமக்கே சொந்தம்.

சிதறப்படாத எனது முழு சிந்தையும் தேவன் பேரிலேயே நிலைநிறுத்தப்பட அவர் எதிர்பார்க்கிறதாக நான் கண்டேன். ஏனையவை அடுத்த ஸ்தானத்திலேயே அமைய வேண்டும். நண்பர், அருமையானவர், குடும்பம், பணம், வேலை முதலியவை நியாயமானவைகளேயாயினும், இவை யாவும் கிறிஸ்து இரட்சகருக்கே முதலிடத்தை அளிக்க வேண்டும். இரவு பகலாக என் முழுக்கவனமும் அவர் பேரிலேயே இருக்க வேண்டும். அப்பொழுது மாத்திரம் அவர் என்னை ஆசீர்வதித்து பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். அப்பொழுதுதான் அவருடைய நேசமுள்ள இருதயத்தை நான் திருப்தி செய்யக்கூடும். தேவனோடு எனக்குள்ள உறவின் இடையில் எந்த ஆளும், எந்தக் காரியமும் நுழையக்கூடாது என்று கண்டேன். மனைவியின் நேசத்தில் கணவன் முதல் இடம் பெறுவது போல, எனது இருதயத்தில் தேவனே பிரதான ஸ்தானம் பெற வேண்டும். விவாகத்தில் கணவன் மனைவியாக இணைக்கப்பட்டவருள் யாதாமொருவர் அடுத்தவர்பால் தன் முழுக்கவனத்தைச் செலுத்தத் தவறும்பட்சத்தில் விவாகமானது மகிழ்ச்சியற்ற சோகமாகிவிடுகின்றது போல தேவனோடிக்கும் எனது ஐக்கியமும் எனது சிதைவுபடாத பக்தியினாலேயே பூரணமடையக்கூடியது. இடைவிடாமல் நான் அவரை நோக்கி காத்திருக்க அவர் எதிர்பார்க்கின்றார்.

எல்லாம் இயேசுவுக்கே
மீட்கப்பட்ட வல்லமை யாவும் இயேசுவுக்கே,
என் நினைவு, வார்த்தை, செய்கை
என் நாட்கள், நேரம் யாவும் இயேசுவுக்கே.

அந்த நாளில் அவர் என்னிடம் கேட்டதை மற்றெல்லாரிடமும் கேட்கின்றார். நம்மேல் அவருக்குள்ள உரிமையை மறுக்க நாம் துணிவோமா? தமக்கென்று கேட்கும் நமது கவனத்தைப்பெற பாத்திரமான வேறொன்று இவ்வுலகில் உண்டோ? இல்லையானால் அவர் கேட்பவற்றை அவருக்களிக்க ஏன் தயங்குகின்றோம்? தேவனுக்குப் புறம்பே மெய்யான இன்பத்தை நாம் கண்டடைய முடியுமோ? பொருட்களினால் நாம் பாக்கியராய் இருக்க முடியுமோ? அழியும் பொருட்கள் நம்மை திருப்தி செய்கின்றனவா? ஒருவனுடைய ஜீவன் அவன் செல்வப்பெருக்கத்தில் இல்லை (லூக்கா 12 : 15)

தமக்கென்றே தேவன் நம்மைப் படைத்தார். நமது கூட்டுறவையும் ஐக்கியத்தையும் அவர் வாஞ்சிக்கிறார். பொல்லாததும் மாறுபாடுமான சந்ததியாராகிய இவ்வுலகத்தாரின் மத்தியிலேயே நாம் அவருடன் நிமிடம் நிமிடாக இடைவிடாமல் சஞ்சரிக்க வேண்டும். உலகத்திலிருந்து பிரிந்தவர்களாயும், பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்களாயும் வாழுகிறவர்களை வெறுக்கிற உலகம் இது. அதின் கடவுள் சாத்தானாயிருக்கிறான். பரிசுத்தவான்களாகிய டேவிட் பிரெயினார்ட், பிளட்சர் முதலியோர் இவ்வுலகில் தேவனோடு வாழ்ந்த பிரகாரமாக நான் தேவனுடன் சஞ்சரிக்க நாடினேன். நமது ஆண்டவரை சிலுவையில் அறைந்த இவ்வுலகில் அந்நியரும், பரதேசிகளுமாய் இருப்பதுதான் அவர் நம்மைப் பற்றிக்கொண்டுள்ள நோக்கமும் சிந்தையுமாகும். அப்படியிருக்க, நாம் எங்ஙனம் அவரை ஏமாறச் செய்து அவருடைய பரிசுத்த அங்கீகாரத்தைப் பெறாமல் போகத் துணிவோம்?

நாம் சமூலமாய் அவருக்கே சொந்தமானவர்களாய் இருக்கத் தேவன் விரும்புகின்றார். ஆகவே, நாம் முற்றும் அவருக்குரியவர்களாவென்று நம்மை விசாரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பாகம் மாத்திரமல்ல, நூற்றுக்கு நூறு நம்மை அவருக்குத் தத்தம் செய்து இருக்கிறோமா? சமூலமாய் நம்மையே அவருக்குப் படைத்துவிட்டோமா?

ஆ! இப்படிப்பட்ட வாழ்க்கையினால் வரும் இன்பம் எத்தனை மகத்துவமானது! இம்மையில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை. இவ்வுலகில் நாம் பெறும் வெற்றி அனைத்தும் அதற்கு ஈடு செய்யமாட்டாது. அவர் பள்ளத்தாக்கின் ''லீலி மலர்'', ''பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம்'', ''சாரோனின் ரோஜா'', ''பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்'', ''அவர் குறையில்லா நிறையழகர்''. நம்முடைய லோக சிநேகிதர்கள் இப்படிப்பட்டவர்களாக இருக்க முடியாது. நமக்கு மிகவும் அருமையானவர்கள் காரியத்திலும் நாம் நன்கு ஏமாற்றப்பட்டுப் போகின்றோம். செல்வம் நமக்குத் தாங்க முடியாதப் பாரங்களைக் கொண்டுவரும். ஆனால், தேவன் நம்மைத் திருப்தி செய்கிறார். தேவன் ஒருபொழுதும் மோசம் போக்குகிறவர் அல்ல. அவருடன் சேர்ந்து வழிநடப்பது, இவ்வுலகில் கிட்டும் இன்பகரமான பாக்கியமே. சகலமும் செம்மையாய் இருக்கிறதென்றும், தேவனுக்கும் நமக்கும் இடையில் ஒன்றும் இல்லை என்றும், எந்தப் பாவமாகிய கறுத்த மேகமும் அவர் சமூகத்தை நமக்கு மறைக்கவில்லை என்றும் அறிவது, ஆம், அதுவே மாட்சியான மோட்ச பாக்கியமாகும்.

அப்படியானால் அதற்காக ஜெபிப்போம், அதை விரும்புவோம், அதற்காக ஜீவிப்போம். ''ஆண்டவரே, என்னை உமது இருதயத்திற்கு ஏற்றவனாக்கியருளும்''.

(ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்)

மேற்கண்ட பரிசுத்த பக்தனின் வார்த்தைகளின்படி தேவ எக்காளத்தின் 38 ஆம் பிறந்த நாளில் என்னையே சமூலமாகக் கர்த்தருக்கு ஒப்புவிக்கின்றேன். அன்பின் ஆண்டவரோடு எனது தனிப்பட்ட வாழ்வில் இன்னும் அதிகமாக நெருங்கி ஜீவிக்க தேவ பெலத்தோடு பிரயாசப்படுகின்றேன். தேவப் பிள்ளைகளாகிய உங்களுக்கு மனந்திரும்புதலுக்கான அருமையான தேவச் செய்திகளை தேவ எக்காளத்தில் எழுதிவிட்டு நானே தேவனால் ஆகாதவனென்று தள்ளப்பட்டுப் போய்விடாதபடி அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலைப்போல என்னை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகின்றேன் (1 கொரி 9 : 27) இந்த இதழின் தலையங்கத்தை நான் உங்களுக்கு எழுதுகின்ற போது நான் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் எனது வழக்கமான உபவாச ஜெப நாட்களில் இருக்கின்றேன்.

நான் எனது உபவாசத்தை ஆரம்பித்ததும் எனக்குள்ள சர்க்கரை நோய்க்காக நான் ஒழுங்காக எடுத்து வந்த மாத்திரைகளை நிறுத்திக் கொண்டேன். இதற்கிடையில் எனக்கு மருத்துவ சிகிட்சை அளித்து வந்த டாக்டர் எனது பிள்ளைகளிடம் ''அப்பாவுக்கு சர்க்கரை நோய் அதிகமாக இருக்கின்றது. அவர்களை இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ளச் சொல்லுங்கள்'' என்று கூறிய வார்த்தைகளை அவர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அந்த டாக்டர் எனக்கு எழுதிக்கொடுத்த சீட்டுகளையும், என் வசம் இருந்த பல்வேறு விதமான அனைத்து மாத்திரைகளையும் எடுத்து தூர வீசி எறிந்துவிட்டு ஏசாயா 53 : 5, யாத் 15 : 26 மற்றும் எரேமியா 33 : 6 ஆகிய மூன்று தேவனுடைய வாக்குத்தத்த வசனங்களையும் பற்றிப் பிடித்துக் கொண்டு எனது உபவாசத்தை தொடர்ந்தேன். கர்த்தருடைய கிருபையால் கடந்த 5 மாத காலங்களாக நான் எந்த ஒரு மாத்திரை மருந்துகளும் சாப்பிடாமலும், மருத்துவரைப் போய் பார்க்காமலும் பரமபரிகாரியாம் நம் தேவனையே நோக்கிப் பார்த்து வருகின்றேன். தொடர்ந்து நான் எனது விசுவாசத்தில் நிலைத்திருந்து கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த தேவப் பிள்ளைகளாகிய நீங்களும் ஏழைப்பாவியாகிய எனக்காக அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நம்முடைய விலையேறப்பெற்ற ஆத்துமாவை எப்படியாவது நஷ்டப்படுத்தி எரிநரகம் கொண்டு செல்ல காத்திருக்கும் தந்திர சாத்தான்

பரிசுத்த பக்தன் ஜாண் பன்னியன் என்பவர் எழுதிய ''மோட்சப் பிரயாணம்'' குறித்து எடுக்கப்பட்ட ஒரு படச்சுருள் (Audio Tape) ஒன்றை நான் வாங்கி அதை நான் எனது கம்பியூட்டரில் போட்டுப் பார்த்தேன். மிகவும் சிறப்பாக எடுக்கப்பட்ட அந்த ஒளி நாடாவின் இறுதிக்காட்சி நம் உள்ளத்தை பலமாக அசைப்பதாகவும், நம்மைக் கடுமையாக எச்சரிப்பதாகவும் இருக்கின்றது. ஒரு பெரிய கல்லறைத் தோட்டம். அந்தக் கல்லறைத் தோட்டத்தில் ஒரு பெரிய விசாலமான நிழல் தரும் மரம் இருக்கின்றது. அந்த மரத்து நிழலிலும் ஓரிரு கல்லறைகள் காணப்படுகின்றன. அந்தக் கல்லறைகளில் ஒன்றில் சாத்தான் தனது கரிய செட்டைகளுடனும், தலையில் இரண்டு கொம்புகளுடனும் கோர உருவத்தில் சாவதானமாக அமர்ந்தவனாக அவனுக்கு முன்பாக சற்று தொலைவில் இருக்கும் இரண்டு கல்லறைகளைச் சுட்டிக் காண்பித்து ''அந்த இருவர்'' (That two) எனது கரங்களுக்குத் தப்பி மோட்சம் சென்றுவிட்டனர். இந்தக் கல்லறைத் தோட்டத்திலுள்ள மற்ற யாவரையும் நான் தந்திரமாக ஏமாற்றி வெகு சமர்த்தாக அவர்கள் அனைவரையும் நரக பாதாளம் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டேன். ஆனால் அந்த இருவரான ''கிறிஸ்தியானும்'' ''உண்மையும்'' என்னை மடங்கடித்து வெற்றி சிறந்து எனது கரங்களுக்குத் தப்பி உச்சிதப்பட்டணம் போய் சேர்ந்துவிட்டனர் '' என்று மிகுந்த துக்கத்துடன் பேசும் ஒரு காட்சி அதில் இடம்பெற்றுள்ளது. அதைப் பார்த்த நான் ஆச்சரியத்தால் பிரமிப்படைந்தேன்.

ஏதேன் பூங்காவில் நமது ஆதி தாய் தந்தையரை தனது தந்திரமான வார்த்தைகளால் வீழ்த்தி வெற்றி கண்ட கொடிய சாத்தான் நம் அனைவரையும் ஏமாற்றி தன்னுடன் நரகத்துக்குக் கொண்டு செல்லும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளான். அவனுடைய தந்திரச் செயல்கள் நம்மில் அநேகருக்குத் தெரியவே தெரியாது. ஆனால் சாத்தான் நம்மோடு கூட இருந்து நம்முடைய ஆத்துமாவை நஷ்டப்படுத்த இராப்பகலாக கடுமையான முயற்சிகளை எடுத்துக் கொண்டே இருக்கின்றான் என்ற காரியத்தை நாம் விழித்திருந்து கவனித்தால் கண்டு கொள்ளுவோம். அந்தக் கொடிய சத்துரு நமக்கெதிராக எப்படி கிரியை செய்கின்றான் என்பதை நான் உங்களுடன் ஜெபத்துடன் பகிர்ந்து கொள்ளுகின்றேன். கர்த்தர் தாமே அந்தச் செய்தியை உங்களுக்கு ஆசீர்வதித்துத் தருவாராக.

உலக மாயையின் கவர்ச்சியைக் காண்பித்து நமது ஆத்துமாவை அழித்துப் போடும் சாத்தான்.

சில வருடங்களுக்கு முன்பாக ஒரு பெரிய பாம்பு நான் வசிக்கும் வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஒரு பொந்திற்குள்ளிருந்து ஒரு தவளையை வாயில் கவ்விப் பிடித்துக் கொண்டு ஓடுவதற்கு முன்பாக அது அந்த தவளையுடன் அப்படியே கெம்பீரமாக பூமியின்மேல் நின்று கொண்டிருந்தது. அந்த நேரம் சூரிய ஒளியானது பாம்பின் மேல் பட்டதால் பாம்பின் உடலிலுள்ள செதில்கள் அப்படியே மினுங்க ஆரம்பித்தன. அந்த மினுக்கத்தைக் கண்ட ஒரு தேன் சிட்டுப் பறவை அது தேன் உறிஞ்சிக் குடிக்கக்கூடிய ஒரு அழகிய மலர்தான் என்றெண்ணி அந்தப் பாம்பின் உடலுக்கு வெகு அருகாமையில் சிறகடித்துப் பறந்தவாறே தேன் ஊறிஞ்ச முயற்சித்ததை நான் ஆச்சரியத்துடன் கவனித்தேன். அந்தக் காட்சியானது என்னை சாத்தானுடைய மாயக் கவர்ச்சியைக் குறித்து அதிகமாக சிந்திக்க வைத்தது.

ஏதேன் தோட்டத்தில் புசிக்க வேண்டாமென்று தேவன் விலக்கிய கனியை பார்வைக்கு இன்பமான விதத்தில் காணப்படும்படியாக தந்திர சாத்தான் ஏவாளுக்கு காண்பித்துஅதைப் பறித்துப் புசிக்க செய்வதை நாம் காண்கின்றோம் (ஆதி 3 : 6)

சோதோம், கொமோராவுக்கு அருகாமையிலுள்ள சமபூமி முழுவதையும் கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், எகிப்து தேசத்தைப் போலவும் காணும்படியான ஒரு மாயக்காட்சியைக் கொடுத்து நீதிமானாகிய லோத்தை சாத்தான் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வருவதை நாம் பார்க்கின்றோம் (ஆதி 13 : 10)

தனது மேன்மையான சேஷ்ட புத்திர பாகத்தை அலட்சியம் பண்ணத்தக்கவிதத்தில் அற்பமான பயிற்றங்கூழை ஏசாவுடைய கண்களுக்கு செக்கச் சிவப்பாக சத்துரு மாற்றிக் கொடுப்பதை நாம் வாசிக்கின்றோம் (ஆதி 25 : 30 - 32)

நசரேயனான சிம்சோனை தேவன் தெரிந்து கொண்ட மகத்தான அழைப்பிலிருந்து வழிவிலகச் செய்ய விருத்தசேதனமில்லாத ஒரு புறஜாதிப் பெண்ணைக் கொண்டு சாத்தான் அவரை மடங்கடிப்பதை நாம் காண்கின்றோம். ''அவள் என் கண்களுக்குப் பிரியமானவள், அவளையே எனக்கு கொள்ள வேண்டும்'' என்கின்ற அவருடைய வார்த்தைகள் நம்மை

ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது (நியாதி 14 : 3) ''என்னைத் தமக்கென தெரிந்து கொண்ட என் ஆண்டவருடைய கண்களுக்குப் பிரியமானவள்'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக அவருடைய உதடுகளிலிருந்து பிறக்கும் வார்த்தையை கவனித்தீர்களா?

எரிகோ பட்டணத்தின் சாபத்தீடான பொருட்கள் ஒன்றையும் எடுக்க வேண்டாமென்ற யோசுவாவின் கட்டளையை புறம்பே தள்ளிவிட்டு கைவேலையாக பாங்குற பின்னப்பட்ட அழகான பாபிலோனிய சால்வையையும், வெள்ளியையும், பொன்னையும் இச்சித்து எடுத்துக் கொள்ள ஆகானுக்கு சாத்தான் நயம் காட்டுவதை நாம் காண்கின்றோம் (யோசுவா 7 : 21)

சவுந்தரியவதியான தன் சகோதரியாகிய தாமாரின் மேல் மோகம் கொள்ளும்படியான ஒரு கொடிய சிற்றின்ப தாகத்தை அம்னோனுக்கு கொடுத்து அவனைக் கொண்டு தாமாரை கற்கழிக்க வைத்து இறுதியில் அதினிமித்தம் அவன் மகா நிர்ப்பந்தமாக தடிகளால் அடிபட்டுச் சாவதை நாம் பார்க்கின்றோம் (2 சாமுவேல் 13 : 29)

சாலொமோன் ராஜாவை தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்க சாத்தான் அவருக்கு கட்டுக்கடங்கா பெண்ணாசையைக் கொடுத்து 1000 பெண்களை தனக்கென்று கொள்ள வகை செய்து கொடுப்பதை நாம் தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கின்றோம் (1 இரா 11 : 2 - 3) அநேகம் ஸ்திரீகள் மேலும் அவன் ஆசை வைத்தான் என்பதாக அது மேலும் கூறுகின்றது. அந்தக் கொடிய ஆசையின் காரணமாக அவர் தன்னுடைய தேவனாலே சிநேகிக்கப்பட்டவராயிருந்தும் மறுஜாதியான ஸ்திரீகள் அவரைப் பாவஞ்செய்யப்பண்ணி (நெகேமியா 13 : 26) தேவனுடைய கோபத்திற்கு ஆளாகும்படி சாத்தான் வகை செய்தான்.

பிசாசானவன் நம் அருமை இரட்சகரை உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய் வைத்து உலகத்தின் சகல ராஜ்யங்களையும், அவைகளின் மகிமைகளையும் அவருக்கு காண்பித்தபோது எல்லாக் காரியங்களையும் அவன் மிகவும் விபரமாக அவருக்கு காண்பித்திருப்பான் என நாம் நம்பலாம். உலகின் சிங்காசனங்களையும், ஆளுகைகளையும், துரைத்தனங்களையும் அவன் அவருக்குக் காட்டியிருப்பான். சாலொமோனைப் போல ஓராயிரம் மட்டுமல்ல பல ஆயிரம் பெண்களை மணந்து மனமகிழ்ச்சியான கூட்டுக் குடும்ப வாழ்க்கை நடத்தலாம் என்று கூட அவன் அவரின் காதுகளில்

கூறியிருப்பான். அந்த அழகுப் பெண்களை எல்லாம் அவன் அவருக்கு முன்பாக வரிசை வரிசையாக நிறுத்தியிருப்பான். தேவ குமாரர்களின் முன்பாக மனுஷ குமாரத்திகளை நிறுத்தி தங்களுக்குப் பெண்களை தெரிந்து கொள்ளும்படியாகச் செய்த தந்திர சாத்தான் (ஆதி 6 : 2) நமது ஆண்டவரையும் கட்டாயம் அந்த விதத்திலும் சோதித்திருப்பான்.

மாயாபுரிச் சந்தைச் சரக்குகளின் கவர்ச்சியைக் காண்பித்து மக்களை மயக்கி அவர்களை அழிப்பதே சாத்தானுடைய பிரதான குறிக்கோளாகும். நான் சிறுவனாக எங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள மெய்ஞ்ஞானபுரம் என்ற கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நாட்கள் அவை. தினமும் அதிகாலை எழுந்து மத்தியானத்துக்குத் தேவையான ஆகாரத்தை கரங்களில் எடுத்துக் கொண்டு சுமார் 3 மைல்கள் தொலைவிலுள்ள அந்தப் பள்ளிக்கு நான் நடந்து செல்லுவேன். என்னோடு கூட எங்கள் ஊரிலிருந்தும், பக்கத்து ஊரிலிருந்தும் மற்ற பையன்களும் படிக்க வருவார்கள். அன்று நான் தனியனாக பள்ளிக்குச் செல்ல வேண்டியதானது. பள்ளிக்கூடத்திற்கு அருகில் உள்ள நிலப்பரப்பானது மிகுதியும் மணலால் நிறைந்திருக்கும். அதில் நடந்தால் நமது பாதங்களே மணலுக்குள் பதிந்துவிடும் அளவுக்குச் செம்மணல் அந்த இடத்தில் உண்டு. அந்த மணற்பரப்பில் வளர்ந்திருந்த ஒரு உடை மரத்தின் கீழாக நான் கண்ட காட்சி என்னை பெரும் வியப்புக்குள்ளாக்கியது. ஒரு அழகான புழுக்கொத்திப் பறவையின் முக்கால் பகுதி உடல் பூமிக்கு மேலாகவும், அதின் அலகோடு கூடிய கால் பங்கு பூமிக்குள் இருப்பதையும் நான் ஆச்சரியத்துடன் கண்டு அதின் அருகில் சென்று அதைக் கவனித்தேன். மிகவும் கட்டையாகவும், அதே சமயம் பெரிதாகவும் இருக்கக்கூடிய ஒரு மண்ணுளிப்பாம்பு அந்தப் பறவையை தனது ஆச்சரியமான தந்திரத்தால் பிடித்துக் கொண்டதை நான் கண்டேன்.

வானவீதியில் தனது இறக்கைகளை அடித்து ஆனந்தமாகப் பறந்து செல்லும் அந்த அழகான பறவையை பூமியில் கிடந்த இடத்தில் அப்படியே நகர முடியாமல் கிடந்து மிகவும் மெதுவாக ஊர்ந்து செல்லும் அந்தப் பாம்பு எப்படி பிடித்துக் கொண்டது என்பதை என்னால் ஆரம்பத்தில் கண்டு கொள்ளவே முடியவில்லை. அதைக் குறித்து நான் பலரிடமும் கேட்டதுண்டு. ஒரு நாள் ஒருவர் அதற்கான விடையை எனக்குக் கொடுத்தார்கள். அந்த மண்ணுளிப் பாம்பு தனது உடல் முழுவதையும் பூமிக்குக் கீழாக உள்ள பொந்திற்குள் மறைத்து வைத்துக் கொண்டு தனது நாக்கை மாத்திரம் தரை

மட்டத்திற்கு மேலாக ஒரு புழுப்போல ஆட்டி அசைத்துக் கொண்டிருந்தது. பூமியைக் கொத்திப் புழுக்களை தோண்டி எடுத்துத் தின்கின்ற புழுக்கொத்திப் பறவையானது மண்ணுளிப் பாம்பின் அழகான நீண்ட நாவை ஒரு புழு என்று எண்ணி ஆசையாக அருகில் வந்து அதைக் கொத்தினது. அவ்வளவுதான், பூமிக்குக் கீழாக மறைந்திருந்த பாம்பு அதினை ஒரே பிடியாகப் பிடித்துக் கொண்டது. ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா? ஆம், சாத்தானாம் பிசாசானவனும் அதே தந்திரத்தைத்தான் மாந்தரைப் பிடித்துக் கொள்ளப் பயன்படுத்தி வருகின்றான்.

பணம் என்ற நாக்கை அவன் அங்கும் இங்கும் வளைத்து ஒரு புழுப்போல நீட்டும்போது அதின் கவர்ச்சியினால் திரள் கூட்டம் மக்களை அவன் பிடித்துக் கொள்ளுகின்றான். ஆ, மனுஷன் பணத்தை சம்பாதிக்கவும், அதைச் சேர்ப்பதற்காகவும் என்ன என்ன உபாய தந்திரங்களை எல்லாம் கையாளுகின்றான். எத்தனை பொய்கள், எத்தனை நடிப்புகள், எத்தனை நயவஞ்சக ஏமாற்றுகள் எல்லாம் அவன் செய்கின்றான். பல்லாண்டு காலத்திற்கு முன்பாக ஒரு மிட்டாய் கடைக்கு நான் சென்றிருந்தேன். அந்தக் கடையின் உரிமையாளனான ஒரு வாலிபன் தனக்கு முன்னாலிருந்த தராசில் அந்த தராசின் முள் முழுமையாக வெளியே தெரியாதபடி ஒரு சிறிய பிச்சுப் பூ மாலையைத் தொங்கப் போட்டிருந்தான். அதின் காரணம், அவன் நீதி தேவதையை நேசிப்பவன் என்றும், தனது தராசின் எடை மிகவும் துல்லிபமாக இருக்கும் என்பதை தன்னண்டை வரும் வாடிக்கையாளர்களுக்குக் காட்டிக் கொள்ளவும் அப்படிச் செய்திருந்தான். எனக்குள்ளே வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர் அந்த தராசின் அடியில் பார்க்கும்படியாக என் உள்ளத்தில் அந்த நேரம் பேசினார். நான் தராசுக்கு அடியில் பார்த்தபோது ஒரு பென்சிலைக் கொடுத்து பொருளைத்தாங்கி நிற்கும் தட்டானது சற்று தாழ்வாக இருக்கும்படியாக அவன் செய்திருந்தான். ''இப்படிச் சம்பாதிக்கும் பணத்தால் உனக்கு செப்புக்காசுக்கும் பிரயோஜனம் கிடையாது'' என்று நான் அவனிடம் சொன்னேன் என்று நினைக்கின்றேன்.

தேவனை அறியாத புறமதஸ்தர்கள் அறியாமையால் அப்படிச் செய்கின்றார்கள் என்றால் கர்த்தருடைய ஜீவனுள்ள வார்த்தைகளைத் தனது கரங்களில் எடுத்து அதை மற்றவர்களுக்கு பிரசிங்கிக்கும் பிரசங்கி செய்கின்ற அக்கிரம அட்டூழியத்தை நாம் சொல்லி மாளாது. மற்றவர்கள் கட்டுகின்ற கட்டிடங்களை புகைப்படம் எடுத்து '' நான் அநாதைகளுக்கு அநாதை விடுதி கட்டிக் கொண்டிருக்கின்றேன், கட்டிட வேலைகள் அரை குறையாக

இருக்கின்றது, உடனடியாக பணம் தேவை'' என்று மேல் நாடுகளுக்கு படங்களை அனுப்பி எழுதிப்போட்டு பணம்பெறும் ஊழியர்கள் எத்தனை பேர்! ஒரு அநாதை விடுதியின் உரிமையாளரைக் குறித்து அந்த உரிமையாளரின் மிகவும் நெருங்கிய உறவினர் ஒருவர் என்னிடம் சொன்ன காரியம் இதுதான் ''கடைவீதியிலுள்ள ஜவுளிக்கடை, பலசரக்குக் கடைகளின் வீசி எறிந்த பழைய பில் புக்குகளை வாங்கி வந்து அதில் அநாதை விடுதிக்கு பொருட்கள் வாங்கினது போல போலி பில்களை தயாரித்து அந்தப் பில்களை தங்களுக்கு உதவி செய்யும் ஸ்தாபனங்களுக்கு அனுப்பி தந்திரமாக பணங்களைப் பெற்றுக் கொள்ளுவதாக'' என்னிடம் கூறினார்கள். வங்கியில் பணிபுரியும் அந்த சகோதரனை, தோட்டக்காரனைப் போல தலையில் தலைப் பாகையைக் கட்ட வைத்து, கரத்தில் ஒரு மண்வெட்டியைக் கொடுத்து தோட்டத்தில் வேலை செய்பவனைப் போல படம் எடுத்து அதை மேல் நாட்டுக்கு அனுப்பி தோட்டக்காரனுடைய சம்பளம் என்று தனியாக பணம் பெறுவதாக அந்த சகோதரன் மேலும் என்னிடம் கூறினார்கள். இப்படிச் செய்பவர்கள் தங்கள் அநாதை விடுதியில் இருக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு என்ன ஆகாரத்தை சாப்பிடக் கொடுப்பார்கள், அந்தப் பிள்ளைகளுக்கு என்ன வஸ்திரம் உடுக்க கொடுப்பார்கள் என்பதை எல்லாம் நாம் நம்மளவில் நன்கு யூகித்துக் கொள்ளலாம். தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை அறிவிக்கின்றோம் என்று கூறி அந்தப் போர்வையின் கீழ் கிறிஸ்தவ ஊழியர்கள் (எல்லாரும் அல்ல) பணம் காசுகளை சம்பாதிக்க கையாளும் உபாய தந்திரங்களையும், கற்பனைகளுக்கு எட்டாத உத்திகளையும் குறித்து புத்தகங்கள் எழுதினால் எத்தனை எத்தனையோ பிரபந்தங்கள் எழுதலாம். '' நீர் என்னைக் காண்கின்ற தேவன் '' (ஆதி 16 : 13) என்ற தேவ பயமும், நடுக்கமும் இல்லாமல் தாங்கள்தான் உலகத்தில் மிகவும் புத்திசாலிகள் என்று எண்ணிக் கொண்டு காரியங்களை தங்கள் கரங்களில் எடுத்துச் துணிச்சலாகச் செய்து கொண்டிருக்கின்றனர். உருவின பட்டயத்தோடு தேவன் அவர்களை சங்கரிக்க ஆயத்த நிலையில் இருப்பதைக் காணக்கூடாமல் அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருக்கின்றது.

உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும் உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும் தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்

(லூக்கா 12 : 35 - 36)

பல ஆண்டு காலங்களுக்கு முன்னர் நான் சென்னையிலுள்ள பாம்புப் பண்ணை ஒன்றைக் காணச் சென்றிருந்தேன். அங்கு பலவிதமான விஷமுள்ள மற்றும் விஷமற்ற பாம்புகளையும், ராஜ நாகம் என்றழைக்கப்படும் மிகவும் பெரிய அதே சமயம் கொடிய விஷமுள்ள பாம்புகளை எல்லாம் நான் பார்த்தேன். அவைகள் எதுவும் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. ஆனால், நான் அந்தப் பாம்பு பண்ணையில் கண்ட ஒரு காட்சி இன்று வரை என் உள்ளத்தில் நிலைத்து நிற்கின்றது. ஒரு அறையில் ஒரு பெரிய மலைப் பாம்பு அப்படியே எந்த ஒரு சலனமும் இல்லாமல் சுருண்டு படுத்துக் கிடந்தது. அந்த மலைப் பாம்புக்கு பயந்து ஒரு கோழி அந்த அறையில் வைக்கப்பட்டிருந்த ஒரு பழபழப்பான பட்டுப்போன உறுதியான மரக்கிளையின் உச்சியில் அமர்ந்திருந்தது. அந்தப் பாம்பு பண்ணையில் பணியாற்றும் ஒரு வேலையாளிடம் அந்தக் கோழி ஏன் அங்கு இருக்கின்றது என்று நான் கேட்டபோது ''அந்தக் கோழிதான் அந்த மலைப்பாம்புக்கு அந்த நாளின் ஆகாரம் என்றும், அந்தக் கோழியானது அந்த மரத்தின் எந்த ஒரு கிளைக்குத் தாவிப் பறந்து சென்றாலும் அந்த நாளின் இராக்காலத்துக்குள்ளாகவே அந்தக் கோழி அந்த மலைப் பாம்பின் வயிற்றுக்குள் இருப்பது நிச்சயம்'' என்று என்னிடம் சொன்னான். அவனுடைய வார்த்தைகள் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. பகற்காலம் முழுவதும் கோழி தன்னை அந்த மலைப்பாம்பு பிடித்துக் கொள்ளாதபடி காத்துக் கொண்டது. ஆனால், இராக்காலம் வந்தபோது அந்தக் கோழி நித்திரை செய்ய ஆரம்பித்தபோது அந்த மலைப்பாம்பு கொஞ்சம் கொஞ்சமாக ஊர்ந்து நகர்ந்து வந்து ஒரே பிடியாக அதைப் பிடித்துக் கொண்டது.

தந்திர சாத்தானாம் பிசாசும் நமது ஆத்துமாவை இந்தவிதமாகவே கொஞ்சம் கொஞ்சமாக ஊர்ந்து நகர்ந்து வந்து நாம் நமது ஆவிக்குள்ளான வாழ்வில் விழிப்பற்றவர்களாக ஏனோ தானோவென்று இருக்கும் சமயம் பார்த்து ஒரே பிடியாக பிடித்து விடுகின்றான். அந்த சாத்தான் தனது கண்களுக்கு ஒரு கணம் தானும் நித்திரையை வரவொட்டாமல் நமது ஆத்துமாவை தேவனுடைய அன்பின் ஐக்கியத்திலிருந்து பிரித்து அழிக்க இராப்பகலாக கிரியை நடத்திக் கொண்டே இருக்கின்றான். இந்தக் காரியத்தை தனது மனதில் கொண்டுதான் நம் அருமை இரட்சகர் ''மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்'' (லூக்கா 21 : 36) என்றும் ''நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்''

(மத் 26 : 41) என்றும் வெகு திட்டமும் தெளிவுமாக நமக்குக் கூறுகின்றார். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுரு தமது நிருபத்தில் ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித்திரிகிறான்'' (1 பேதுரு 5 : 8) என்று நமக்கு எழுதுகின்றார்.

களைகளைப் பற்றிய உவமையை ஆண்டவர் சொல்லும்போது கோதுமைக்குள் களைகள் எப்படி வந்தது என்று கேட்ட வீட்டெஜமானனுடைய வேலைக்காரருக்கு ''மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்'' (மத் 13 : 25) என்ற வார்த்தைகள் நம்மை பலமாக எச்சரிப்பதாக இருக்கின்றது. மேலே நாம் பார்த்த மலைப்பாம்பு, கோழி சம்பவத்தில் அந்தக் கோழி தன் மட்டாக விழித்திருந்தது வரை அது பாதுகாப்பாக இருந்தது. ஆனால் இராக்காலம் வந்து கோழி எப்பொழுது தன்னை நித்திரைக்கு ஒப்புக்கொடுத்ததோ அப்பொழுதே அது பாம்புக்கு இரையானது.

நமது ஆவிக்குரிய நித்திரை அல்லது நமது விழிப்பற்ற சமயத்தை சாத்தானாம் பிசாசு மிகவும் கருத்தோடு கண்காணித்து வருகின்றான். நாம் நமது ஆவிக்குரிய வாழ்வில் கவனமிழந்து சற்றே கண்ணயரும்போது அவன் தனது ஆதிக்கத்தை செலுத்தி நம்மை மேற்கொண்டு விடுகின்றான். எனது வாழ்வில் முதன்முதலாவதாக ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பிக்கானீர் என்ற பட்டணத்தில் ஒரு மரத்தில் ஒரு காகம் ஒரு குயிலின் குஞ்சுக்கு இரை கொடுத்துக்கொண்டிருப்பதை நான் ஆச்சரியத்துடன் கவனித்தேன். தன்னுடையதல்லாததை, ஆம், தான் பெறாத ஒன்றுக்கு அது அங்கும் இங்கும் கஷ்டப்பட்டு பறந்து திரிந்து இரை தேடி ஊட்டிக்கொண்டிருந்தது. அப்படி அந்த குயிலின் குஞ்சுக்கு இரை ஊட்டுவதற்கு அதற்கு நேர்ந்த காரியம் என்ன? தான் தனது கூட்டில் இட்ட தனது முட்டைகளை அது பாதுகாப்பதில் சற்று கவலையீனமாக இருந்துவிட்டது. காகம் தனது கூட்டைவிட்டு எப்பொழுது வெளியே போகும் என்று கவனித்துக்கொண்டிருந்த தந்திரசாலியான குயில் அது போனதும் தனது முட்டைகளை காகத்தின் கூட்டினுக்குள் கணப்பொழுதில் இட்டு விட்டுப் பறந்துவிட்டது.

சிங்கம், புலி, சிறுத்தை, கரடி போன்ற விலங்குகள் கானக விலங்குகளில் மிகவும் பயங்கரமான மிருகங்களாகும். விசேஷமாக அந்த விலங்குகள்

குட்டிகளைப் போட்டு அவைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் மிகவும் கண்ணும் கருத்தும் உடையவைகளாக இருக்கும் என்பதை நாம் நன்கறிவோம். அவைகளின் குட்டிகள் இருக்கும் இடங்களுக்கு அருகில் எந்த ஒரு மிருகங்களையும், மனிதரையும் அது அணுக ஒட்டாது. அப்படியிருந்தபோதினும் கழுதைப் புலி, நரி போன்ற தந்திர விலங்குகள் மிகவும் சாமர்த்தியமாக அவைகளின் குட்டிகள் இருக்கும் இடங்களுக்கு அருகில் மறைந்து காத்திருந்து அந்தக் கொடிய மிருகங்கள் தங்கள் குட்டிகளைவிட்டு விட்டு அவைகளுக்கு இரை தேடப்போகும் சமயம் பார்த்து நொடிப் பொழுதில் அந்தக் குட்டிகளைக் கவ்விக்கொண்டு சென்று அவைகளை தங்களுக்கு உணவாக்கி விடும். ஆம், அவைகள் எத்தனை பயங்கரமான, பலவான்களாக இருந்தபோதினும் தங்களுடைய குட்டிகளை அற்பமான சின்ன மிருகங்களுக்கு இரையாகப் பறிகொடுத்து விடுகின்றன. காரணம், அவைகள் தங்கள் குட்டிகளைப் பாதுகாப்பதில் நொடிப் பொழுது கவனக் குறைவு காண்பிப்பதுதான்.

ஏதேன் பூங்காவில் ஆதாமும், ஏவாளும் ஒன்றுகூடி இருக்கும் வரை விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை புசிக்க வைப்பது என்பது கடினமான காரியம் என்பது சாத்தானுக்கு நன்றாகவே தெரியும். எனவே, பெலவீனமான ஏவாள் தனிமையில் எப்பொழுது தனது கரத்துக்குள் சிக்குவாள் என்பதை அவன் வெகு நாட்களாகவே பார்த்திருந்து தந்திரமாக சமயம் பார்த்து தனது காரியத்தை சாதித்துவிட்டான். தான் கனியைப் பறித்துப் புசிப்பதற்கு முன்னர் சாத்தானுடைய தந்திர வார்த்தைகளை ஆதாமிடத்திலோ அல்லது பகலின் குளிர்ச்சியான வேளைகளில் தங்களிடத்தில் உறவாட வரும் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் சொல்லி, அந்த வார்த்தைகளின் உண்மையைத் தெரிந்து கொள்ளுவதற்கு முன்னர் துரிதமாக முடிவெடுக்க சத்துரு அவளை தன் கைப்பாவையாக்கிக் கொண்டான்.

''இவன் உனக்கு சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்ப பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான்'' (ஆதி 15 : 4) என்று கர்த்தர் ஆபிரகாமுக்குத் திட்டமும் தெளிவுமான வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருந்த போதினும் அடிமைப் பெண்ணாகிய ஆகாரைச் சேர்ந்து சந்ததியை உருவாக்கும்படியாகச் சொன்ன சாராளின் வார்த்தையை அவர் அப்படியே ஏற்றுக் கொள்ளுவதை நாம் காண்கின்றோம். தனது மனைவியின் வார்த்தைகளுக்கு தான் செவி கொடுக்கலாமா என்று நமது முற்பிதா தனது தேவனிடம் ஒரு வார்த்தை கேட்டிருந்திருப்பாரானால் இன்று நாம் உலகத்தில் காண்கின்ற கொடிய

தீவிரவாதம், வன்முறைகள், இரத்தக்களரியான போர்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டிருக்கும் அல்லவா?

ஒரு தவளையை கொதிக்கும் தண்ணீரில் நாம் போட்டால் அது ஒருக்கால் அங்கிருந்து குதித்து தப்பிவிடும். ஆனால், அந்த தவளையை நாம் குளிர்ந்த தண்ணீரில் போட்டு அந்தப் பாத்திரத்தை அடுப்பில் வைத்து கொஞ்சம், கொஞ்சமாக அதை சூடேற்றிக்கொண்டிருந்தால் நிச்சயமாக நாம் அந்த தவளையைக் கொன்றுவிடலாம் என்ற ஒரு வழக்கச் சொல் உண்டு. அந்தவிதமாகவே நமது ஆத்தும அழிம்பனாகிய சாத்தான் தேவ மக்களையும் ஆண்டவருடைய அன்பின் ஐக்கியத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வழிவிலகச் செய்து கடைசியாக அவர்களை ஜீவன் தப்ப முடியாமல் செய்துவிடுகின்றான்.

நசரேயனாகிய சிம்சோனை சாத்தான் தனது மணம் நிறைந்த மடியில் ஒவ்வொரு முறையும் அருமையாக நித்திரை கொள்ளச் செய்து இறுதியில் ''சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள்'' என்று சொன்னபோது கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல் எப்போதும் போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்று போனபோது அவனுடைய கண்களை குருடாக்கி, இரண்டு வெண்கல விலங்குகள் போட்டுப் பிடித்துக் கொண்டது போல தந்திர சாத்தானும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவர்கள் விருப்பமான மாயையின் மடியின் நித்திரையைக் கொடுத்து அவர்களுடைய ஆவிக்குரிய கண்களை நித்தியமாகத் தோண்டி எடுத்துவிடுகின்றான்.

ஒவ்வொரு தேவப் பிள்ளையின் அருகிலும் சாத்தான் இராப் பகலாக இருந்து அவர்களுடைய ஆத்துமாவை அழிக்க சமயம் பார்த்துக் கொண்டேயிருக்கின்றான். கர்த்தருடைய பிள்ளைகளை எந்தெந்த விதத்தில் அவர்களுடைய ஆவிக்குரிய பரிசுத்த நிலையிலேயே அவர்களை சிறைப்பிடித்து அவர்களை தங்கள் ஆண்டவருடைய பரிசுத்த ஐக்கியத்திலிருந்து பிரித்துவிடவேண்டுமென்று அவனுக்கு நன்றாகத் தெரியும். கர்த்தருக்கு இடைவிடாமல் ஊழியம் செய்யும் தேவ ஊழியர்களைப் பாருங்கள். தேவ ஊழியம் செய்வதிலேயே அவர்களை மூழ்க்கடித்துவிடுவான். நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் என்று தேவ ஊழியத்தின் பாதையிலேயே அவர்களை உலகம் சுற்றி வரச் செய்து கொண்டிருப்பான். கன்வென்சன் பிரசங்கிமார்களைப் பாருங்கள், சபைகளுக்கு வந்து பிரசங்கிக்கும்படியாக அவர்களைக் கேட்டால் 5 வருடங்களுக்கு அல்லது 3 வருடங்களுக்கு அல்லது

2 வருட ஊழியங்களுக்கு அவர்கள் ''புக்'' பண்ணப்பட்டுவிட்டதாகக் கூறுகின்றனர். தங்கள் ஊழியத்தின் பாதையில் அன்பின் ஆண்டவரோடு தனிமையில் அவர்களை நீண்ட நேரம் ஜெபத்தில் சாத்தான் உறவாடவிடமாட்டான். அப்படி ஜெபத்தில் உறவாட அவர்களுக்கு நேரமும், காலமும் இல்லாத வகையில் அந்த தேவ ஊழியர்களை ஊழியம் ஊழியம் என்று ஊழியத்தின் பாதையில் அவர்களைத் துரத்திக்கொண்டே இருப்பான். எல்லாத் தேவ ஊழியங்களையும்விட அன்பின் ஆண்டவருடைய பரிசுத்த பாதங்களில் தனித்திருப்பதே மாபெரும் ஊழியமாகும். அதற்காக நான் எவரையும் தேவ ஊழியம் செய்ய வேண்டாமென்று சொல்வதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். கர்த்தருக்காக நாம் செய்கின்ற நம்முடைய ஊழியங்களைக் காட்டிலும் கர்த்தருடைய பாதங்களில் நாம் அதிகமான நேரம் ஜெபம், உபவாசத்தில் காத்து அமர்ந்திருப்பது அவருக்காக நாம் செய்கின்ற பெரிய தேவ ஊழியமாகும்.

மார்த்தாள், மரியாள் என்பவர்களுடைய சரித்திரத்தில் நாம் இந்த சத்தியத்தை திட்டமும் தெளிவுமாகக் காண்கின்றோம். பெத்தானியாவிலுள்ள அவர்களுடைய வீட்டிற்கு அன்பின் ஆண்டவர் வரும்போது மார்த்தாள் தன் ஆண்டவருக்கு நல்ல சுவையான ஆகாரங்களை தயாரிப்பதிலும், அவருக்கு அன்பு செய்வதிலும், தங்கள் வீட்டில் அவர் எல்லா சந்தோச மகிழ்ச்சியோடும் தங்கியிருக்க ஏற்பாடுகளை மிகுந்த கவலையோடு செய்கின்றாள். அதற்காக அவள் அங்குமிங்கும் ஓடியாடி பிரயாசம் எடுக்கின்றாள். ஆனால், மரியாள் தன் அன்பின் நேசருடைய பாதங்களில் அமர்ந்து அவருடைய திருவாய் மொழிகளை கேட்பதிலேயே தன் நேரத்தை செலவிடுகின்றாள். அவருடைய பாதங்களில் அமர்ந்திருப்பதே மரியாளுக்கு ஆனந்தமாக இருக்கின்றது. ஆண்டவருக்கு பணிவிடை செய்வதில் தனது கவனத்தை செலுத்தாத மரியாளைக் குறித்து மார்த்தாள் ஆண்டவரிடம் முறையிட்டபோது தனக்கு பணிவிடை செய்வதைக் காட்டிலும் தனது பாதங்களில் அமர்ந்திருந்து தமது அன்பின் குரல் கேட்பதே மிகவும் நல்ல பங்கு என்று இரட்சகர் அவளுக்கு நினைப்பூட்டுவதை நாம் காண்கின்றோம் (லூக்கா 10 : 42)

பரிசுத்த மகாத்துமா சாதுசுந்தர்சிங் அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கும்படியாக உலகமெங்கிலுமிருந்து திரளான அழைப்புகள் வந்த போதினும் அவைகள் எல்லாவற்றையும் அவர் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் தன் அருமை இரட்சகரோடு ஜெப தியானங்களில் ஆண்டுதோறும் சில மாதங்கள் அப்படியே மூழ்கி மகிழ்வதற்காக அவர் தனது

இருப்பிடமான இமயத்தின் சிம்லா மலைகளிலுள்ள சுபத்து என்ற இடத்தில் உள்ள தனது பங்களாவில் அப்படியே மறைந்து இருந்துவிடுவார். அவருடைய புத்தகங்களை வாசிப்போருக்கு இந்த சத்தியம் நன்கு தெரிய வரும்.

இன்னும் பல தேவ பிள்ளைகள் அதிகாலையில் எழும்புவார்கள். தங்கள் அன்பின் ஆண்டவரோடு அந்த அதிகாலை நேரம் ஜெபத்தில் உறவாடி மகிழ சாத்தான் அவர்களை அனுமதிக்காமல் அந்த அதிகாலை வேளையில் ரேடியோவில் வரும் பிரசங்கங்களையும் ஜெபத்தையும் கவனிக்கச் செய்து அவர்களுடைய ஜெப வேளையை அப்படியே துண்டித்துவிடுவான். அந்த அதிகாலை நேரம் வரும் இனிமையான பிரசங்கங்களை எந்த ஒரு நிலையிலும் கேட்டுவிட வேண்டும் என்பதற்காக அந்த மக்கள் சிறிய கையடக்கமான ரேடியோ ஒன்றை வாங்கி தங்கள் வசம் வைத்துக் கொண்டு தங்களுடைய பிரயாணங்களிலும், வெளியிடங்களில் தங்கியிருக்கும் இடங்களிலும் அதைக் கேட்டு திருப்தி அடைந்துவிடுகின்றார்கள். ஆனால், அந்த அன்பான மக்கள் தங்கள் ஆண்டவருக்கு முன்பாக முழங்காலூன்றி அவர் பேசும் அமர்ந்த மெல்லிய குரலைக் கேட்க விரும்புவதில்லை. அதுவும் சாத்தானுடைய மகா தந்திரமான செயலாகும். எந்தவிதத்திலும், ஆண்டவரோடு நாம் நெருங்கிவிடாதபடி அவன் நம்மை கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்ளுவான்.

கிறிஸ்தவ மக்கள் பலரையும் அங்கும் இங்கும் ஓடி தேவச் செய்திகளை கேட்டுக்கொண்டே இருக்க சாத்தான் தூண்டுவான். எத்தனை கன்வென்சன்கள், எத்தனை பேரின்ப பெருவிழாக்கள், எத்தனை அக்கினி அபிஷேக திருவிழாக்கள் உண்டுமோ அத்தனை கூட்டங்களுக்கும், அவைகள் எங்கு நடந்தாலும் பணம் செலவு செய்து, பிரயாணம் செய்து போய் கேட்டுவிட்டு அவர்கள் வந்துவிடுவார்கள். ஆனால் துயரமான காரியம், அவர்கள் அத்தனை தேவச்செய்திகளை கேட்டிருந்தாலும் அவர்களுடைய ஆவிக்குரிய பரிசுத்த வாழ்க்கையில் ஒரு சிறிய முன்னேற்றமும், மாற்றமும் இருக்காது. அந்த பழைய பெருமை, அந்த பழைய கோபம், அந்த பழைய பெருந்தீனி, அந்த தேவ அன்பற்ற வாழ்க்கை, அந்த பழைய கஞ்சத்தனம், வயது சென்றபோதினும் அந்த தாம்பத்திய உறவின் உடும்பு பிடிப்பு எல்லாம் சற்றுகூட மாற்றம் அடையாமல் தண்ணீரில் போட்ட கருங்கல்லாகவும், ஒரு தாலந்தை வாங்கினவன் தான் புதைத்த மண்ணிலிருந்து அதை அப்படியே சற்றும் பழுதில்லாமல் வெளியே எடுத்து வந்தது போலவும் இருக்கும். இன்னும் சாவு வரைக்கும் அந்த மக்கள் எத்தனை லட்சம் பிரசங்கங்களைக்

கேட்டாலும் அவர்களுடைய பழைய மனுஷனும் அவனது துர்ச்செய்கைகளும் நாளுக்கு நாள் ஒளி வீசி பிரகாசித்துக் கொண்டேயிருக்கும். இதுவும் சாத்தானுடைய பயங்கரமான தந்திரச் செயலாகும்.

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் (2 கொரி 4 : 4)

பல்லாண்டு காலத்திற்கு முன்னர் பீஹார் மாநிலத்திலுள்ள பாகல்பூர் என்ற இடத்திலிருந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த கொடிய குற்றவாளிகள் பலரை அவர்களைப் பாதுகாத்துவந்த சிறைக்காவலர்கள் நஞ்சான பச்சிலைகளை கானகத்திலிருந்து கொண்டு வந்து அவற்றை இடித்துப் பிழிந்து அதின் சாற்றை அவர்களுடைய கண்களில் பலவந்தமாக ஊற்றி அவர்களை குருடராக்கிவிட்டார்கள். அந்தக் கொடிய குற்றவாளிகள் இழைக்கும் பயங்கரமான தீச்செயல்களின் காரணமாக தங்களுடைய வேலைகளுக்கே ஆபத்தாகி, தங்களுடைய மனைவி பிள்ளைகள் தெருக்களில் நிற்கவேண்டியதாகும் என்ற பயத்தில் அந்த சிறைக்காவலர்கள் அப்படிச் செய்தனர். அந்தச் செய்தி அந்த நாட்களில் உலகமெங்கும் பிரசித்தம் பெற்றிருந்தது. நமது இந்திய பாராளுமன்றத்திலும் அந்தக் காரியத்தை வாதித்தனர்.

தமஸ்க்குவுக்குப் போகும் பாதையில் பவுலாகிய சவுலை சந்தித்த தேவன் அவரிடம் சொன்ன முதல் காரியம், மக்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு அவர்களுடைய கண்களைத் திறக்கும்படியாக தாம் அவரை அனுப்புவதாக கூறுவதை நாம் வாசிக்கின்றோம் (அப் 26 : 18) அதின் மூலம் மக்கள் யாவரும் சாத்தானால் கண்கள் குருடாக்கப்பட்டு அவனுடைய ஆளுகைக்குள் அடங்கியிருக்கின்றார்கள் என்பது திட்டமும் தெளிவுமாக நமக்குத் தெரிகின்றது.

எந்த ஒரு பராக்கிரமசாலியாக இருந்தாலும் அவனது கண்களின் ஒளியைப் பறித்துவிட்டால் அவனால் ஒன்றுமே செய்ய இயலாது. அவன் தன் அடுத்த அடியை எடுத்து வைப்பதற்குக் கூட பிறரின் உதவியை நாடவேண்டும். காசா பட்டணத்து பெரிய வாசல் கதவுகளையும், அதின்

இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூடப் பேர்த்துத் தன் தோளின் மேல் வைத்து எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்கு சுமந்துகொண்டுபோன அப்பேர்ப்பட்ட மாபெரும் பலவான் தனது சத்துருக்களால் தனது கண்கள் பிடுங்கப்பட்டபின்னர் தனது உதவிக்காக ஒரு சிறு பிள்ளையாண்டானைக் கெஞ்சும் நிலைக்குத் தள்ளப்பட்டதை தேவனுடைய வார்த்தை நமக்குக் கூறுகின்றது (நியாதி 16 : 26)

நமக்கு முன்பாக உள்ள நமது மரணத்தை நாம் காணாதபடிக்கு சாத்தான் நமது மனக்கண்களை குருடாக்கிவிடுகின்றான். எந்த நொடிப்பொழுதிலும் மரணமானது நம்மைச் சந்தித்துவிடும் என்ற பயம் சற்றும் இல்லாத வகையில் நாம் நிர்விசாரமாக வாழும்படி அவன் செய்கின்றான். இங்கு நான் கோத்தகிரியில் வாழ்ந்துகொண்டிருக்கும் எனது வீட்டிற்கு சற்று மேலாக ஒரு ஐசுவரியமுள்ள வழக்கறிஞர் வாழ்ந்து வருகின்றார். அவருடைய ஒரே மகனும் வழக்கறிஞர்தான். அந்த மகன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வேலைபார்க்கின்றான். மிகவும் சொற்பமான வயது. இரண்டு சிறிய பெண் குழந்தைகள். தாய் தந்தையரைக் காண வேண்டுமென்பதற்காக தனியனாக சென்னையிலிருந்து வந்து பார்த்துவிட்டு மீண்டும் ஓரிரு தினங்களில் சென்னைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த சமயம் ஒரு நாள் மாலை நேரம் சடுதியாக இரத்த வாந்தி எடுத்து மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு முன்னரே மாண்டுபோனான்.

இந்த உலகத்துக்கு ஒரு பெரிய பெருமை இருக்கிறதென்றால் அது என்ன பெருமை என்று தமிழ் ஞானி திருவள்ளுவர் தமது குறளில் சொல்லுவதை நாம் சிறுவர்களாக இருந்தபோது நமது பள்ளிகளில் படித்திருக்கின்றோம். ''நேற்று இருந்தவன் இன்றைக்கு உலகில் இல்லை என்ற பெருமைதான் அந்தப் பெருமை'' என்பதாக வள்ளுவர் கூறுகின்றார்.

''நீ நல்வாழ்வு வாழ வேண்டுமானால் உனது மரணத்தை எப்பொழுதும் உனது மனக்கண்களுக்கு முன்பாக வைத்து வாழ்க்கை நடத்து'' என்று ஜாண் பன்னியன் என்ற பரிசுத்தவான் தமது ''மோட்ச பிரயாணம்'' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கின்றார்.

''மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரமாத்திரம் இருக்கிறது'' (1 சாமு 20 : 3) என்றார் தாவீது ராஜா. ''எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்'' (சங் 90 : 12) என்றார் மோசே தீர்க்கன். உலக மகா வீரன் அலெக்ஸாண்டருடைய தகப்பனார் பிலிப்பு என்பவர் தனக்கு ஒரு

அடிமையை வேலைக்கு வைத்திருந்தார். அந்த அடிமையின் வேலை என்னவெனில் தினந்தோறும் பிலிப்பு என்பவர் தனது தூக்கத்திலிருந்து அதிகாலை கண்விழித்ததும் ''பிலிப்புவே, நீர் சாவுக்குரியவர்'' என்ற வார்த்தையை உரத்த குரலில் அவருக்குச் சொல்ல வேண்டும்.

நம்மோடு வாழ்ந்தவர்கள், நம்மிலும் எத்தனையோ வயதுக்கு குறைந்தவர்கள், நம்மிலும் எத்தனை திடகார்த்தமான பெலசாலியான மக்கள் எல்லாரும் இன்று கல்லறைத் தோட்டத்தில் மேட்டிலும், பள்ளத்திலும், சமதரையிலுமாக தங்கள் படுக்கையைப் போட்டிருக்கின்றார்கள். இங்கு நீலகிரி மலைகளிலுள்ள கல்லறைத் தோட்டங்களை நான் இங்கு குறிப்பிடுகின்றேன். அந்தக் கல்லறைத் தோட்டத்தை நாம் அவ்வப்போது போய்ப்பார்த்து நமது நிலையில்லா வாழ்க்கையை நாம் திட்டமாக உறுதி செய்துகொள்ளுவோமானால் நாம் எத்தனை ஆசீர்வதிக்கப்பட்ட மக்களாக இருப்போம். தமிழ்நாட்டின் ஒரு பிரபலமான சினிமா பின்னணிப் பாடகர் தான் ஒழுங்காக கல்லறைத் தோட்டத்தை போய்ப் பார்த்து தானும் ஓர் நாள் அங்கு வந்து சேரக்கூடியவன் என்ற உண்மையை உறுதி செய்துகொண்டு அதின் அடிப்படையில் வாழ்வதாக எழுதியிருந்ததை நான் வாசித்து நமது தேவ எக்காள பத்திரிக்கையிலும் அந்தச் செய்தியை கடந்த நாட்களில் எழுதியிருப்பதை உங்களில் சிலர் நினைவில் வைத்திருக்கலாம்.

ஆனால், தந்திரசாலியான சாத்தான் தங்களை எந்த நேரத்திலும் சந்திக்கக்கூடிய மரணத்தை சற்றும் சிந்திக்கக்கூடாமல் மக்களுடைய மனக்கண்களை குருடாக்கி வைத்திருக்கின்றான். எத்தனை பேரை கல்லறைத் தோட்டத்துக்குத் தூக்கிச் சென்று புதைத்து வந்தாலும், தன்னை ஒரு நாள் மக்கள் தூக்கிச் சென்று புதைப்பார்கள் என்ற சிறிய உணர்வு கூட இல்லாமல் மக்கள் எத்தனை சாவதானமாக, மரண பயமும், தெய்வ பயமும் இல்லாமல் எத்தனை துணிச்சலாக நிர்விசாரமாக வாழ்கின்றனர். காரணம், சாத்தான் அவர்களுடைய மனக்கண்களை குருடாக்கிவிட்டான்.

தங்களை எந்த நேரமும் சந்திக்கக்கூடிய மரணத்தை குறித்து சிந்திக்கவிடாமல் சாத்தான் மக்களுடைய மனக்கண்களை குருடாக்கி வைத்திருப்பது மாத்திரமல்ல, தாங்கள் சந்திக்கப் போகின்ற முடிவில்லாத நித்தியத்தைக் குறித்தும் அவர்கள் சிந்திக்கக்கூடாதபடிக்கு அவர்களுடைய மனக்கண்களை குருடாக்கி வைத்துள்ளான். முடிவில்லாத நித்தியம். ஆம், காலக்கடிகாரமற்ற ஊழி ஊழி காலங்கள். எக்காலத்தும் முற்றுப்புள்ளி வைக்கப்படாத நீண்ட நித்தியம். நஷ்டப்பட்ட ஒரு ஆத்துமா நித்திய

நரகத்தில் முடிவின்றி அனுபவிக்கும் கொடிய பாடு வியாகுலங்களைக் காணவிடாமல், அவற்றைக் குறித்து சிந்திக்கவிடாமல் சாத்தான் மக்களின் மனக் கண்களை குருடாக்கிவிடுகின்றான்.

நமது மரணத்திற்குப் பின்னால் நாம் சந்திக்கக் கூடிய நித்தியம் **(Eternity)** எத்தனை நீளமானது என்பதற்கு வேத பண்டிதர்கள் பல விளக்கப் படங்களைக் கொடுக்கின்றனர். அதில் ஒன்று இப்படியாக உள்ளது. வடக்கே ஸ்வித்யாட் என்ற இடத்தில் 100 மைல்கள் நீளம், 100 மைல்கள் அகலம், 100 மைல்கள் உயரமான ஒரு பிரமாண்டமான பாறை உள்ளது. அந்தப் பாறைக்கு 1000 ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஒரு சிறிய தேன்சிட்டுப் பறவை வந்து தனது பென்சில் முனை போன்ற தனது சின்னஞ்சிறிய அலகை ஒரு தடவை அப்படியே அந்தப் பெரும் பாறையில் உராய்ந்துவிட்டுப் போய்விடுகின்றது. அப்படி அந்த தேன்சிட்டுப் பறவை ஒவ்வொரு 1000 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அந்தப் பாறைக்கு வந்து தனது அலகை அதில் ஒரு தடவை மட்டும் தீட்டித் தீட்டி அந்த மாபெரும் பிரமாண்டமான பாறை முழுவதையும் அது இருந்த இடம் தெரியாமல் தனது சின்னஞ்சிறு அலகால் தீட்டிக் கறைத்துவிட்டால் அதற்கு எத்தனை கோடானு கோடானு கோடி ஆண்டுகள் ஆகுமோ அதுவே நித்தியத்தில் ஒரே ஒரு நாளாகுமாம். அதாவது நித்தியத்துக்கு முடிவில்லை என்பதைக் காண்பிக்கவே இந்தவிதமான விளக்கங்களை குறிப்பிடுகின்றனர்.

அநேகரை, தங்கள் ஆவிக்குரிய உண்மை நிலையைக் காணவொட்டாமல் அவர்கள் தங்களையே மற்றவர்களைவிட பெரிய பரிசுத்தவான்கள் என்று மேட்டிமை கொள்ளச் செய்து அப்படியே அந்தப் பெருமையில் அழிந்து போகும்படியாக அவர்களுடைய மனக்கண்களை சாத்தான் குருடாக்கிவிடுகின்றான். சாத்தானுடைய கொடிய தந்திரங்களில் இதுவும் ஒன்றாகும். ''தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்'' என்றதோர் தமிழ் பழமொழி உண்டு. ஆண்டவரைக் குறித்த அறிவும், தன்னைக் குறித்த அறிவும் மிகவும் அவசியமானதாகும். கடந்த காலங்களில் வாழ்ந்த பெரிய பரிசுத்தவான்கள் பலரும் இந்த மேலான சத்தியத்தைக் கண்டிருந்தார்கள். ராட்சத பரிசுத்தவானான ஜாண் கால்வின் என்ற தேவ மனிதர் ''தன்னை ஆழமாக ஆராய்ந்து அறிந்து கொண்டிராதபட்சத்தில் ஆண்டவரையும் ஆழமாக ஆராய்ந்து அறிய முடியாது'' என்று எழுதி வைத்தார். 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் தேவ மனிதர் அகஸ்டின் என்பவர் எழுதிவைத்துள்ள ஒரு ஜெபத்தை கிறிஸ்தவ மக்கள் இன்றும் ஜெபிக்கின்றனர்.

‘‘அன்பின் பரம பிதாவே, நான் உம்மை அறிந்துகொண்டதைப் போல நான் என்னையும் அறிந்துகொள்ள எனக்கு கிருபைசெய்யும்’’ என்பதே அவருடைய ஜெபமாக இருந்தது.

‘‘திரளான மக்களைக் கொண்ட ஒரு பெரிய சபையின் போதகரை எனக்குத் தெரியும். தேவனைக் குறித்தும், அவருடைய வார்த்தைகளைக் குறித்தும் சிறந்த பாண்டித்தியம் பெற்ற ஒரு தேவ மனிதராக அவர் காணப்பட்டார். ஆனால், ஏழை மனிதர் தனது ஆவிக்குரிய வாழ்வின் நிலை குறித்த போதிய அறிவில்லாத காரணத்தால் ஒரு பெரிய பாவம் செய்யத் தூண்டப்பட்டு அதின் காரணமாக அவர் அதுவரை செய்து முடித்திருந்த பரிசுத்த ஊழியங்கள் அனைத்தையும் அழிவுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்’’ என்று பண்டிதர் டேவிட் பென்னர் என்பவர் கூறுகின்றார்.

‘‘மேலே கண்ட டேவிட் பென்னரின் அனுபவமே எனக்கும் உள்ளது. கடந்த ஆண்டுகளில் என்னண்டை தேவ ஆலோசனைகளுக்காக வரும் தேவ ஊழியரும், கிறிஸ்தவ தலைவர்களும் பண்டிதர் வேிட் பென்னரின் கண்டுபிடிப்புகளையே நிரூபிப்பவர்களாக உள்ளனர். கிறிஸ்தவ அமைப்புகளின் தலைமை ஸ்தாபனங்களைப் பிடித்து நிற்கும் தலைவர்கள் தாங்கள் தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை அதிகமாகக் கற்றவர்களைப் போலவும், அன்பின் ஆண்டவரை ஆழமாக அறிந்து அவருடைய அன்பில் வளர்ந்தவர்களைப் போலக் காணப்பட்ட போதினும் அவர்கள் விபச்சாரம், வேசித்தனம் போன்ற பெரும்பாவங்களில் வீழ்ச்சியடைவதைக் கண்டு மிகவும் ஆச்சரியம் அடைகின்றேன். அதின் காரணமாக அவர்களுடைய நல்ல ஊழியங்கள் பாழும் பயனற்றதுமாகிப் போய்விட்டதை நான் துயரத்துடன் கவனிக்கின்றேன். இதிலிருந்து கர்த்தரை அறிவது மட்டும் போதாது, நம்மையும், நம்முடைய நிலையையும் அறிந்து உணர்ந்திருப்பது மிகவும் அவசியமாகும் என்பதை நான் அறிகின்றேன்’’ என்று பண்டிதர் செல்வின் குயிஸ் என்ற தேவ மனிதர் சொல்லுகின்றார்.

நம்முடைய கண்கள் காண பிரபலமான தேவ ஊழியர்கள் ஆண்டவருக்காக மாபெரும் தேவ ஊழியங்களைச் செய்து கொண்டே அதே சமயம் விபச்சார பாவ வாழ்விலும் நீண்ட ஆண்டு காலம் நிலைத்து வாழ்ந்து வந்திருப்பதை பின்னர் நாம் கண்டு அதிர்ச்சியடைந்ததுண்டல்லவா? அன்பின் ஆண்டவருக்காக மிகுந்த வல்லமையோடு திரள் திரள் கூட்டத்தினருக்கு முன்பாக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து காண்பித்து கர்த்தரை மகிமைப்படுத்திய தேவ மக்கள் தங்களுடைய உலகப்பிரகாரமான

காரியங்களைச் சாதிப்பதற்காக எத்தனை நொடிப் பொழுதில் பாகால் தீர்க்கத்தரிசிகளுக்கு முன்பாக மண்டியிட்டு, அவர்களுக்கு பூஜைப் பொருட்களை வெகுமதி அளித்து, ஆண்டவருடைய ஜீவனுள்ள நாமத்தை தேவ ஜனத்துக்கும், புறமதஸ்தருக்கும் முன்பாக தூஷித்துவிட்டார்கள் அல்லவா?

காரணம், தங்களுடைய ஜென்ம சுபாவத்தைக் குறித்த பாவ நிலையை அவர்கள் கண்டு கொள்ளவிடாதபடி சாத்தான் அவர்களுடைய மனக்கண்களை குருடாக்கிவிட்டான். ஆகையால்தான் தாவீது ராஜா ''தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்'' (சங் 139 : 23, 24) என்று தேவனிடம் கெஞ்சினார். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் இதைக் குறித்து ''நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாப் பலப்பட வேண்டுமென்று '' (எபேசியர் 3 : 16) எபேசு சபைக்கு எழுதினார்.

அன்பின் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்று அவருடைய பரிசுத்த பிள்ளைகளாக வாழும் நாம் எல்லாரும் நமது ஆண்டவரைப் போல மாற்றமடைய வேண்டும், வாழவேண்டும் என்ற தாகத்தையும், வாஞ்சையையும், கதறுதலையும் நாம் கொண்டிராதபடி சாத்தான் நமது மனக்கண்களை குருடாக்கி வைத்திருக்கின்றான். நாம் நமது இயேசுவைப் போல மாறவேண்டும் என்பதை தேவனுடைய வார்த்தைகள் எத்தனை திட்டமும் தெளிவுமாகப் பேசுவதை நாம் வேதத்தில் பார்க்கின்றோம். ''தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்'' (ரோமர் 8 : 29) என்றும் ''மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை (இயேசு கிறிஸ்துவை) தரித்துக்கொள்ளுங்கள் (எபே 4 : 24) என்றும் ''தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே'' (கொலோ 3 : 10) என்றும் ''பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு

ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' (1 யோவான் 3 : 2) என்றும் தேவ வசனங்கள் பேசுவதுடன் எல்லாவற்றிற்கும் கிரீடம் வைத்தாற்போல் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் கலாத்திய நாட்டிலுள்ள சபைகளுக்கு ''என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகின்றேன் (கலா 4:19) என்று எழுதி வைத்தார். மேலும் அவர் ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' (பிலி 2 : 5) என்றும் கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல'' (ரோமர் 8 : 9) என்றும் அழுத்தமாகக் கூறி வைத்தார்.

பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன், சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான் (1 தெச 2 : 18)

சாத்தானுடைய தந்திரங்களில் ஒன்று தேவனுடைய ஊழியங்களைத் தடைசெய்வதாகும். எருசலேமின் அலங்கத்தைக் கட்டிய நெகேமியாவின் உள்ளத்தைக் கலங்கப்பண்ணும் வார்த்தைகளால் சோர்படையப்பண்ணி அலங்கத்தைக் கட்டவிடாமல் தடைசெய்த சன்பல்லாத் மற்றும் தொபியா அவர்களுடனே கூட அரபியனான கேஷேம் குறித்து வேதாகமத்தில் நாம் காண்கின்றோம் (நெகேமியா 4 : 2, 3)

சுவிசேஷ நற்செய்தியைப் பிரசிங்கித்த நம் அப்போஸ்தலர்கள் சாத்தானால் எவ்வளவாக தடைசெய்யப்பட்டு எத்தனை கொடூரமாக எல்லாம் அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை நாம் புதிய ஏற்பாட்டின் புத்தகத்தில் வாசிக்கின்றோம்.

தேவனுடைய பரிசுத்த ஊழியத்தை தடைசெய்வது மாத்திரம் சாத்தானுடைய நோக்கமல்ல. நாம் நம்முடைய ஆவிக்குரிய பரிசுத்த வாழ்விலும் வளர்ச்சிபெற முடியாத நிலையில் தடைகளை அவன் நமக்கு முன்பாக வைப்பதையும் நாம் காணலாம். தேவனுடைய சமூகத்தில் நாம் ஜெபிப்பதற்காக முழங்காலூன்றுவதை சாத்தான் எத்தனை உக்கிர பகையாக பகைத்து நம்மை ஜெபிக்கவிடாமல் தடைசெய்கின்றான் என்பதை கவனித்தீர்களா? ஒரு மணி நேரம் தேவனோடு உறவாடி மகிழ நினைத்த நம்மை சாத்தான் கடைசியாக 10 நிமிட திருப்தியற்ற ஜெபத்தோடு நமது காரியத்தை முடித்துக் கொள்ள நம்மை எத்தனையாக நயம் காட்டி நமது ஜெப வேளையை தடைசெய்து விட்டான் என்பதைப் பார்த்தீர்களா? கிறிஸ்தவ வாழ்வின் மகுடமாக விளங்கும் உபவாச ஜெபத்தின் அருகில் கூட நம்மை

நெருங்கவிடாமல் சாத்தான் கடுமையாக போராடுவதைக் கவனித்தீர்களா? ஆகார மோகத்துக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் தேவ ஊழியர்கள் உபவாச ஜெபத்தைக் குறித்து தங்கள் சபை மக்களுக்குப் பிரசிங்கிப்பதற்கு எத்தனையாக அஞ்சுகின்றார்கள் அல்லவா? அப்படியே உபவாச ஜெபத்தை அவர்கள் தங்கள் சபைகளில் வைத்தாலும் அந்த உபவாசங்கள் தங்கள் வழக்கமான சாப்பாட்டுக்கு எந்த ஒரு இடைஞ்சலும் இல்லாத வகையில் எத்தனை அருமையாக சத்துருவால் வடிவமைக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றது என்பதை நீங்கள் பார்க்கின்றீர்களா? காலை 10 மணி முதல் மத்தியானம் 1 மணி நேரம் வரை உபவாச ஜெபம். காலை 10 மணிக்கு முன்னர் காலை ஆகாரத்தை முடித்து வந்து உபவாசத்தில் அமர்ந்தால் 1 மணிக்கு உபவாசம் முடித்துவிட்டு உடனே சாப்பாட்டுக்குச் சென்று விடலாம். எந்த ஒரு பாதிப்பும் சரீரத்துக்கு கிடையாது. அடுத்த கோணத்தில் உபவாசம் எடுக்க வேண்டும் என்று கர்த்தருக்குள் தீர்மானித்து அதை ஆரம்பித்ததும் எப்படியோ காலை முடிந்து மத்தியான சாப்பாட்டு நேரம் வரவும், சமயலறை ஆகார வாசனை மூக்கில்படவும் சோர்பு, ஆயாசம், மயக்கம் வாந்தி எல்லாவற்றையும் கொண்டு வந்து அத்துடன் உபவாசத்தை முடியப்பண்ணி, எல்லா நாட்களையும்விட அந்த நாளில் இரட்டிப்பான சாப்பாட்டை சாப்பிட வைத்து இனிமேல் உபவாசம் பக்கம் தலைகாட்டி விடாதே என்று சத்துரு நம்மை விரட்டி அடித்து விடுகின்றானே!

இதைக் கருத்தோடு வாசிக்கும் தேவப் பிள்ளையே, சாத்தானாம் பிசாசு உங்கள் ஆத்துமாவை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றான் என்பதை திட்டமாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதைத்தான் அப்போஸ்தலனாகிய பேதுரு தமது நிருபத்தில் ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகின்றான்'' (பேதுரு 5 : 8) என்று நமக்கு எச்சரிக்கையாக எழுதி வைத்தார்.

ஆனால் இன்று மக்கள் சாத்தானுடைய வழியில் நடந்து அவனுக்கு கீழ்ப்படிந்து நடந்து வருகின்றார்கள். அவனுடைய ஆலோசனைகளுக்கு இணங்கி அவனுடைய வழியில் சென்று கொண்டிருக்கின்றார்கள். ஒரு நாள் மத்தியான நேரம் எனது அறையிலிருந்து எங்கள் வீட்டு தோட்டத்துக்கு வந்தேன். அந்தச் சமயம் ஒரு பெரிய பாம்பு என்னைக் கண்டதும் பயந்து

விரைந்து ஓடுவதைக் கண்டேன். அந்தப் பாம்போடு சில அடைக்கலான் குருவிகளும் அதைத் தொடர்ந்து ஓடுவதை நான் மிகுந்த ஆச்சரியத்துடன் கவனித்தேன். உண்மையில் அந்தப் பாம்பு எங்கள் தோட்டத்திற்கு வந்த ஒரே காரணம் அந்த அடைக்கலான் குருவிகளைப் பிடித்து உண்பதற்காகத்தான். பறவைகளுக்கு தினந்தோறும் நான் ஆகாரம் கொடுப்பதால் நிறை பறவைகள் எங்கள் வீட்டைச் சுற்றிலும் காணப்படுகின்றன. ஒரு வேளை நான் அந்த வேளை வெளியே வந்திராதபட்சத்தில் அந்தப் பாம்பு தன் மட்டாக அந்த அடைக்கலான் குருவிகளைப் பிடித்து உண்டிருக்கும். ஆனால் என்னைக் கண்டதும் அது ஓட்டம் பிடித்தது. அதைத் தொடர்ந்து அந்த அடைக்கலான் குருவி கூட்டமும் ஓடின. இன்று மக்கள் சாத்தானுக்குப் பின்னால் சாவதானமாக ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். சாத்தான் அவர்களுக்கு என்ன என்ன போதனை கொடுக்கின்றானோ அந்தப் போதனைகளின்படி சீராக நடந்து செல்லுகின்றனர்.

அந்த மக்களுடைய வாழ்வில் மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, பரிசுத்தம், மனத்தாழ்மை,ஜெபம், உபவாசம், வேத வசன தியானம், சரீர ஒடுக்கம், பரத்தைப்பற்றிய வாஞ்சை எதுவுமே இருக்காது. நேரத்துக்கு நேரம் புசித்துக் குடித்து தங்கள் சரீரத்தை எந்தவிதத்திலும் பாதிக்கவிடாமல் கருத்தாகப் பாதுகாத்து நடந்து கொள்ளுவார்கள். ''பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்'' (கொலோ 3 : 2) என்றார் பவுல் அப்போஸ்தலன். ஆனால் நாம் உலக மாயைகளை அதிகம் அதிகமாகத் தேடி நாடி ஓடிக்கொண்டிருக்கின்றோம். நம்முடைய விலையேறப்பெற்ற ஆத்துமாவின் நித்திய வாழ்வுக்காக நாம் இதுவரை செய்த காரியம் என்ன? இந்தச் செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் வேளையில்தானே மரணம் நம்மைச் சந்திக்குமானால் நமது ஆத்துமாவின் காரியம் என்னவாகும்? தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளை அது சுதந்தரிப்பதற்காகப் பாடிப்பறந்து செல்லுமா? (1 கொரி 2 : 9) அல்லது ''சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்'' (மத் 25 : 41) என்ற தேவ கோபாக்கினையின் வார்த்தைகளை துக்கத்துடன் கேட்டுக் கொண்டு நரக பாதாளம் செல்லுவோமா?

நமது ஆத்துமாவுக்கு எதிராக சாத்தான் எந்தவிதத்திலும் அதை அழிப்பதற்காக இராப்பகலாக போராடிக் கொண்டேயிருக்கின்றான். அவன் நமக்கு எதிராகப் போராடினாலும் நம் அன்பின் தேவனும் நம்மைப்

பாதுகாப்பதற்காக ''இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை'' (சங் 121 : 4) என்ற தேவ வாக்கின்படி நம்மோடு கூட இருந்து நமக்காக யுத்தம் செய்யும் தேவனாக இருக்கின்றார் (யாத் 14 : 14) (யோசுவா 10 : 42) '' சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்'' (லூக்கா 10 : 19) என்று அவர் நமக்கு வாக்களித்துள்ளார். ''உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்'' (1 யோவான் 4 : 4) என்ற திடநம்பிக்கை நமக்கு உண்டு. நம் உள்ளத்தில் எரிந்துகொண்டிருக்கும் தேவ ஆவியானவரின் பரிசுத்த அக்கினியை சாத்தான் அவித்துப் போடுவதற்காக குடம் குடமாகத் தண்ணீரை ஊற்றினாலும் அது அவிந்து போகாவண்ணம் அடுத்த பக்கத்திலிருந்து இயேசு இரட்சகர் குடம் குடமாக அந்த அக்கினியில் கிருபைப் பிரவாகம் என்ற எண்ணெயை ஊற்றுவதை ''மோட்ச பிரயாணம்'' என்ற பரிசுத்த புத்தகத்தில் நாம் வாசிக்கின்றோம்.

நமது ஆத்துமாவின் அனுசாரியாக நம்மோடு கூட இருந்து நம்மை எப்படியும் தாம் வாழ்கின்ற நித்திய பேரானந்த மோட்ச இன்ப வீட்டிற்கு கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக பிரயாசம் எடுக்கும், தம்முடைய பிதாவிடம் நம்முடைய ஆத்துமாவுக்காக இராப்பகலாக பரிந்து மன்றாடிக் கொண்டிருக்கும் நம் அன்பின் ஆண்டவருக்கு ஒத்தாசையாக நாமும் அவரது வார்த்தைகளுக்கு நடுநடுங்கி (ஏசாயா 66 : 2) கீழ்ப்படிந்து சாத்தானுக்கு எதிராகப் போராடி ஜெயத்தைப் பெற்றுக் கொள்ளுவோம். நமது ஆத்துமாவை எப்பொழுதும் விழிப்போடு வைத்துக் காத்துக் கொள்ளுவோம். ''என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்'' (யோவான் 15 : 5) என்றாரே அந்த அன்பரின் அன்பில் நிலைத்திருப்போம். நமது ஜெப உபவாச வாழ்க்கைகளை மிகவும் கருத்துடன் பாதுகாத்து நமது ஆவிக்குரிய பரிசுத்த வாழ்க்கையில் அனலாயிருப்போம். தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளை இரவும் பகலும் தியானம்பண்ணி (சங்கீதம் 1 : 2) (யோசுவா 1 : 8) அந்த பரிசுத்த நித்திய ஜீவ வார்த்தைகளில் நாம் களிகூர்ந்து மகிழுவோம். அதற்கான தேவ கிருபைகளை தேவன்தாமே உங்களுக்கும் எனக்கும் தந்தருள்வாராக. ஆமென்.

"கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" *(2 பேதுரு 2 : 9)*

உங்கள் உருக்கமான அன்பின் ஜெபங்களை எதிர் நோக்குகின்றோம்

''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்'' (1 தீமோ 2 : 4)

''அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்'' (லூக்கா 24 : 47, 48)

இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும், பாவ மன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும், இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்கு சாட்சிகளாயிருக்கிறோம்..........'' (அப்போ 5 : 31, 32)

எங்கும் அமைதி சூழ்ந்த நள்ளிரவு நேரம் அது. உலக மக்கள் எல்லாரும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கக் கூடிய இராக்கால வேளை அது. அந்த நாட்களில் நான் எனது உலகப்பிரகாரமான அலுவலில் ஒரு தேயிலைத் தோட்டத்தில் கடைநிலை குமஸ்தாவாகப் பணி செய்து கொண்டிருந்தேன். நாங்கள் அங்கு குடியிருந்த எங்கள் வீட்டிற்கு எதிரான மேட்டில் ஒரு படுகர் (நீலகிரி பழங்குடி மக்கள்) வாழும் கிராமம் இருந்தது. அந்த சிறிய கிராமத்திலிருந்த நாய்கள் அவ்வப்போது குரைக்கும் சப்தங்களும், நான் வேலைசெய்த தேயிலைத் தோட்டத்தின் கூர்க்கா காவலாளி வேளாவேளைகளில் எங்கள் வீட்டுக்கு மேலாக உள்ள ரஸ்தா வழியாகச் செல்லும் சப்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த நள்ளிரவை நான் இன்றும் பூரணமாக திரும்பிப் பார்த்து நினைவுகூர்ந்து கர்த்தருக்குள் களிகூரமுடியும். கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

அந்த நள்ளிரவு நேரம்தான் வானத்தையும், பூமியையும் படைத்த சர்வவல்ல தேவன் தமது மகிமையின் சுவிசேஷத்தை நான் முழு நேர ஊழியனாகச் செய்ய வேண்டும் என்றும், அதின் காரணமாக நான் எனது உலகப்பிரகாரமான வேலையை உடனே ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் என் உள்ளத்தில் பலமாகக் குரல் கொடுத்து என்னை அழைத்த நேரம். ஆண்டவரின் அந்த அழைப்பு திட்டமும், தெளிவுமாக என் உள்ளத்தில்

அப்பொழுது தொனித்தது. அதற்கு முன்பு பல தடவைகளும் அவர் என்னை அழைத்து வந்திருந்தபோதினும் நான் அவருக்குக் கீழ்ப்படியாமல் அவருக்குச் சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த நள்ளிரவு நேரம் அந்த தேவ அழைப்பு திட்டமும் தெளிவுமான கடைசி அழைப்பாக என்னை நோக்கி வந்தது. நான் கட்டிலில் படுத்திருந்தவாறே அன்பின் ஆண்டவரிடம் ''நான் எனது உலகப்பிரகாரமான அலுவலை விட்டுவிட ஆயத்தமாக இருப்பதாகவும், ஆனால் எந்த ஒரு நிலையிலும் அன்பின் ஆண்டவர் என்னைக் கைவிடாமல் வழிநடத்த வேண்டும் என்றும், வயதான பெற்றோர், மனநிலை பாதிப்புக்குள்ளான பெலவீனமான மனைவி, இரண்டு சிறிய மகன்களின் காரியம் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்து அதற்கான திட்டமான வாக்குத்தத்தத்தை அவர் எனக்கு வேதாகமத்திலிருந்து கொடுக்க வேண்டுமென்றும், ஒருக்கால் வாழ்வில் கடுமையான பாடுகள், துயரங்கள், வறுமை சஞ்சலங்கள் ஏற்பட்டால் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை வைத்து அவருடன் போராட வேண்டும் என்றும், நான் கேட்ட மாத்திரத்தில் நான் எனது வேதாகமத்தை உடனே திறந்து பார்க்கும்படியாகவும், அங்கே தமது மாறாத வாக்குத்தத்தத்தை எனக்குத் தருவதாகவும் கூறினார். எப்பொழுதும் எனது படுக்கையில் எனது தலையணைக்குக் கீழாக எனது டார்ச் விளக்கும், வேதாகமமும் இருக்கும். கர்த்தரின் குரல் என் உள்ளத்தில் கேட்டதும் நான் எனது வேதாகமத்தைத் திறந்து டார்ச் விளக்கை அதில் போட்டுப் பார்த்தபோது ஏசாயா தீர்க்கத்தரிசனப் புத்தகத்தின் 60 ஆம் அதிகாரம் 19, 20 ஆம் வசனங்களில் டார்ச் விளக்கின் ஒளி விழுந்தது. அந்த இரண்டு வசனங்களும் இவ்வாறு காணப்பட்டன ''இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும், கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார். உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை, உன் சந்திரன் மறைவதுமில்லை, கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார், உன் துக்க நாட்கள் முடிந்து போம்''. இந்த வார்த்தைகளை எனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட நான் மறு நாளே எனது ராஜினாமா கடிதத்தை எனது நிர்வாகத்தினருக்கு எழுதிக்கொடுத்துவிட்டு எனது பணியிலிருந்து நின்றுகொண்டேன். இந்தச் சம்பவம் 1976 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அன்று அருமை இரட்சகர் எனக்குக் கொடுத்த தமது வாக்குத்தத்தத்தில் ஒரு உறுப்புக்கூட மாறாமல் வாக்கு மாறாத வல்ல தேவன் தமது ஊழியத்தின் பாதையிலும், குடும்ப வாழ்விலும் என்னை அதிசயம் அற்புதமாக இன்று வரை வழிநடத்தி வந்திருக்கின்றார். வாழ்வின் ஒவ்வொரு கடினமான மலை

ஏற்றத்திலும் நான் மேற்கண்ட அவருடைய வாக்குத்தத்தத்தை நினைவு கூருவதற்கு முன்பதாகவே, அவர் எனக்குக் கொடுத்த தமது வார்த்தையை அவரே எனது கண்களுக்கு முன்பாக நிழலாடச் செய்து, பார்த்தாயா, நான் உனக்கு கொடுத்த எனது வார்த்தையின்படி நான் உன்னை நடத்துவேன், நீ எதற்கும் அஞ்சவேண்டியதே இல்லை என்று கூறி என்னை நடத்தி வந்திருக்கின்றார். கர்த்தருக்கே துதி உண்டாவதாக. அதுமட்டுமா? தம்முடைய மகிமையின் சுவிசேஷத்தை ஏழைப்பரதேசியாகிய என்னிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய் என்னைத் தகுதியுள்ளவனென்று கண்டு என்னை அந்த நள்ளிரவு நேரம் எனது சிறிய அறைக்கு வந்து என்னை அழைத்தாரே (1 தெச 2 : 4) நான் அவருக்கு எத்தனை உண்மையும், உத்தமமுமாக அவருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று அவருடைய அழைப்பை நான் பயத்தோடும் நடுக்கத்தோடும் அடிக்கடி நினைவுகூறுகின்றேன். அதே அறையில்தானே அன்பின் ஆண்டவர் என்னோடு அதற்கு முன்பும் ஒரு தடவை என்னுடன் பேசியிருக்கின்றார். அந்தக் காரியம் எனது ஊழிய அழைப்பைக் குறித்ததல்ல. அப்பொழுது அந்த அறை பூமி அதிர்ச்சிக்கு உள்ளான ஒரு அறையைப் போல கர்த்தரின் சத்தம் கேட்டு அதிர்ந்தது. அது ஒரு தனிச் சரித்திரமாகும். கர்த்தருக்கே மகிமை.

அத்தனை பிரத்தியட்சமாக என்னைக் குரல் கொடுத்து அழைத்த தேவன் தமது ஊழியத்தின் பாதையில் பிரதி வருடமும் எனக்குக் கை கொடுத்து தமது ஜீவனுள்ள நாமத்தை நாங்கள் ஒரு குழுவாக, வாகனங்களுடன் செய்ய இந்த நாட்களில் தமது கிருபைகளை பரத்திலிருந்து எங்களுக்குத் தந்து வருகின்றார். அந்த அன்பருக்கு நாம் என்ன ஈட்டைச் செலுத்த முடியும்?

இந்த 2005 ஆம் ஆண்டிலும் அன்பின் ஆண்டவர் எங்களுடைய இமயமலை தேவ ஊழியங்களை பல்லாயிரங்களுக்கு ஆசீர்வாதமாக்கிக் கொடுக்க இந்த ஆண்டின் ஆரம்ப மாதங்களில் தேவ சமூகத்தில் நான் உபவாசம் இருந்து பாரத்தோடு ஜெபித்தேன். எனது உபவாச ஜெப நாட்களை அன்பின் ஆண்டவர் முற்றுமாகப் பொறுப்பெடுத்து நடத்தி பாதுகாத்துத் தந்தார். ஒவ்வொரு நாள் உபவாசமும் தேவ தயவால் பலமணி நேர ஜெபத்தோடு முடிவுற்றன.

கர்த்தருக்குச் சித்தமானால் இந்த ஆண்டிலும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் தேவனுடைய ஊழியத்தின் பாதையில் வடக்கே இமயமலைகளுக்குச் செல்ல மிகுந்த ஜெபத்தோடும், உபவாசத்தோடும் நாங்கள் ஆயத்தமாகி வருகின்றோம். கடந்த ஆண்டைப்போலவே இந்த

ஆண்டும் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி இமயமலைகளின் கிராமங்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லவிருக்கின்றோம். ஊழியத்தில் கலந்துகொள்ளக்கூடிய எல்லா தேவ ஊழியர்களுக்கு வேண்டிய நல்ல தேக சுகத்தையும், பெலத்தையும், ஒருமனப்பாட்டின் ஆவியையும், அவர்கள் விட்டுவிட்டு வருகின்ற அவர்களின் அன்பின் குடும்பத்தினருக்குத் தேவையான நற்சுகத்தையும், தேவப் பாதுகாப்பையும் கர்த்தர் கிருபையாக தந்தருள அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இதுவரை உத்தராஞ்சல் மாநிலத்திலேயே தேவ ஊழியங்களை நிறைவேற்றி வந்த நாங்கள் இந்த தடவை கர்த்தர் தயைபுரிந்தால் இமாச்சல் பிரதேசம் மாநிலத்திற்குக் கடந்து செல்லவிருக்கின்றோம். இந்த மாநிலத்தில் தேவனுடைய ஊழியம் செய்யத் தடைகள் அதிகமாக இருக்குமென்று நாங்கள் எதிர் நோக்குகின்றோம். ஊழியத்தின் பாதையில் அன்பின் ஆண்டவர் எங்களையும், எங்கள் வாகனங்களையும், தேவனுடைய பிரசுரங்களையும் பாதுகாத்துக் கொள்ள அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

அச்சுப்போடவும், விலைகொடுத்து வாங்கவுமிருக்கும் பல்லாயிரக்கணக்கான இந்தி மொழி கைப்பிரதிகள், மற்றும் சுவிசேஷப் பங்குகள் தக்க சமயத்தில் அச்சிடப்பட்டு அந்தந்த இடங்களுக்குப் போய்ச் சேரவும், மழைகளினால் அவைகள் சேதமடையாதிருக்கவும், தந்திர சாத்தான் அவைகளுக்கு தீங்கு செய்யாதிருக்கவும் உங்கள் உருக்கமான அன்பின் ஜெபங்களை அதிகமாக எதிர்நோக்குகின்றோம். அதற்கான பிரதி பலன் பரலோகில் உங்களுக்கு உண்டு.

''சாத்தான் ஒரு கைதேர்ந்த ஓவியன், அவன் பாவத்தைக் கவர்ச்சிமிக்க வண்ணங்களில் சித்திரந் தீட்டுகின்றான்'' ("Satan is an artist, he paints sin in very attractive colours") என்று ஒரு தேவ பக்தன் கூறினார். எத்தனை உண்மையான வரிகள் அவை! நம்முடைய கண்கள் காணும் தேவனுக்குப் பிரியமற்ற காட்சிகளையும், மனதில் தோன்றும் அசுத்த எண்ணங்களையும் பிசாசு தனது கைவன்மையால் நேர்த்தியாகச் சித்திரம் வரைந்து நமது கண்களுக்கு முன்னர் திரும்பத் திரும்பக் கொண்டு வந்து நிறுத்தி நம்மைப் பாவம் செய்ய வழிநடத்திச் செல்லுவான். பரிசுத்த அகஸ்டின் மனதில் தோன்றும் எண்ணங்களைக் குறித்துப் பேசுகையில் ''உனது மனதில் தோன்றும் எண்ணங்களைக் கருத்துடன் காவல் செய், ஏனெனில் அவைகள் பரலோகத்தில் வாசிக்கப்படுகின்றன'' என்றார். (Guard your thoughts for they are read in Heaven)

இமயமலை கிராமங்களில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

''ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்'' *(1 கொரி 1 : 27, 28, 29)*

தேவன் தம்முடைய மகிமையின் சுவிசேஷத்தை மக்களுக்கு அறிவிக்க எந்த ஒரு மனிதனையும் பயன்படுத்தக்கூடும் என்பதற்கு ஏழைப் பாவியாகிய நான் ஒரு உதாரணமாக இருக்கின்றேன். கர்த்தருக்குத் துதி, கனம், மகிமை உண்டாவதாக. எனது உலகப் பிரகாரமான கல்வி வெறும் 10 ஆம் வகுப்பு மாத்திரமே. ஆங்கிலத்தில் எனது அறிவு முற்றும் சூன்யமாகும். எப்படியோ அரசாங்க தேர்வில் பாஸ் மார்க் பெற்றுத் தேர்ச்சியடைந்தேன். எனது ஆங்கில விடைத்தாளை திருத்திய இரக்கமுள்ள ஆசிரியர் எனக்கு கருணை காட்டி என்னைத் தேர்ச்சியடையச் செய்திருக்க வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஆங்கில வார்த்தை ஒன்று கூட எனக்கு வாசிக்க முடியாது. ஆங்கிலத்தில் உள்ள Would, Could, Should *எல்லாம் எனக்கு முற்றும் புரியாத சிம்ம சொப்பன வார்த்தைகளாகும். எனக்கு ஆங்கிலப் பாடம் எடுத்த ஆங்கில ஆசிரியருக்கு நான் ஒரு தீராத தொல்லையாக இருந்தேன். அத்தனையான நிர்மூடனை இன்று ஆங்கிலத்தில் பெரிய, பெரிய ஆங்கில கிறிஸ்தவப் புத்தகங்களை வாசித்து தமிழில் அவைகளை மொழி பெயர்த்து நமது தேவ எக்காளத்தில் அருமையாக வெளியிட அன்பின் ஆண்டவர் கிருபை தந்துள்ளார். எனது பீரோக்களில் உள்ள புத்தகங்கள் அனைத்தும் ஆங்கிலப் புத்தகங்கள்தான். கர்த்தருக்கே மகிமை.*

நான் சிறுவனாக இருக்கும்போது மிகவும் பயப்படுவேன். இரவின் இருள், மரித்த சடலம், கல்லறைத் தோட்டம் எல்லாம் எனக்கு மிகுந்த பயத்தைத் தரக்கூடியவைகளாகும். இரவில் நான் தனிமையில் படுக்கமாட்டேன். இரவில் எனது இரண்டாம் தங்கை அன்பு நார்ட்டன்

அவர்களோடுதான் படுத்திருப்பேன். தனிமையில் என்னால் படுக்கவே முடியாது. நள்ளிரவு நேரங்களில் நான் கண் விழித்துவிட்டால், அந்த இருளான நேரத்தில் தங்கை எனக்கு அருகில் படுத்திருக்கின்றார்களா என்று எனது கரத்தால் தொட்டுப் பார்த்துக் கொள்ளுவேன். என்னோடு ஒவ்வொரு ஆண்டும் இமயமலை மற்றும் நேப்பாள தேவ ஊழியங்களில் கலந்து கொண்டு வரும் சகோதரன் நார்ட்டன் அவர்கள் எனது இரண்டாம் தங்கையின் கணவர் ஆவார்கள். இரவில் வீட்டைவிட்டு வெளியே சென்று சிறுநீர் கழித்து வரவேண்டுமானாலும் அன்பு நார்ட்டன் அவர்கள்தான் எனது துணைக்கு வருவார்கள். இரவின் இருள் என்றால் பயந்து நடுங்குவேன். இந்த பயங்கள் எல்லாம் நான் அன்பின் ஆண்டவர் இயேசு இரட்சகரை நான் என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டபோது பகலவனைக்கண்ட பனிபோல பறந்தோடிவிட்டது. ''அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும், பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல'' (1 யோ 4 : 18) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது அல்லவா? சிறுவனாக இருந்தபோது பயந்து நடுங்கிய நான் இரட்சகர் என் உள்ளத்தில் வந்த பின்னர், பின் வந்த நாட்களில் குறிப்பாக எனது தனிமையான இமயமலை தேவ ஊழியங்களில் தன்னந்தனியனாக கானகங்களில் தனிமையில் இரவில் நான் எந்த ஒரு பயமுமின்றிப் படுத்திருக்கின்றேன்.

நான் சிறுவனாக இருந்த போது கல்லறைத் தோட்டத்தை காண்பது என்பது மிகுந்த பயத்தை எனக்குக் கொடுக்கும். மாலை வேளைகளில் ஊருக்கு அப்பாலுள்ள ஒரு கல்லறைத் தோட்டத்தை நான் கடந்து செல்ல வேண்டுமானால் பயந்து நடுநடுங்குவேன். நெல்லை மாவட்டத்திலுள்ள பெரிய கிறிஸ்தவ கிராமம் நாசரேத்தில் உள்ள வாரந்தோறும் செவ்வாய்க் கிழமை கூடும் சந்தைக்கு நான் எனது தகப்பனாரோடு சிறுவனாக இருக்கும்போது செல்லுவேன். சந்தையில் சாமான் வாங்கிவிட்டு மாலையில் ஊர் திரும்பும்போது நாசரேத்துக்குப் பக்கத்திலுள்ள அகப்பைக்குளம் என்ற ஊரை நாங்கள் கடந்து ஊருக்கு அப்பாலுள்ள கல்லறைத் தோட்டத்துக்கு வருவோம். கல்லறைத் தோட்டத்தின் முகப்பு கேட் பக்கம் வரும்போது அங்குள்ள கல்லறைகள் எல்லாம் நன்றாகத் தெரியும். அதைக் காண்பதற்கு மிகவும் பயப்பட்டு எனது தந்தையின் பக்கவாட்டில் மறைந்து அதைக் கடந்து செல்லுவேன். என்ன ஆச்சரியம், பின் வந்த நாட்களில் கல்லறைத் தோட்டத்திலேயே கல்லறைகளுக்கு மேல் நான் படுக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை ஆண்டவர் எனக்குத் தந்தார். இமாச்சல் பிரதேசத்திலுள்ள

குளு என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள கிறிஸ்து நாதர் தேவாலயம் கல்லறைத் தோட்டத்தில், கல்லறைகளுக்கு மேலேயேதான் கட்டப்பட்டுள்ளது. இமாச்சல் பிரதேச அரசாங்கம் கிறிஸ்தவர்கள் தேவாலயம் கட்ட அந்த இடத்தைத்தான் கொடுத்தது. தேவாலயத்தின் அருகில் இன்றும் பெரிய பெரிய கல்லறைகள் அப்படியே உள்ளது. அந்த தேவாலயத்தில் தான் நான் படுத்திருக்கின்றேன். சிறுவனாக இருந்தபோது கல்லறைகளைக் காணப் பயப்பட்ட என்னை அன்பின் ஆண்டவர் எந்த ஒரு பயமுமில்லாமல் கல்லறைகளுக்கு மேலாகவே சமாதானத்தோடு நித்திரை கொள்ளச் செய்தார்.

தேவன் தம்முடைய மகிமையின் ஊழியத்தைச் செய்ய ஒரு நிர்மூடனை, ஒரு பயந்து நடுங்கும் பயந்தாங்கொள்ளியை தெரிந்து கொண்டார். உண்மைதான், உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொள்ளுகின்றார். ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா? யார் யார் தங்களை முற்றுமாக தங்கள் அன்பின் ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய பரிசுத்த பாதை செல்லுவார்களோ அந்த மக்களை அவர் இன்றும் பயன்படுத்த வல்ல தேவனாக இருக்கின்றார் என்பதற்கு ஏழைப்பாவியாகிய நான் ஒரு சாட்சியாக இருக்கின்றேன்.

ஆண்டுதோறும் மேற்கொள்ளும் இந்த இமயமலை தேவ ஊழியங்களை முற்றுமாக அன்பின் தேவனே பொறுப்பெடுத்து நடத்தி வருகின்றார் என்பதையும், இந்த ஊழியங்கள் அவருடைய உள்ளத்திற்கு உகந்த ஒரு ஊழியம் என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எப்படியெனில், ஒவ்வொரு ஆண்டும் இந்த எளிய தேவ ஊழியம் எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் ஒழுங்காக நடைபெற தேவன் மனுஷ புத்திக்கு எட்டாத ஆச்சரியமான வழிகளில் நமக்கு ஒத்தாசை புரிந்து வருகின்றார். அத்துடன் இந்த தேவ ஊழியத்திற்கு எதிராக எழும்பக்கூடிய எல்லா எதிர்ப்புகளையும் அவரே முறியடித்து தம்முடைய பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தி வருகின்றார். கடந்த ஆண்டில் அப்படி நமக்கு விரோதமாக எழும்பிய மலை போன்ற எதிர்ப்புகளை எல்லாம் அன்பின் தேவன் பனிபோல மாற்றி நமக்கு விரோதமாக எழும்பிய மக்களை வெட்கப்பட்டுத் தலை குனியச் செய்தார். நம்முடைய தேவ ஊழியங்கள் பேர் புகழுக்காகவோ அல்லது தேவ எக்காளத்தில் படங்கள் போட்டு பணம் சம்பாதிப்பதற்கோ செய்யப்படும் ஊழியங்கள் அல்ல என்பதை நமக்கு விரோதமாக கடந்த ஆண்டு எழும்பியவர்களின் காதுகள் கேட்கச் செய்து மீண்டும் அவர்கள் நமது

ஊழியத்திற்கு எதிராக பொய் வார்த்தைகளை வசனியாதபடி அவர்களுடைய வாயை ஜீவனுள்ள தேவன் கட்டி வைத்துவிட்டார். கர்த்தருக்கு நாம் என்ன கட்டைச் செலுத்த முடியும்?

இந்த ஊழியங்கள் எப்படி எப்படி எங்கெங்கே நடக்கவேண்டும் என்ற காரியங்களையும், ஊழியத்தில் என்னென்ன காரியங்கள் சம்பவிக்கும் என்ற விபரங்களையும் அந்த அன்பின் கர்த்தரே எங்களுக்கு வெளிப்பாடுகள் கொடுத்து வழிநடத்தி வருகின்றார். குறிப்பாக இந்த தடவை நமது ஊழியங்கள் பெரும்பாலும் ஆரம்ப பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகளிலேயே நடக்கும்படியாக அவர் எங்களை அற்புதம் அற்புதமான வழிகளில் வழிநடத்திச் சென்றார். முன் ஒருக்காலும் அவர் எங்களை இவ்விதமாக முழுவதும் மாணவ மாணவிகள் மத்தியில் கொண்டு செல்லவில்லை. உத்தராஞ்சல் மாநிலத்தில் இனி நமக்கு ஒருக்கால் தேவ ஊழியங்கள் இல்லை என்பதை தமது மனதில் கொண்டு அவர் எங்களை இவ்விதமாக வழி நடத்தியிருக்கலாம் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இந்தத் தடவை ஊழியத்தின் பாதையில் நாங்கள் சம்பாவத் என்ற இடத்தில் உள்ள ஒரு லாட்ஜில் தங்கியிருந்தோம். அங்கு தங்கியிருந்த நாட்கள் ஒன்றில் நான் ஒரு சொப்பனம் கண்டு எனது நித்திரையில் பலமாக சத்தமிட்டுவிட்டேன். நான் எனது சொப்பனத்தில் எங்களோடு ஊழியத்தில் கலந்து கொண்ட சகோதரன் ஜெபராஜ் அவர்கள் ஒரு பெரிய கெடு பாதாளமான பள்ளத்தை நோக்கி அதின் ஓரத்திற்கே சென்றுவிட்டது போல சொப்பனம் கண்டு அவர்கள் அங்கு செல்ல வேண்டாம் என்று நான் சத்தமிட்டேன். அடுத்து வந்த மறு நாள் ஊழியத்தில் சகோதரன் ஜெபராஜ் அவர்கள் உயரமான மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்த ஒரு சிறிய குழந்தைக்கு கிழேயிருந்து சுவிசேஷ துண்டுப் பிரசுரங்களைக் கொடுக்கவும், அந்தக் குழந்தை தலை குனிந்து மேலேயிருந்து வாங்கினதைக் கண்ட நான் முந்தின நாள் இரவில் சொப்பனத்தில் சத்தமிட்டு சகோதரனை தடுத்தது போல இப்பொழுதும் சத்தமிட்டுத் தடுத்தேன். நிச்சயமாக அந்தக் குழந்தை மேலேயிருந்து கீழே விழுந்து மடிய இருந்ததை கர்த்தர் கிருபையாகக் காத்துக் கொண்டார். கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

பாதம் கல்லிடறாமல், பகைவர் உக்கிரம் மீறாமல், தூதர் உன்னைக் கைகளில் தூக்கி ஏந்திக்கொள்வரே.

சம்பாவத் என்ற இடத்தில் நாங்கள் தங்கியிருந்த லாட்ஜின் உச்சி

மாடியில் நாங்கள் 4 பேர் இரண்டு அறைகளில் தங்கியிருந்தோம். நானும், சகோதரன் நார்ட்டன் அவர்களும் ஒரு அறையிலும், பாஸ்டர் சாமுவேல் அவர்களும், சகோதரன் ஜெபராஜ் அவர்களும் மற்றொரு அறையிலும் தங்கியிருந்தோம். நானும் சகோதரன் நார்ட்டன் அவர்களும் தங்கியிருந்த அறையின் கழிப்பறை நல்ல உயரமான இடத்தில் இருந்தது. எந்த ஒரு ஞானத்தில் அதை அப்படி அந்த உயரத்தில் கட்டினார்களோ நமக்குத் தெரியாது. அங்கிருந்து இறங்கும்போது மிகவும் கவனமாக இறங்க வேண்டும். கழிப்பறை மிகவும் இடுக்கமாகவும் இருந்தது. அந்த அறை முழுவதும் வழுக்கலான சலவைக்கற்களால் தளவரிசைப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு நாள் நான் அந்தக் கழிப்பறையிலிருந்து கீழே இறங்கும்போது நான் எனது கால்களை வைத்த இடத்தில் பாசி பிடித்து வழுக்கலாக இருந்த இடத்தில் நான் எனது கால்களை வைத்த உடனே கால் வழுக்கி அந்தகரணத்தில் செங்குத்தாக விழுந்தேன். நான் விழுந்த வேகத்தில் கூர்மையாக இருந்த அந்த கழிப்பறையின் திட்டு பலமாக எனது தோளின் மேல் பாகத்தைக் கிழித்து இரத்தக் கோரையாக்கிவிட்டது. நான் விழுந்த வேகத்தில் முதலாவது அடிபடக்கூடியது எனது தலைதான். ஆனால், அன்பின் ஆண்டவர் தமது அநாதி கிருபையால் எனது தலைக்கு ஒரு சிறிய அடிகூட படாமல் அற்புதமாகப் பாதுகாத்துக் கொண்டார். நிச்சயமாக அன்பின் ஆண்டவர் அந்த இடத்தில் தமது தூதன் ஒருவனை அனுப்பி எனது தலையை அந்தத் திட்டில் படாமல் காத்துக் கொண்டார் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். தவறியிருக்கும் பட்சத்தில் எனது மண்டை அந்த இடத்தில் அடிபட்டு நொறுங்கிப்போயிருக்கும். இன்னொரு அதிசயம் என்னவேனில் எனது தோளில் எற்பட்ட இரத்தக் கோரையான சிராய்ப்புகள் சில நாட்களிலேயே இருந்த இடம் தெரியாமல் காய்ந்து மறைந்து போயிற்று. கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

நமது தானியேல் தீர்க்கனை சிங்கக் கெபியில் சிங்கங்களுக்கு இரையாக அவருடைய சத்துருக்கள் போடும் போது அவரது வயது 82 என்று வேதபண்டிதர்கள் கூறுகின்றனர். அந்தக் கொடியவர்கள் அந்தப் பழுத்த பழமான விருத்தாப்பிய மனிதரை அந்தக் கெபியில் மேலிருந்து கீழாக தலைகீழாகத் தள்ளியிருப்பார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். ஆம் அத்தனை கோபம் அந்த மக்களுக்கு அவர் மேல் இருந்தது. ஆனால், அதிசயம் என்னவெனில் சிங்கக் கெபியின் வாயிலிலேயே தேவ தூதர்கள் அவரைப் பொறுப்பெடுத்து அவருடைய பாதங்கள் கல்லில் இடறாதபடி வெகு அருமையாக பாரசூட்டிலிருந்து பாதுகாப்பாக தரை இறங்கும் மனிதனைப்

போல துறை இறக்கியிருப்பார்கள். கர்த்தருக்கே துதி உண்டாவதாக. அன்று சம்பாவத்திலும் அன்பின் தேவன் அதையேதான் ஏழைப் பாவியாகிய எனக்கும் திரும்பச் செய்திருப்பார் என்று நான் கர்த்தரில் உறுதியாக நம்புகின்றேன். அல்லேலூயா.

கேத்தி, பாரகுனா கிராமங்களில் நடந்த ஊழியங்கள்

துனியா என்ற இடத்தில் நாங்கள் தங்கிக்கொண்டு ஒரு நாள் கேத்தி என்ற இடத்திற்குத் தேவ ஊழியத்தின் பாதையில் சென்றோம். கேத்தி, தனியா என்ற இடத்திலிருந்து 20 கி.மீ.தொலைவில் உள்ளது. பாதி தூரத்திற்கு ரஸ்தா நன்றாக இருந்தது. பின்னர் நெடுந் தூரத்திற்கு ரஸ்தாவில் போடப்பட்டிருந்த சரளைக் கற்கள் சமப்படுத்தப்படாததால் மிகவும் கரடு முரடாக இருந்தது. சமீபத்தில்

பெய்திருந்த மழையும் பாதையை குண்டும் குழியுமாக்கி வைத்திருந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு எங்கள் வாகனங்கள் வரவும் ரஸ்தாவுக்கு அருகில் புல் மேய்ந்து கொண்டிருந்த இரண்டு காளை மாடுகளில் ஒரு வெள்ளை மாடு எங்கள் வாகனங்களில் ஒன்றை நீண்ட தூரத்திற்கு துரத்திக் கொண்டு வந்தது. பொதுவாக நாய்கள் வாகனத்தை ரஸ்தாக்களில் துரத்திக்கொண்டு வருவதை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் ஒரு காளை மாடு துரத்துவதை இப்பொழுதுதான் நான் முதன் முறையாகப் பார்த்திருக்கின்றேன். ஆண்டவருடைய மகிமையின் சுவிசேஷம் எங்கள் வாகனத்தில் எடுத்துச் செல்லப்படுவதையும், தேவ ஊழியர்களாகிய நாங்கள் சாத்தானுடைய

கோட்டைக்குள் செல்லுவதைக் கண்ட அவன் தனது வாகனமாகிய காளையைக் கொண்டு எங்களைத் துரத்த அவன் அதை ஏவி விட்டிருப்பான் என்று எங்களுக்குள் யூகித்துக் கொண்டோம். நாங்கள் கேத்தி என்ற கிராமம் சென்று அங்குள்ள மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தேவனுடைய சுவிசேஷப் பிரசுரங்களைக் கொடுத்தோம். அங்கிருந்து திரும்புகிற பாதையிலும் பள்ளத்தாக்கில் இருந்த ஒரு சிறிய பாடசாலையிலும், அங்கிருந்த கிராமத்திலும் தேவனுடைய பிரதிகளைக் கொடுத்தோம்.



வரும் வழியில் பாரகுனா என்ற ஊர் வந்தது. அந்த ஊரின் மேல் பகுதியில் ஒரு மேல் நிலைப் பள்ளி ஒன்று இருந்தது. பள்ளியின் இடைவேளை விடுவதற்கு ஒரு மணி அல்லது சற்று கூடுதலான நேரம் இருந்ததால் நாங்கள் அந்த இடத்தில் சற்று நேரம் காத்திருக்க வேண்டியதானது. மிகவும் பொறுமையுடன் நாங்கள் எங்கள் வாகனங்கள் இரண்டையும் ரஸ்தாவில் நிறுத்தி வைத்துவிட்டு இடை வேளை மணி அடிப்பதற்காகக் காத்திருந்தோம்.



இதற்கிடையில் நாங்கள் அங்கு சந்தித்த கிராமவாசிகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் பிரசுரங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தோம். பள்ளியில் மணி அடித்ததும் பள்ளிப் பிள்ளைகள் சாரை சாரையாக வந்து நாங்கள் கொடுத்த தேவனுடைய பிரசுரங்களை மிகுந்த ஆவலோடு வாங்கிச் சென்றனர். பாரகுனாவிலுள்ள இண்டர் காலேஜ் என்று அழைக்கப்படும் மேல் நிலைப் பள்ளியின் முகப்பு போர்டையும், அதற்கு முன்னால் தங்கள் கரங்களில் சுவிசேஷப் பிரசுரங்களுடன் காத்திருக்கும் நமது தேவ ஊழியர்களையும், நாங்கள் கொடுத்த பிரதிகளை வாங்கிச் செல்லும் பள்ளி மாணவர்களையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

அவனுடைய காலை வெட்டுங்கள்

நாங்கள் சம்பாவத் என்ற பட்டணத்தில் தங்கியிருந்து கொண்டு சுற்றியுள்ள பல இடங்களுக்குச் சென்று தேவனுடைய ஊழியங்களைச் செய்தோம். ஒரு நாள் நாங்கள் அந்த இடத்திலிருந்து ரீட்டா சாஹிப் என்ற இடத்திற்குச் சென்றோம். அது சம்பாவத்திலிருந்து 75 கி.மீ. தொலைவில் உள்ளது. இடையிடையே சிறிதும் பெரிதுமான ஊர்கள் இருந்தாலும் பெரும்பாலான தூரம் காடுகளாகவே இருக்கின்றது. நாங்கள் சந்தித்த சித்லா, நாரியல் காம், தன்யா, நர்சிங் டாண்டா, போக்ரி, டூனாகாட், குராலி, கடாலி, டாகண்டாக் போன்ற கிராமங்களிலெல்லாம் கர்த்தருடைய பிரசுரங்களைக் கொடுத்துக் கொண்டே சென்றோம். ஒரு மேடான இடத்தில் ஒரு ஆரம்பப் பள்ளி ஒன்று இருந்தது. அங்குள்ள ஆசிரியர்களுக்கு புதிய ஏற்பாடுகளும் இதர பிரசுரங்களையும் கொடுத்தோம். பள்ளிப் பிள்ளைகளுக்கு லூக்கா சுவிசேஷங்களையும், துண்டுப் பிரதிகளையும் கொடுத்தோம். “ எங்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு நீங்கள் கொடுக்கும் பிரசுரங்கள் எங்கே எங்கேயோ மலை உச்சிகளில் உள்ள அவர்கள் வாழ்கின்ற கடையாந்திர கிராமங்களுக்கெல்லாம் இன்றே போய்ச் சேர்ந்துவிடும். எல்லாருக்கும் ஒருவர் கூடப் பாக்கி இல்லாமல் கொடுத்துவிடுங்கள்” என்று சொன்ன அந்தப் பள்ளி ஆசிரியர் ஒருவரின் அன்பு வார்த்தைகள் எங்கள் வாய்களுக்கு கற்கண்டுகளைக் கொடுத்தது போன்ற இனிமையின் சந்தோசமாக இருந்தது. கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

அங்கிருந்து நாங்கள் அநேக கி.மீ. தொலைவு பிரயாணம் செய்து ஒரு கடை வீதிக்கு வந்து தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்தோம். அங்கிருந்த கூட்டத்திலிருந்த ஒரு துஷ்ட மனிதன் மிகுந்த கோபம் அடைந்து, ஆங்காங்கு தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்துச் சென்று கொண்டிருந்த நம்முடைய

சகோதரன் ஜெபராஜ் அவர்களைப் பார்த்து ‘‘அவனுடைய கால்களை வெட்டுங்கள்’’ என்று கூறியிருக்கின்றான். அதைக் கேட்ட நம்முடைய சகோதரன் கோபமடையாமல், நிதானம் இழக்காமல் மிகவும் அன்புடன் ‘‘நீ நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படியான நற்செய்தியை நாங்கள் எவ்வளவோ தொலை தூரங்களிலிருந்து இங்கு வந்து கொடுக்கும்போது நீ எனது காலை வெட்டச் சொல்லுகிறாயே’’ என்ற அழுத்தமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே தனது பணியைத் தொடர்ந்து செய்து முடித்திருக்கின்றார்கள்.

ரீட்டா சாஹிப் கிராமத்தில் நடந்த ஊழியம்

நாங்கள் அங்கிருந்து ஒரே இறங்கு முகமாக அடிவாரம் நோக்கிப் பிரயாணப்பட்டு மொத்தம் 75 கி.மீ. ஓடியதன் பின்னர் ரீட்டா சாஹிப் என்ற ஒரு சின்னஞ்சிறிய வயல் வெளிகளுடன் கூடிய அழகான கிராமத்திற்கு வந்து



சேர்ந்தோம். இந்த இடம் சீக்கியர்களுக்கு மிகவும் புனிதமான ஒரு இடமாகும். அவர்களின் குருவான குரு கோவிந்தசிங் என்பவர் அதற்குப் பக்கத்திலுள்ள டணக்பூர் என்ற இடத்திலிருந்து அங்கு வந்து தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. அந்த இடத்தில் ஒரு அழகான குருத்துவாரா கட்டி வைத்திருக்கின்றார்கள். இந்தியாவின் பல இடங்களிலிருந்தும் சீக்கியர்கள் இங்கு வந்து தொழுகை செய்கின்றனர். அந்த இடத்லுள்ள குருத்துவாராவை நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம். ரீட்டா சாஹிப் என்ற அந்தச் சிறிய

கிராமத்தின் கடைவீதியில் காணப்பட்ட எல்லா மக்களுக்கும் நாங்கள் தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்தோம். அதில் சீக்கிய மக்களும் அடங்குவார்கள். அங்கிருந்த ஒரு ஆர்.எஸ்.எஸ். காரர்களின் சிறிய பள்ளிக்கூடத்திலும் நம்முடைய சகோதரர்கள் நார்ட்டன் அவர்களும், ஜெபராஜ் அவர்களும் தைரியமாக கர்த்தருடைய பிரசுரங்களைக் கொடுத்து வந்தனர்.

ரீட்டா சாஹிப் உத்தராஞ்சல் மாநிலத்தின் கடைகோடியான ஒரு கிராமமாகும். அதற்கப்பால் ரஸ்தா எதுவும் கிடையாது. அந்த இடத்திற்கு எங்களை அழைத்து வந்து தமது ஜீவனுள்ள வார்த்தைகளை அந்த இடத்தில்

விதைக்க கிருபை புரிந்த அன்பின் ஆண்டவருக்கு நாங்கள் துதி செலுத்தினோம். நாங்கள் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தபோது நண்பகல் சுமார் 2 மணி இருக்கும். நாங்கள் எல்லாரும் மிகவும் பசியாக இருந்தோம். அந்தக் கிராமத்தின் சிறிய கடை வீதியில் இருந்த மிகவும் சுத்தமில்லாத சாப்பாட்டுக் கடையில் எங்கள் ஆகாரத்தை உட்கொண்டோம். அந்த இடத்தில் அந்தக் கடை ஒன்றுதான் எங்களுக்குச் சுத்தமாகத் தெரிந்தது. அந்தக் கடையில் நாங்கள் வசதியாக உட்கார்ந்து ஆகாரம் சாப்பிடக்கூட இடம் இல்லாதிருந்தது. எனினும், மிகுந்த மனமகிழ்ச்சியோடு எங்கள் ஆகாரத்தை சாப்பிட்டு முடித்தோம்.

நாங்கள் சம்பாவத் என்ற இடத்திலிருந்து ரீட்டா சாஹிப் என்ற இடத்திற்குப் போகும் பாதையில் ஒரு சாதுவை எங்களுடைய எதிர்த்

திசையில் சந்தித்தோம். தனியனாக வந்து கொண்டிருந்த அவரண்டை எங்கள் வாகனங்களை நிறுத்தினோம். ஒரு காலத்தில் வைராக்கியமான இந்து சாதுவாக இருந்து தனது உள்ளத்தில் மெய்ச்சமாதானம் வேண்டி



இமயமலைகளிலுள்ள கேதார்நாத், பத்ரிநாத், பூரியிலுள்ள ஜெகநாத், குஜராத்திலுள்ள பற்பலவிதமான இந்துப் புண்ணிய ஸ்தலங்களுக்கு கால் நடையாக ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் நடந்து சென்று இந்துப் பூஜாரிகளோடு கலந்து வாழ்ந்து, இந்துக் கிரியைகளைச் செய்து, பற்பலவிதமான இந்துப் பட்டங்களைப் பெற்றும் மனதில் எந்த ஒரு நிம்மதியுமில்லாமல் இறுதியில் சென்னை வந்து ஒரு நாள் தற்கொலை செய்வதற்காக எல்லா ஆயத்தங்களையும் செய்து முடித்து தூக்கு கயிற்றில் தனது கழுத்தை மாட்டுவதற்கு ஒரு சில மணி நேரங்களுக்கு முன்னர் சவுலை, தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்த அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமது சகோதரன் ஜெபராஜ் அவர்களையும் ஒரு கிறிஸ்தவ சிறுமியின் மூலமாகச் சந்தித்து தமது அன்பின் அடிமையாக்கினார். தற்பொழுது இருதயம் நிறைந்த தேவ சமாதானத்துடன் கிறிஸ்தவ சந்நியாசியாக தன் ஆண்டவருக்காக மிகுந்த வைராக்கியத்துடன் தேவ ஊழியம் செய்து வரும் அவர்கள் தனது தனிப்பட்ட இந்து சாது வாழ்வின்போது தான் கண்ட முழுமையான ஏமாற்றத்தையும், தான் பின்பற்றிச் சென்ற மார்க்கத்தின் பூரணமான கானல் நீர்க் காட்சியையும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் தான் கண்டு கொண்ட மெய்ச்சமாதானத்தையும், நித்திய ஜீவனையும் தெள்ளந் தெளிவாக அந்த

சாதுவுடன் பகிர்ந்து கொண்டு தன் வசம் இருந்த புதிய ஏற்பாடு முதல் அனைத்து கிறிஸ்தவப் பிரசுரங்களையும் வகைக்கு ஒன்றாக அந்த சாதுவுக்குக் கொடுத்தார்கள். நமது சகோதரன் அந்த சாதுவோடு சம்பாஷித்துக் கொண்டிருந்போது கர்த்தர் அந்த இந்துச் சாதுவைச் சந்திக்கும்படியாக நாங்கள் எல்லாரும் ஜெபித்துக் கொண்டே இருந்தோம். நாங்கள் அந்த சாதுவை விட்டுப் பிரியும்போது அவரது பசிக்காகவும், பயணத்துக்காகவும் ஒரு சிறிய அன்பைச் செய்துவிட்டுக் கடந்து வந்தோம். நாங்கள் கொடுத்த தேவ வசனங்களின் மூலமாக கர்த்தர் அந்த சாதுவோடு தொடர்ந்து பேச நீங்களும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். அந்த சாதுவுடன் நமது சகோதரன் கர்த்தரைக் குறித்துப் பேசுவதை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

அப்படியே நாங்கள் பித்தோர்கார்ட் என்ற இடத்திலிருந்து சம்பாவத் என்ற இடத்திற்கு வரும் வழியில் மிகவும் உயரமான ஓரிடத்தில் மற்றொரு சாதுவை நாங்கள் சந்தித்தோம். அவருடைய பெயர் மஹான்தாஸ் என்பதாகும். நாங்கள் அவரைச் சந்தித்த இடம் ஒரு காட்சி முனையான

இடமாகும். அந்த உயரமான இடத்திலிருந்து பள்ளத்தாக்கைப் பார்த்தால் மிகவும் அழகாக இருக்கின்றது. மக்கள் அதைப் பார்த்து மகிழ்வதற்காக அந்த இடத்தில் ஒரு நிழல் குடையை அரசாங்கம் கட்டி வைத்துள்ளது. நாங்கள் அந்த இடத்தில் எங்கள் வாகனங்களை நிறுத்தி விட்டு நன்கு ஓய்வு எடுத்துக் கொண்டோம். காட்சி முனையின் நிழற் குடையின் காங்ரீட் பெஞ்சில்

அமர்ந்தவண்ணமாக நமது சகோதரன் ஜெபராஜ் அவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவரிடமே மாத்திரமுள்ள மனந்திரும்புதலையும், பாவ மன்னிப்பையும், உலகங்கொடுக்க முடியாத தேவ சமாதானத்தையும், மரணத்திற்குப் பின்னால் இயேசுவோடு கூடிய மோட்சானந்த வாழ்க்கையையும் குறித்து மிகுந்த உணர்ச்சி வசமாக தேவ பெலத்தோடு பேசினார்கள். காரணம், தனது பல்லாண்டு கால இந்து மார்க்க பக்தி வாழ்க்கையில் அது அவர்களை முழுக்க முழுக்க ஏமாற்றி இறுதியில் தூக்கு கயிறு மாட்டவைத்த கொடுமையை அவர்களால் மறக்கவே முடியவில்லை. சகோதரன் அந்த சாதுவோடு வைராக்கியமாக அதே சமயம் அன்பாகப் பேசுவதையும், அடுத்த படத்தில் தனக்குக் கிடைத்த இந்தி மொழி புதிய ஏற்பாட்டை மஹான்தாஸ் என்ற அந்த இந்து சாது பொறுமையோடு உட்கார்ந்து கவனமாக வாசிப்பதையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். சாது மஹான்தாஸ்க்காக நீங்களும் அன்பாக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

உலகத்தை நேசிப்பவனே, நீ நேசிக்கும் உலகத்தை நீயே செருப்பால் அடிக்கும் ஓர் நாள் வரும்

சம்பாவத் என்ற பட்டணத்திலிருந்து 40 கி.மீ. தொலைவிலுள்ள ஜல்தி என்ற இடத்திற்கு நாங்கள் ஒரு நாள் சென்று வந்தோம். சம்பாவத்திலிருந்து ஜல்தி என்ற இடம் வரைக்கும் உள்ள அமோதி, ஸ்வாலா, பன்லேக், சால்னா, லாலுவாபானி போன்ற இடங்களில் எல்லாம் நாங்கள் எங்கள் வாகனங்களை நிறுத்தி, நிறுத்தி அந்தக் கிராமங்களிலும், அங்குள்ள கடைவீதிகளிலும் தேவனுடைய பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்துவிட்டு ஜல்தி என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அந்த இடத்தில் சில காப்பிக்கடைகள் மட்டும் இருக்கின்றன. காளி என்ற நதிக் கரையில் அமைந்துள்ள அந்த இடம் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றது. ஜல்தி என்ற இடம் சமவெளிப் பிரதேசத்தில் உள்ளது. சற்றுத் தொலைவில் நதியின் குறுக்காக ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த ஜல்தியிலிருந்து 33 கி..மீ. தொலைவில் டணக்பூர் என்ற பட்டணம் உள்ளது. டணக்பூரில் தேவனுடைய சுவிசேஷம் அறிவிக்க முடியாதவாறு ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தடைவிதித்துள்ளார்கள். உத்தராஞ்சல் மாநிலம் முழுவதிலும் டணக்பூர் மாத்திரமே தேவனுடைய சுவிசேஷம் அறிவிக்க முடியாதவாறு நிலைமை மிகவும் கொந்தளிப்பாக உள்ளது.

வாடகைக்காக வாங்கப்பட்ட நமது வாகனங்களுக்கு எந்த ஒரு சேதமும் ஏற்படாதவாறு இருப்பதற்காக நாங்கள் டணக்பூர் செல்லவில்லை. அந்த ஜல்தியிலேயே ஆண்டவருடைய பிரசுரங்களைக் கொடுத்துவிட்டுத்

திரும்பிவிட்டோம். திரும்பி வரும் வழியிலும் ரஸ்தாவில் நாங்கள் சந்திக்கின்ற மக்கள் கூட்டத்தினருக்கு எங்கள் வாகனங்களை நிறுத்தி நிறுத்தி தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்துக்கொண்டே வந்தோம்.

எங்கள் ஊழியங்களை நாங்கள் முடித்துவிட்டு சம்பாவத் பட்டணத்திற்குத் திரும்பியபோது மாலை நேரம் ஆகிவிட்டது. மிகவும் களைப்போடிருந்த நாங்கள் அங்குள்ள ஒரு குறிப்பிட்ட சின்னஞ் சிறிய ஹோட்டலில் தேநீர் பானம் அருந்திவிட்டு நாங்கள் தங்கியிருந்த லாட்ஜ்க்கு சென்று கொண்டிருந்தோம். மிகவும் குளிரான நேரம். ரஸ்தாவில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இல்லை.

அந்த நேரம் நல்ல வாட்டசாட்டமான ஒரு மனிதன் நடு ரஸ்தாவில் வந்து நின்றான். அதின் பின்னர் அவன் தனது வலது காலில் போட்டிருந்த செருப்பைக் கழற்றி தான் நின்று கொண்டிருந்த ரஸ்தாவை தனக்கு தீங்கிழைத்த ஒருவனை மிகுந்த கோபாவேசத்துடன் அடிப்பது போல தனது முழுப்பலத்தையும் ஒன்று திரட்டி அடித்துக் கொண்டிருந்தான். அந்தக் காட்சியைக் கண்டவர்கள் எல்லாரும் ஒரு பைத்தியக்காரன் மன நிலை பாதிப்பின் காரணமாக அப்படி ரஸ்தாவை அடிக்கின்றான் என்று பார்த்துவிட்டு அப்படியே கடந்து சென்று கொண்டிருந்தனர். அந்தக் காட்சியைக் கண்ட நான் எனது அறைக்கு வந்ததும் அந்த மனநிலை பாதிப்புற்ற மனிதன் செய்த காரியத்தை எனது ஜெப நேரத்தில் நன்கு யோசித்துப் பார்த்தேன்.

அன்பின் ஆண்டவருக்கு மேலாக இந்த உலகத்தை நேசிக்கும் மக்கள் எவரேனும் சரியே ஒரு நாள் தாங்கள் அத்தனை அருமையாக நேசித்த தங்கள் உலகத்தை தங்களது கரத்தாலேயே செருப்பால் மனங்கொண்ட மட்டும் அடிப்பார்கள். பிள்ளைகளைப் பெறுகின்றனர். தாங்கள் பெற்ற பிள்ளைகளை தங்களுக்காக ஜீவனைக் கொடுத்து தமது இரத்தக் கிரயத்தால் தங்களைக் கொண்ட தங்கள் அன்பின் இரட்சகர் இயேசுவுக்கு மேலாக அதிகமாக நேசிக்கின்றனர். ஆண்டவருக்கு கொடுக்க வேண்டிய நேரத்தை தாங்கள் பெற்ற பிள்ளைகளின் காரியமாக அவர்களைக் கொஞ்சுவதிலும் குலாவுவதிலும், அவர்களோடு சேர்ந்து கரும்பெட்டி(டிவி.) நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும் செலவிடுகின்றனர். அந்த அன்புப் பிள்ளைகள் தங்களை தங்கள் மரணபரியந்தம் கட்டிப் பிடித்து அன்புகூறுவார்கள் என்று மனதார நம்புகின்றனர். ஆனால் அந்தோ, அந்த அன்பு மக்கள் தங்கள் பெற்றோரை நட்டாற்றில் கைவிட்டு விடுகின்றனர். பெற்ற பிள்ளைகள் குழந்தைப்

பருவத்திலிருந்து வாலிபப் பருவம் வரை தங்கள் தாய் தந்தையருடன் மிகுந்த பாசம் கொண்டு வாழ்கின்றனர். அவர்கள் திருமணமானதும் தங்கள் மனைவிமார்களின் பேச்சைக் கேட்டு தங்கள் பெற்றோரை கைகழுவி விடுகின்றனர்.

ஒரு அன்பான பெற்றோர் தங்களுடைய மகனை அருமையாக நேசித்து வளர்த்தார்கள். உயர் கல்விகள் கொடுத்து அவனை பட்டாதாரியாக்கினார்கள். மகனுக்கு அரேபியாவில் வேலை கிடைத்தது. மிகுந்த செல்வச் சிறப்போடு மகனுக்கு திருமணத்தை முடித்து வைத்தார்கள். அவனது மனைவியும் அரேபியாவில் வேலை செய்பவள். இருவருமாக திரண்ட பணத்தை சம்பாதித்தார்கள். இனி வேலை செய்யத் தேவை இல்லை என்ற அளவுக்கு பெரும் செல்வம் குவிந்தது. அதின் காரணமாக அவனுடைய மனைவி தனது வேலையை விட்டு விட்டு ஊருக்கு வந்தாள். மாமா, மாமியோடிருக்க மனம் விரும்பாத அந்தப் பெண் தனது மாமனார் வீட்டுக்குப் பக்கமே ஒரு பெரிய மாடி வீட்டைக்கட்டி குடித்தனம் சென்றாள். இந்தச் சூழ்நிலையில் அவளது மாமியார் கவலைகளின் காரணமாக திடீரென மரித்துப் போனார்கள். வயது சென்ற மாமாவை கவனிக்கும் பொறுப்பு இப்பொழுது அந்தப் பெண்ணின்மேல் விழுந்தது. என்ன கோபமோ, என்ன மனக்கசப்போ தெரியாது. தனது மாமனாரோடிருந்து அவருக்குச் சமையல் செய்து கொடுத்து அவரை ஆதரிக்க மனமற்று அவருக்காகச் செய்யும் ஆகாரத்தை தனது வீட்டை ஒட்டியிருக்கும் மாமனாரின் கோட்டைச் சுவரில் அந்தந்த சமயத்துக்கு வைத்துவிடுவாள். காலை 8 மணி ஆனதும் மாமனார் கோட்டைச் சுவரைப் பார்த்திருந்து காலை ஆகாரத்தை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு பிளேட்டைக் கழுவி கோட்டைச் சுவரில் வைத்துவிட்டு மத்தியானம் 12 மணிக்கு கோட்டையில் வைக்கப்படும் மதிய உணவை அருந்திவிட்டு திரும்பவும் பிளேட்டை வைத்துவிடவேண்டும். அப்படியே இரவுச் சாப்பாடும் தக்க சமயத்துக்கு கோட்டைச் சுவருக்கு வந்து சேரும். அதையும் எடுத்துச் சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொள்ள வேண்டும். எந்த ஒரு பேச்சு வார்த்தையோ, எந்த ஒரு வார்த்தை பறிமாற்றங்களோ மாமனாரோடு கிடையாது. பேரக் குழந்தைகள் தாத்தாவோடு பேசவும் விளையாடவும் அனுமதி கிடையாது. இவைகள் எல்லாம் கிறிஸ்தவ வீடுகளில் நடக்கும் கொடுமையான காரியங்களாகும். ஜீவனுள்ள தேவனை அறியாத புறமதஸ்தரின் வீடுகளில் கூட இந்தக் கொடிய காரியங்கள் எல்லாம் ஒருக்காலும் நடக்காது. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும் தனது மனைவியை அந்த மனிதரின் மகன் தட்டிக் கேட்பதில்லை. மனைவி

செய்வதை அங்கீகரித்து அவளுடைய வாக்கை வேதவாக்காக எடுத்துக்கொள்ளும் மகனை அந்த நிர்ப்பந்தமான தகப்பன் என்ன செய்ய முடியும்? தான் இந்த உலகத்தில் மானிடனாகப் பிறந்து இப்படிப்பட்ட மக்களைப் பெற்றதற்காக இந்த உலகத்தை செருப்பால் அடித்து தனது வேதனையைத் தீர்த்துக் கொள்ளுவதைத் தவிர அந்த மனிதருக்கு வேறு வழி கிடையாது.

அன்பின் ஆண்டவர் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று அவருடைய பிள்ளைகளாக அவரை அண்டி வாழாத மக்கள் தங்கள் விருத்தாப்பிய நாட்களில் இப்படிப்பட்ட கொடிய நிர்ப்பந்தமான நிலைகளுக்குள் தள்ளப்பட்டு மரிப்பதுடன் தங்களது முடிவில்லாத நித்தியத்தையும் என்றென்றைக்குமுள்ள காரிருளில் செலவிடவேண்டும் (2 பேதுரு 2 : 17) ஆனால், ஆண்டவரை தங்கள் பரம தகப்பனாகக் கொண்டு தங்கள் நேரத்தையும், காலங்களையும் அவருடைய பரிசுத்த பாதங்களில் செலவிடும் பரிசுத்த மக்களின் விருத்தாப்பியங்களை தேவன் பொறுப்பெடுத்து அற்புதம், அதிசயமாக வழிநடத்துவார். அவர்களுடைய விருத்தாப்பியம் மிகவும் தேவ சமாதானம் நிறைந்ததாக இருக்கும். ''கர்த்தரின் நாமம் பலத்த துருகம், நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்'' (நீதி 18 : 10) என்ற தேவ வாக்கின்படி கர்த்தரை அண்டிக்கொண்ட தேவ மக்கள் சர்வ வல்லவரின் நிழலில் பாதுகாப்பாக இருப்பார்கள். இந்த உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூராத அந்த மக்களுக்கு (1 யோவான் 2 : 15 - 17) தாங்கள் நேசியாத உலகத்தை செருப்பால் அடிக்க வேண்டிய தேவையும் இராது. கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

பானோலி, டோடம் கிராமங்களில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்.

ஒரு நாள் காலையில் நாங்கள் தனியா என்ற இடத்திலிருந்து 33 கி.மீ. தொலைவிலுள்ள பானோலி என்ற இடத்திற்கு மிகுந்த ஜெபத்தோடு புறப்பட்டோம். உயர்ந்த மலைகளையும், ஊசி இலைக் காடுகளைும், ஆங்காங்கு பள்ளத்தாக்குகளிலும், மலைகளிலும் உள்ள இமயமலைக் கிராமங்களையும் கடந்து பானோலி என்ற பெருங்கிராமத்தை நாங்கள் வந்தடைந்தோம். அந்தக் கிராமத்தை வந்தடைந்ததும் எங்கள் வாகனங்களை அந்த ஊரின் கடை வீதியிலுள்ள இரண்டு இடங்களில் தனித்தனியாக நிறுத்தி வைத்துவிட்டு கர்த்தருடைய சுவிசேஷப் பிரசுரங்களை கடைவீதியிலுள்ள மக்களுக்கெல்லாம் ஜெபத்துடன் விநியோகித்தோம். அநேகமாக எல்லா

மக்களும் அவைகளை ஆர்வத்துடன் வாங்கி வாசித்தனர். பானோலி என்ற கிராமம் கடையாந்திரத்தில் உள்ள ஒரு இடமாகும். அதற்கப்பால் எந்த ஊர்களுமே கிடையாது. அந்தக் கிராமத்தின் மிகவும் உச்சியில் ஒரு மேல் நிலைப் பள்ளி உள்ளது. எப்படியாவது அந்தப் பள்ளியில் உள்ள மாணவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைக் கொடுத்துவிடவேண்டும் என்ற தாகத்தில் செங்குத்தான அந்த உச்சியை மூச்சு வாங்க, வாங்க ஏறினோம்.

எங்களுடைய குழுவில் மிகவும் பெலசாலியான, இளவயதான பாஸ்டர் என்.சாமுவேல் அவர்கள் பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கக் கூடிய 2 அட்டைப் பெட்டிகள் நிறைந்த தேவனுடைய பிரசுரங்களை தனது தோளில் தூக்கியவர்களாக சுமந்து கொண்டு வந்தார்கள். எங்களைப் போன்றவர்களால் அந்தப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஒரு அடி தூரம் கூட நடக்க முடியாது. அவர்களுடைய அந்தச் செயல் பழைய ஏற்பாட்டில் பெலவானான சிம்சோன் காசா பட்டணத்தின் வாசல் கதவுகளையும், அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடே கூட தன் தோளின் மேல் வைத்து மலை உச்சிக்கு சுமந்து கொண்டு போன காரியத்தை எங்களுக்கு நினைப்பூட்டினது. நாங்கள் பானோலியில் உள்ள அந்த மேல்நிலைப் பள்ளிக்குச் சென்று அங்குள்ள நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் தேவனுடைய பிரதிகளை ஜெபத்தோடு கொடுத்தோம். வெகு தொலைவிலிருந்து எடுக்கப்பட்ட அந்த மேல்நிலைப் பள்ளியின் படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

பானோலியில் நாங்கள் எங்கள் தேவ ஊழியத்தை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் நாங்கள் ஓரிடத்தில் மாற்றுப் பாதை எடுத்து பல கிமீ. தூரம் பிரயாணம் செய்து டோடம் என்ற சிற்றூருக்கு வந்தோம். இந்த ஊரும் ஒரு கடையாந்திரமான கிராமமாகும். இந்த ஊருக்கு அப்பால் எந்த ஒரு வழித்தடமுமே கிடையாது. இந்த ஊரிலும், அங்கிருந்த சிறிய கடைவீதியிலும் கர்த்தருடைய பிரசுரங்களை நாங்கள் விநியோகித்தோம். நாங்கள் அந்த ஊரில் எங்கள் வாகனங்களை நிறுத்தி அந்தக் கடைசி கிராமத்திற்கு வந்த நினைவாக ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அதை நீங்களும் படத்தில் காணலாம். பானோலியில் நாங்கள் எங்கள் ஊழியத்தை முடித்துவிட்டு வரும் வழியில் காப்ளிகான் என்ற இடத்திலிருந்த ஒரு ஆரம்ப பள்ளியிலும் தேவனுடைய வார்த்தைகளைக் கொடுத்தோம்.

பிரயோஜனமாயிருக்கிறதை நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே (ஏசாயா 48 : 17)

மஞ்சு தாம்லி என்ற ஒரு இடம் லோகாகாட் என்ற இடத்திற்கு அப்பால் கடையாந்திர பகுதியில் இருப்பதாக நாங்கள் கேள்விப்பட்டோம். எப்படியாவது அந்த இடத்திற்கும் சென்று தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை மக்களுக்கு அறிவித்துவிட வேண்டும் என்ற ஆவலில் நாங்கள் ஒரு நாள் காலையில் அந்த இடத்திற்கு எங்கள் வாகனங்களுடன் சம்பாவத் என்ற இடத்திலிருந்து புறப்பட்டோம். காலை வேளையானதால்

பள்ளிகளுக்கு ரஸ்தாவில் கூட்டம் கூட்டமாகச் செல்லும் மாணவ மாணவியர்களுக்கும், நாங்கள் சந்தித்த வழிப்போக்கர்களுக்கும் பிரசுரங்களைக் கொடுத்துக் கொண்டே சென்றோம். சம்பாவத்திலிருந்து நாங்கள் லோகாகாட்டிற்கு வந்து அங்கிருந்து மேலே பயணமானோம். ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் நாங்கள் கானகப் பாதை வழியாகவே செல்ல வேண்டியதானது. எந்த ஒரு மனஷ சஞ்சாரமுமே இல்லை. கானகப் பறவைகளின் சத்தம் மட்டுமே அவ்வப்போது கேட்டுக் கொண்டே இருந்தது. அந்தக் கானகத்தில் முதன் முறையாக காட்டு ஏலக்காய் செடிகளைப் பார்த்தோம். நாங்கள் அந்தக் காட்டுப் பகுதியில் நெடுந்தூரம் வந்துவிட்டோம். எனினும் எந்த ஒரு கிராமங்களோ குடியிருப்புப் பகுதிகளோ தென்படவே இல்லை. அதின் பின்னர் வெகு தொலைவில் கடையாந்திரமான பகுதியில் சோலை மரங்களின் நடுவில் ஒரு அழகான கிராமம் எங்கள் கண்களுக்குத் தென்பட்டது. ஒருக்கால் அதுவே மஞ்சு தாம்லி கிராமமாக இருக்கலாம் என்று நாங்கள் எங்களுக்குள் யூகித்துக் கொண்டோம். எங்களுடைய யூகம் சரியே என்பதை பின்னர் நாங்கள் மக்களிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டோம்.

நாங்கள் இன்னும் முன்னேறிச் சென்று கொண்டிருந்தபோது அந்தக் கானகப் பாதையில் ரஸ்தாவில் கருங்கற்களைப் பரப்பி ரஸ்தாவைப் புதுப்பித்துக் கொண்டிருந்தனர். எங்கள் வாகனங்கள் அந்த சரளைக் கற்கள் மேல் கொஞ்ச தூரம் சென்றன. கற்கள் டயர்களை குத்தி பஞ்சர் ஆக்கிவிடும் என்ற பயத்தில் நாங்கள் மேற்கொண்டு பயணம் செய்யவில்லை. அந்த இடத்தில் ரஸ்தாவில் வேலைசெய்த நிறைய சாலைப் பணியாளர்களுக்கு தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்துவிட்டு நாங்கள் எங்கள் வாகனங்களைத் திருப்பிவிட்டோம். அது எங்களுக்கு மிகவும் ஏமாற்றமாகவே தெரிந்தது. நம்மால் ஏன் அந்த மஞ்சு தாம்லி கிராமத்திற்குச் செல்ல முடியவில்லை என்று நாங்கள் அதிகமாக விசனம் அடைந்தோம். எனினும் எங்களுக்காக ஒரு மகிழ்ச்சியின் செய்தி காத்திருந்தது. காலையில் எங்களுக்கு முன்னால் வந்த பாஸ்டர் சாமுவேல் அவர்களின் வாகனம் வரும் வழித்தடத்தில் ஒரு பக்கவாட்டு வழியாகச் சென்று சற்றுதொலைவில் இருந்த ஒரு உயர்நிலைப் பள்ளியில் உள்ள மாணவ மாணவியருக்கும், ஆசிரியர்களுக்கும் தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அப்படி அந்த இடத்திற்குப் போகும்படியான வாய்ப்பு அவர்களுக்கு எப்படி கிடைத்தது என்றும் அவர்கள் எங்களுக்கு விவரித்தார்கள். அவர்கள் வாகனம் வந்து கொண்டிருந்தபோது ஒரு மனிதர்

தங்களுக்கு முன்பாக நடந்து கொண்டிருப்பதைக் கண்டு நிச்சயமாக அவர் ஒரு பள்ளி ஆசிரியராகவே இருப்பார் என்ற எண்ணத்தில் தங்கள் வாகனத்தை நிறுத்தி அவரை ஏற்றிக்கொண்டு சென்றார்களாம். பவிந்திர குமார் பாண்டே என்ற அந்த ஆசிரியர் தான் வேலை பார்க்கும் பள்ளிக்கு வந்து கர்த்தருடைய பிரசுரங்களை தனது பள்ளியிலும் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டாராம். அதின்படி அந்த மனிதரை அவருடைய பள்ளி வரைக்கும் கொண்டு சென்றுவிட்டதுடன் அவருடைய உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள், மாணவியர்களுக்கெல்லாம் தேவனுடைய பிரசுரங்களையும், ஆசிரியர்களுக்கு புதிய ஏற்பாடுகளையும் சேர்த்துக் கொடுத்தார்களாம். கர்த்தர் அந்த இடத்தில் ஒரு அருமையான ஊழியத்தை அவர்களுக்கு கொடுத்தாகவும் சொன்னார்கள். பவிந்திர குமார் பாண்டேயின் முகவரியையும் அவர்கள் பெற்று வந்திருந்தார்கள். அவருக்கு நல்ல அருமையான தேவனுடைய ஹிந்தி பிரசுரங்கள் இங்கிருந்து ஜெபத்தோடு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. கர்த்தர் அந்த மனிதரோடும், அவருடைய பள்ளிக் குழந்தைகளோடும் தமது ஜீவனுள்ள வசனத்தின் மூலமாகப் பேச நீங்களும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜாகேஷ்வரில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

நாங்கள் தனியா என்ற இடத்திலிருந்து ஜாகேஷ்வர் என்ற இடத்திற்குச் சென்றோம். ஜாகேஷ்வர் இந்து மக்களின் ஒரு புண்ணிய ஸ்தலமாகும். இந்த இடத்தில் நிறைய பூர்வ காலத்துக் கோயில்கள் இருக்கின்றன. அவைகளை வழிபடுவதற்காக பலவிடங்களிலிருந்து இந்து மக்கள் வருகின்றனர். அவர்களோடு பெயர் கிறிஸ்தவ மக்களும் மேல் நாடுகளிலிருந்து வந்து இந்து தெய்வங்களை வணங்குகின்றனர். அந்தக் காட்சிகள் நம் உள்ளத்தை ஊடுருவக் குத்துவதாக இருக்கின்றது. தேவனுடைய ஜீவனுள்ள நாமம் புறமதஸ்தர்களிடம், குறிப்பாக இந்து மக்களிடம் பரவாதபடி இப்படிப்பட்ட மேல் நாட்டு பெயர் கிறிஸ்தவர்களை சாத்தான் தனது கைப்பாவைகளாகப் பயன்படுத்தி தனது கொடியை உயரமாக ஏற்றி அதைப் பட்டொளி வீசிப்பறக்கச் செய்து வருகின்றான்.

தனியாவிலிருந்து நாங்கள் ஜாகேஷ்வர் வரும் வழித்தடத்தில் ஆர்த்தோலா புனவன்வாலா போன்ற இடங்களைக் கடந்து வந்தோம். அந்த இடங்களில் எல்லாம் எங்கள் வாகனங்களை நிறுத்தி கடைவீதிகளிலும், கிராம மக்களுக்கும் தேவனுடைய வசனங்களைக் கொடுத்துக் கொண்டே வந்தோம். ஜாகேஷ்வரில் நாங்கள் அங்கிருந்த அரசாங்க ஓய்வு விடுதியில்

தங்கியிருந்தோம். அந்த இடம் மிகவும் குளிராக இருந்தது. அங்கு ஒரு நதியும் ஓடிக்கொண்டிருந்தது. நாங்கள் அந்த இடத்திலுள்ள கடைவீதியில் மிகுந்த தைரியத்தோடு கர்த்தருடைய பிரசுரங்களைக் கொடுத்தோம். அந்த இடத்திலுள்ள இந்துக் கோயில்களை தரிசிப்பதற்காக வந்திருந்த இந்து யாத்ரீகர்களுக்கும் எங்கள் பிரசுரங்களைக் கொடுக்கத் தவறவில்லை. அங்குள்ள கடை வீதியிலுள்ள கடைகளில் எல்லாம் பற்பலவிதமான பூஜைப் பொருட்கள் மட்டுமேதான் இருந்தன. அப்படிப்பட்ட வைராக்கியமான அந்த இடத்திலும் நாங்கள் கர்த்தருக்குள் தைரியமாக ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்தோம். எங்களுக்கு விரோதமாக எந்த ஒரு எதிர்ப்பும் தேவகிருபையால் எழும்பவில்லை. கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

ஒரு நாள் நாங்கள் அங்கிருந்து நைனி என்ற இடத்திற்குச் சென்றோம். ஜாகேஷ்வர் என்ற இடத்திலிருந்து அந்த நைனி என்ற இடம் செங்குத்தான

மலை உச்சியில் இருக்கின்றது. நைனி என்ற கிராமம் சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒரு இந்துக்கடவுளின் மனைவியின் பெயர்தான் நைனி என்பதாகும். நாங்கள் அந்த இடத்திற்குச் செல்லும் வழியில் இருந்த சோனாசிலிங், யாங்காட், கருடாபஞ் போன்ற ஊர்களில் எல்லாம் எங்கள் வாகனங்களை நிறுத்தி கர்த்தருடைய வசனங்களை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டே சென்று கொண்டிருந்தோம். நைனி கிராமத்திலும் நாங்கள் எங்கள் ஊழியத்தைச் செய்து முடித்தோம். இந்த நைனி என்ற கிராமமும் ஒரு கடையாந்திர கிராமம்தான். அந்தக் கிராமத்துடன் மோட்டார் ரஸ்தா

முடிவடைகின்றது. நைனி ஒரு சுமாரமான கிராமம்தான். அங்கு வாழும் மக்களுடைய வீடுகள் எல்லாம் களிமண்ணால், கற்களால் கட்டப்பட்டு கூரைகள் சிலேட் கற்களால் தளவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒரு வீட்டையும், அதின் கூரையில் அந்த மக்களால் வேளாண்மை செய்து எடுக்கப்பட்ட பூசணிக் காய்களையும் நீங்கள் படத்தில் காணலாம்.

நாங்கள் நைனியில் ஊழியம் முடித்துவிட்டு திரும்பவும் ஜாகேஷ்வர் வந்து நாங்கள் அந்த இடத்தில் தங்கியிருந்த அரசாங்க ஓய்வு விடுதியின் பணியாளர்களுக்கும், நாங்கள் ஆகாரம் சாப்பிட்ட சிறிய ஹோட்டல் முதலாளிக்கும், அங்குள்ள சிப்பந்திகளுக்கும் ஆண்டவருடைய பிரசுரங்களைக் கொடுத்தோம். அந்தக் கடுங்குளிரான இடத்தில் எங்களுக்கு என்ன ஆகாரம் கிடைக்குமோ என்று எண்ணியிருந்த எங்களுக்கு அந்தச் சிறிய ஹோட்டல் உரிமையாளர் நல்ல விதமாக ஆகாரம் தயாரித்து நியாயமான விலையில் எங்கள் விருப்பத்திற்கிசைந்தவாறு செய்து கொடுத்தார். எல்லாம் தேவ கிருபையே.

அந்த கிறிஸ்தவ மார்க்கத்தார் மட்டுமே அப்படிச் செய்வார்கள்.

நாங்கள் கர்த்தருடைய பிரசுரங்களை மக்களுக்கு எங்கள் வாகனங்களில் எடுத்துச் சென்று கொடுக்கும்போது ஒரு இடத்தில் ஒரு மனிதர் நாங்கள் அங்குமிங்கும் விரைந்து சென்று அவைகளைக் கொடுப்பதைக் கவனித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து ஒருவர் மற்றவரிடம் ''இது என்ன புதுமை? இவர்கள் இப்படி எந்த தாட்களை மக்களுக்குக் கொடுக்கின்றனர்? இதன் கருத்து என்ன?'' என்று கேட்டாராம். அதற்கு மற்றவர் ''இவர்கள் கிறிஸ்தவ மக்கள். தங்கள் மார்க்கத்தைக் குறித்து இவ்வாறு பிரச்சாரம் செய்கின்றனர். இப்படிப் பிரச்சாரம் செய்பவர்கள் இந்தக் கிறிஸ்தவர்கள் மட்டுமேதான். உலகில் வேறு எவருமே இப்படிச் செய்யமாட்டார்கள்'' என்று கூறினாராம். இதைக் கேட்டுக் கொண்டிருந்த நம்முடைய தேவ ஊழியர்களில் ஒருவர் அதை எங்களிடம் வந்து பரவசமாகச் சொன்னார்கள். அது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. உண்மைதான், உலகில் வேறு எந்த ஒரு மார்க்கத்தினருமே இப்படிச் செய்யவியலாது. ''பானையில் சோறு இருந்தால் தான் அகப்பைக்கு வரும்'' என்று ஒரு தமிழ் முது மொழி உண்டு. மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, மெய்ச்சமாதானம், பரிசுத்தம், நித்திய ஜீவன் எல்லாம் கிறிஸ்தவர்களுடைய பானையில் மட்டுமே உள்ளது.

ஆண்டவருடைய மெய் அடியார்களான மெய் கிறிஸ்தவர்கள் அதை எடுத்து மக்களுக்கு இலவசமாக வார்க்கின்றனர். தாங்கள் ஆண்டவர் இயேசுவில் கண்டடைந்த உலகம் தரக்கூடாத சந்தோசத்தை அதை அறியாத மக்களுக்கு அறிவிக்கின்றனர். எந்த ஒரு மார்க்கத்தின் கடவுள் மனுமக்களின் பாவங்களுக்காக தன்னை தியாக பலியாக ஒப்புக் கொடுத்து இரத்தம் சிந்தி மாண்டார்? எந்த ஒரு கடவுள் மரித்து அடக்கம் செய்யப்பட்ட பின்னர் 3 ஆம் நாள் உயிரோடு எழுந்து இன்றும் ஜீவிக்கின்றார்? எந்த ஒரு கடவுள் தன்னை நோக்கி உண்மையும் உத்தமமுமாக கூப்பிடும் மக்களின் உள்ளத்தில் இன்றும் வாசம் செய்கின்றார்? எந்த ஒரு கடவுள் மனுமக்களின் உள்ளங்களில் பேசிக்கொண்டேயிருக்கின்றார்? எந்த ஒரு கடவுள் மனுமக்களின் மரண பயத்தை நீக்கி, அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் மோட்சானந்த பாக்கியத்தின் ஆனந்த நம்பிக்கையை கொடுக்கின்றார்? மெய்தான், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே அந்தப் பாக்கியங்களை எல்லாம் அவரை நோக்கி உண்மையாகக் கூப்பிடும் யாவருக்கும் கொடுக்கக்கூடியவர்! என்னிடத்தில் வருகிறவனை புறம்பே நான் தள்ளுவதில்லை (யோவான் 6 : 37) என்று அவர் கூறியிருக்கின்றார் அல்லவா?

கஷ்டமும் பாடுகளும் நிறைந்த தேவ ஊழியங்கள்

வடமாநில தேவ ஊழியங்கள் என்றதும் நாங்கள் எந்த ஒரு கஷ்டமும் இல்லாமல் இந்த ஊழியங்களைச் செய்து வருகின்றோம் என்று தேவ பிள்ளைகளாகிய நீங்கள் ஒருக்கால் நினைக்கலாம். அதுவும் சமீபத்திய ஆண்டுகளில் நாங்கள் வாகனங்களைப் பயன்படுத்தி ஊழியம் செய்வதால் எங்களுடைய கஷ்டங்கள் இன்னும் குறைவாகவே இருக்கும் என்று நீங்கள் எண்ணக்கூடும். உண்மையில் நாங்கள் அந்த ஊழிய நா்ட்களில் அனுபவிக்கும் பாடுகளையும், மனதின் அழுத்தங்களையும் கர்த்தர் ஒருவரே அறிகின்றவராக இருக்கின்றார். முதலாவது நாங்கள் செல்லும் வழித்தடங்கள் பெரும்பாலும் சாநிழலின் பள்ளத்தாக்குப் பாதைகளாகும். ஏற்கெனவே அதைக் குறித்து நான் உங்களுக்கு பல தடவைகளும் தேவ எக்காளத்தில் எழுதியிருக்கிறேன். அப்படிப்பட்ட மரணப் பள்ளத்தாக்கின் பாதையிலே எங்கள் வாகனங்கள் செல்லும்போது நான் கர்த்தரை நோக்கி ஜெபிக்கின்ற ஒரு ஜெபம் ''ஆண்டவரே, எங்கள் பயணத்தில் ஏதாவது நாசமோசமானால் என்னைத் தவிர மற்ற அனைவரின் ஜீவனும் உமது பார்வையில் அருமையாயிருப்பதாக. அவர்கள் எல்லாரும் சிறு குழந்தைகளுடனும், குடும்பங்களுடனும் இருக்கின்றனர். அந்த மக்களுக்கு எந்த ஒரு தீங்கும் வரக்கூடாது. எனக்கு

உலகத்தில் ஒன்றுமில்லை. நான் மரித்தால் உடனே உம்மண்டை வந்து சேருவேன்'' என்று ஜெபிப்பேன்.

நாங்கள் தங்கும் இடங்களில் எங்களுக்கு இராக்காலங்களில் நல்ல இளைப்பாறுதல் கிடையாது. ஏதோ ஓரிரு இடங்களில் நாங்கள் தூங்கினாலும் பெரும்பாலான இடங்களில் கண் விழித்துத்தான் இருப்போம். காரணம், நாங்கள் தங்கும் இடங்களில் சுத்தம் இருக்காது. காற்றோட்டத்திற்குத் தேவையான ஜன்னல்கள் இருக்காது. அடுத்தபடியாக நாங்கள் தங்கும் அறைகளில் சாத்தானுடைய பலவித அந்தகார கிரியைகள் நடந்திருக்குமாதலால் அவனுடைய போராட்டங்களும் கடுமையாக இருக்கும். அதை நாங்கள் நன்றாகவே உணர்ந்திருக்கின்றோம்.

அடுத்தபடியாக எங்களுக்கு நல்ல சுத்தமான ஆகாரங்கள் கிடைக்காது. பணம் எத்தனை அதிகமாகக் கொடுத்தாலும் நல்ல தரமான உணவை நாங்கள் அந்த இடங்களில் பெற்றுக் கொள்ளுவதில்லை. எத்தனையோ ஹோட்டல்களில் எங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட ஆகாரத்தை சாப்பிட முடியாமல் சற்றே கை நனைத்துவிட்டு நாங்கள் அப்படியே எழும்பிச் சென்ற நாட்கள் அநேகமாகும். தால், பாத், தர்க்காரி (பருப்பு, சாதம், காய்கறி கூட்டு) என்று ஹோட்டலின் முன்பு போர்டு போட்டு அதற்கான கிரயத்தை நம்மிடம் வாங்கிக் கொண்டாலும் பருப்பு குழம்பில் பருப்பு இருக்காது. மஞ்சள் தண்ணீரில் பச்சை மிளகாய் ஏதாவதைப் போட்டு குழம்பாக்கியிருப்பார்கள். ஓரிடத்தில் நம்முடைய சகோதரன் நார்ட்டன் அவர்கள் தனக்கு முன்பாக அவ்விதமாக பரிமாறப்பட்ட ஆகாரத்தை அப்படியே எடுத்துச் சென்று ஹோட்டல் முதலாளியிடம் கொண்டு போய் காண்பித்து ''பருப்பு குழம்பு என்று சொல்லுகின்றாயே எனது தட்டில் ஊற்றப்பட்டுள்ள குழம்பில் ஒரே ஒரு பருப்பை உன்னால் காண்பிக்க முடியுமா?'' என்று கேட்க வேண்டியதாயிற்று. இந்த தடவை ஒரு பரிசுத்த குடும்பத்தினர் எங்கள் குழுவினருக்கு பசிக்கும்போது சாப்பிடுவதற்காக பொருவிளங்காய்களையும், அதிரசங்களையும் நிறையவே செய்து எங்களுக்கு அனுப்பியிருந்தார்கள். கர்த்தர் அந்தக் குடும்பத்தினரை ஆசீர்வதிப்பாராக. அவர்களின் அந்த அன்பு எங்களுக்கு நன்கு கை கொடுத்து உதவியது. மிகவும் பசியாக பட்டணத்தைவிட்டு வெளியே கிராமங்களில் இருந்த சமயங்களில் நாங்கள் அவைகளைச் சாப்பிட்டு தண்ணீரைக் குடித்தோம்..

எல்லா தடவைகளையும் விட இந்த தடவை நாங்கள் பலத்த எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியதானது. சேராகாட் என்ற இடத்தில் நமது

பாஸ்டர் சகோதரன் என்.சாமுவேல் அவர்களை சில வாலிபர்கள் நாங்கள் கொடுத்திருந்த தேவனுடைய பிரசுரங்களைக் குறித்து விளக்கம் கேட்பது போல தந்திரமாக தங்கள் அறைக்குள் கூட்டிச் சென்று அடிக்க தங்களுக்குள் நிச்சயமாக ஆலோசிப்பதை நமது சகோதரன் ஞானமாக யூகித்து அவர்களுடைய துர் ஆலோசனைக்கு தன்னை தேவகிருபையால் விலக்கிக் காத்துக் கொண்டார்கள். கடந்த காலங்களில் கர்த்தர் இயேசுவுக்காக நன்கு அடிவாங்கிய அனுபவங்கள் எல்லாம் அவர்களுக்கு உண்டு. பேரிநாக் என்ற இடத்தில் தேவனுடைய பிரசுரங்களைக் கொடுத்துக் கொண்டிருந்த நமது பாஸ்டர் சகோதரன் ரோமில்டன் அவர்களை ஒரு வாலிபன் அடிக்கும்படியாக நெருங்கும்போது நமது வாகனங்கள் ஒன்றின் உரிமையாளரும், டிரைவருமான சகோதரன் மனோஜ் அவர்கள் ஓடிச் சென்று இடைமறித்து அவர்களுடைய மலைநாட்டுப் பாஷையில் அந்த முரட்டு வாலிபனோடு பேசி தேவகிருபையால் சகோதரனுக்கு எந்த ஒரு அசம்பாவிதமும் நேரிடாமல் காத்திருக்கின்றார்கள். பாகேஷ்வர் பட்டணத்திலிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள சாமா என்ற இடத்தில் நாங்கள் ஒரு மேல் நிலைப் பள்ளியில் சுவிசேஷ பிரதிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது ஒரு பொல்லாத ஆர்.எஸ். எஸ். கார மனிதனின் தூண்டுதலால் பள்ளி மாணவர்கள் எங்கள் தலையில் மண்ணைப் போட்டு, ஒரு துஷ்டப் பையன் என்னை நான் நின்று கொண்டிருந்த இடத்திற்கு அருகிலுள்ள ஆழமான பள்ளத்தில் தள்ளிவிடப் பார்த்தான். தேவகிருபை என்னைப் பாதுகாத்தது. அது குறித்து கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த இதழில் எழுதுகின்றேன்.

எங்களிடமிருந்து தேவனுடைய சுவிசேஷப் பிரதிகளைப் பெற்று ஆசை ஆவலோடு வாசிக்கும் மக்களின் சில புகைப்படங்களையும், எங்கள் ஊழியத்தின் பாதையில் நாங்கள் சந்தித்த மக்களோடு நமது ஊழியர்கள் ஆண்டவர் இயேசுவைப் பகிர்ந்து கொள்ளும் காட்சிகளையும் தனித்தனியான படங்களில் நீங்கள் காணலாம். அத்துடன், இமயத்தின் கடைக்கோடிப் பகுதி ஒன்றுக்கு சுவிசேஷத்துடன் சென்று கொண்டிருந்த நாங்கள் எங்கள் வாகனங்களை ஓரிடத்தில் நிறுத்தி இமயத்தின் நித்திய பனிமலைகள் எங்கள் முதுகுக்குப் பின்னால் இருக்கும்படியான ஒரு புகைப்படத்தையும் எடுத்துக் கொண்டோம். அதை நீங்களும் இந்தச் செய்தியில் காண்பீர்கள். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு எல்லா துதி, கனம், மகிமை உண்டாவதாக. ஆமென்.




चाउमीनसन्टर





DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970



சார்லஸ் சைமன் என்ற தேவ ஊழியர் தினமும் அதிகாலையில் நான்கு மணி முதல் எட்டு மணி வரையில் ஜெபிப்பது வழிக்கம். வெஸ்லி பிரசங்கியார் தினமும் இரண்டு மணி நேரம் ஜெபித்து வந்தார். அவர் அதிகாலை நான்கு மணிக்கே ஜெபிக்க எழும்பிவிடுவாராம். ''அவர் தன்னுடைய அலுவல்கள் எல்லாவற்றிற்கும் மேலாக ஜெபிப்பதையே முதன்மையாகக் கொண்டிருந்தார். அவர் தனது ஜெபத்தை முடித்து விட்டு வெளியே வரும்போது அவரது முகத்தில் தெய்வீக ஒளி வீசுவதை நான் கண்டதுண்டு'' என்று அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் கூறியிள்ளார். ஜாண் பிளட்சர் என்ற பரிசுத்தவான் தனது அறையின் சுவர்கள் முழுமையையும் ஜெபத்தின் சுவாசத்தால் மூடியிருந்தார். சில வேளைகளில் அவர் இரா மழுவதும் ஜெபிப்பார். எப்பொழுதும் ஜெபிப்பார். அடிக்கடி ஜெபிப்பார். மிகுந்த வாஞ்சையோடு ஜெபிப்பார். அவருடைய வாழ்க்கை முழுவதும் ஜெப வாழ்க்கையாகவே இருந்தது.

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

Coonoor Printing Press